janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththolaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 மே 29 - ஜூன் 04 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 08




## குடியிருப்போர்

ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு என்ற பெயரால் அல்லலுக்கு உள்ளாகி வரும் அவலம் புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு மட்டுமல்ல, கோவில் மனைகளில் குடியிருந்து >>>



ப 02

## மீமாம்சம்

இந்தியத் தத்துவங்களில் சற்று வினோதமானது மீமாம்சம் என்பது. இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் உருவானது. இதன் தொடர்பாக மூவர் உள்ளனர். ஒருவர் ஜைமினி என்பவர். மற்றவர்கள் குமரிலபட்டர் >>>



ப 05

## நடைமுறைக்கு வருமா?

124–ஏ தேசத்துரோக சட்டப்பிரிவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் கடந்த 11ஆம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு பின்வரும் உயர்வான உத்தரவை வழங்கியது. >>>



ப 06




# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற 12–வது மாநில மாநாடு

**தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் 12வது மாநில மாநாடு விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் மே மாதம் 20, 21, 22 ஆகிய தேதிகளில் கே.ஏ.பால் நாடார் ஸ்ரீரங்கம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.**

முதல் நாள் மே 20 அன்று பெருமன்ற கொடியை பேராசிரியர் தி.சு.நடராஜன் (தலைமைக் குழு உறுப்பினர், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்) ஏற்றிவைத்தார்.

அதிர்வு தமிழிசை இயக்கத்தின் பறை இசை முழக்கத்துடன் மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கியது. முதல் நிகழ்வாக ஜீவா – நாவா நுழைவாயிலில் பெருமன்றம் முன்னோடிகள், ஆளுமைகளின் படங்கள் திறக்கப்பட்டன. பின்பு மாநாட்டு அரங்கில் வைக்கப்பட்டிருந்த புத்தக, தொல்லியல், ஓவிய, புகைப்பட, சுற்றுச்சூழல் கண்காட்சிகள் திறக்கப்பட்டன.

நியூ செஞ்சுரி புத்தக கண்காட்சியை ஸ்ரீ எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி முதல்வர். கணேஷ் ராம் திறந்து வைத்தார், ஓவியக் கண்காட்சியை குறிஞ்சிச்செல்வர் கொ.மா.கோதண்டம் திறந்துவைத்தார், சுற்றுச்சூழல் கண்காட்சியை இரா.முத்தரசன் திறந்துவைத்தார், தொல்லியல் கண்காட்சியை வி.ரவிச்சந்திரன் (சிப்காட் மாவட்ட வருவாய் அலுவலர்) தொடங்கி வைத்தார். தனுஷ்கோடி ராமசாமி நினைவு அரங்கத்தில் குத்துவிளக்கு ஏற்றி உள்ளரங்கு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டது. குத்துவிளக்கை தனுஷ்கோடி ராமசாமி துணைவியார் திருமதி. சரஸ்வதி, கவிஞர் ஆனந்தி, பேராசிரியர் பொ. நா.கமலா, வரவேற்புக் குழு தலைவர் எம்.ஏ .சி.எஸ். ரவீந்திரன் ஏற்றிவைத்தனர்.

மாநாடு தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன் தொடங்கியது, அடுத்ததாக மன்ற பாடல் இசைக்கப்பட்டது. இந்த மாநாட்டு வரவேற்புக் குழு செயலாளர் மருத்துவர் த.அறம் அவர்கள் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார், வரவேற்புக் குழு தலைவர் எம்.ஏ.சி.எஸ். ரவீந்திரன் முன்னிலை வகித்தார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ.அழகிரிசாமி வரவேற்புரை நல்கினார். மாநாட்டின் தொடக்க உரையை திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் நிகழ்த்தினார். கலை இலக்கியப் பெருமன்றம் பிறந்தது, வளர்ந்தது, செல்ல வேண்டிய பாதை குறித்து விரிவாக எடுத் துரைத்தார். தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இன்றைய இந்திய போக்குகள் எவ்வாறு ஜாதி, மத, மொழி பிரிவினைகளை ஏற்படுத்தி, பொருளாதார முறைகேடுகள் செய்கின்றன என்பதை விவரித்தார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் மற்றும் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். ரகுராமன் ஆகியோர் வாழ்த்துரை நல்கினர். இந்த நிகழ்வில் ‘எஸ்.ஆர். நாயுடு வாழ்வும் பணியும்‘ என்னும் நூல் பீட்டர் அல்போன்ஸ் அவர்களால் வெளியிடப்பட்டது, ஸ்ரீ.எஸ். ஆர்.என்.எம் கல்லூரி ஆட்சி மன்றக்குழு உறுப்பினர், பெருமாள்சாமி, மற்றும் காசி விஸ்வநாதன் பெற்றுக்கொண்டனர். மாநாட்டு மலரை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வெளியிட இரா.முத்தரசன், ஜி.பழனிச்சாமி பெற்றுக்கொண்டனர். பொ. லிங்கம் நன்றியுரையாற்றினார்.

பிற்பகலில் நடந்த அமைப்பு நிலை மாநாட்டிற்கு சொக்கலிங்கம் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார், இந்த நிகழ்வை கவிஞர் கண்மணிராசா வரவேற்றார். தனது தொடக்க உரையில் கவிஞர்.பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் விரிவாக இன்றைய இலக்கியப் போக்குகள் குறித்து உரையாற்றினார், கலாநிதி நா.ரவீந்திரன் இலங்கையின் சூழல்கள் குறித்து உரை நிகழ்த்தினார். அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச்செயலாளர் பொன்னீலன் அவர்கள் ஜீவாவின் நோக்கம், பெருமன்ற செயல்பாடுகள் குறித்து வாழ்த்துரையில் குறிப்பிட்டார். த.மு.எ.க.ச பொதுச் செயலாளர் ஆதவன் தீட்சண்யா தனது வாழ்த்துரையில் இன்றைய கலை இலக்கியச் சூழல், மதவாத ஆபத்துகள், இணைந்து செல்ல வேண்டிய அவசியம் குறித்து உரை நிகழ்த்தினார். அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ரவீந்திரநாத் போர் எவ்வாறு இலக்கியத்தை பாதிக்கிறது. போரில்லா உலகை கட்டியமைக்க இலக்கியம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டார். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம் மாநிலச் செயலாளர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்நிகழ்விற்கு டி.எஸ்.நடராஜன் நன்றியுரை வழங்கினார். இரவு மக்கள் கலை விழா நடைபெற்றது.

அரியலூர் ஜீவா அம்பேத்கர் நாட்டுப்புற கலை ஞர்களின் சங்கம், சாத்தூர் சூர்யா சிலம்பாட்டக் கூடமும் இணைந்து ஊர் அழைப்பாக சாத்தூர் முக்ராந்தல் இடத்திலிருந்து ஊர்வலம் தொடங்கியது. இந்த ஊர்வலத்தை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோவில் குணா துவக்கி வைத்தார். கோலாட்டம், சிலம்பாட்டம் ஆடிக்கொண்டு மக்கள் கலை விழா நடக்கும் அரங்கிற்கு ஊர்வலம் நகர்ந்தது. மக்கள் கலை விழா தொடங்கியது.

மாநாட்டின் இரண்டாவது நாளான மே 21 அன்று காலை அமர்வு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற கொள்கை அறிக்கை முன்வைத்தல் உரையாடல் என்ற அமர்வாக தொடங்கியது. இதற்கு மாநிலச் செயலாளர் பெ.அன்பு தலைமை தாங்கினார், கொள்கை அறிக்கையை மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.கே. கங்கா முன்வைத்தார். மாநாட்டுப் பிரதிநிதிகள் ஒவ்வொரு மாவட்டமாக தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர். இந்த நிகழ்வை எல்லை சிவக்குமார், கலியமூர்த்தி, பிரபாகரன் ஒருங்கிணைத்தனர்.

மே 21 பிற்பகலில் பண்பாட்டு அரங்கு ‘தற்கால தமிழ் அசைவுகள்’ என்ற தலைப்பில் நடந்தது. முனைவர் பா.ஆனந்தகுமார் தலைமை ஏற்று நெறியாள்கை செய்தார். முனைவர் நா.ராமச்சந்திரன் வரவேற்புரை நல்கினார். சண்முகம் சரவணன் முன்னிலை வகித்தார். ‘தற்கால தமிழ் அசைவுகள் இலக்கியத்தில்’ என்னும் தலைப்பில் முனைவர்.வீ.அரசு ‘இன்றைய இலக்கியப் போக்குகள்’ குறித்து விரிவாக உரை நிகழ்த்தினார். ‘தற்கால தமிழ் அசைவுகள்அரசியலில்’ என்னும் தலைப்பில் சி.மகேந்திரன் உரை நிகழ்த்தினார். ‘தற்கால தமிழ் அசைவுகள் பாலியல் சமத்துவத்தில்’ என்னும் தலைப்பில் மருத்துவர் சாந்தி உரை நிகழ்த்தினார். ‘தற்காலத்தமிழ் அசைவுகள் ஊடகத்தில்’ எனும் தலைப்பில் முனைவர் ந.முருகேச பாண்டியன் உரை நிகழ்த்தினார். ‘தற்காலத் தமிழ் அசைவுகள்சுற்றுச்சூழல்’ எனும் தலைப்பில் சூழலியலாளர் நக்கீரன் உரையாற்றினார். அ.கி.அரசு இந்நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

மே 22 காலை அமர்வு ‘பொதுச்செயலாளர் அறிக்கை முன்வைத்தல் உரையாடல்’ என்பதாக இருந்தது. இந்த அமர்வுக்கு வை.செல்வராஜ் தலைமை வகித்தார், முனைவர்.கமலா முன்னிலை வகித்தார், அறிக்கையை பொதுச் செயலாளர் இரா.காமராசு முன்வைத்து உரையாற்றினார். நிதிநிலை அறிக்கையை ப.பா. ரமணி முன்வைத்தார். மாவட்ட வாரியாக மாநில மாநாட்டு பிரதிநிதிகள் இந்த அறிக்கையின் மீதான தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர். இந்த அமர்வில் புதிய மாநில குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதை மாநில மாநாட்டு பிரதிநிதிகள் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுத்தனர்.

பிற்பகலில் நடைபெற்ற புதிய மாநிலக்குழு கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. இதில் பொதுச்செயலாளராக த.அறம், தலைவராக சி.சொக்கலிங்கம், பொருளாளராக ப.பா.ரமணி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநாட்டு நிறைவுரையை இரா.முத்தரசன் வழங்கினார், நன்றியுரையை த.அறம் வழங்கினார். மாநாடு இனிதே நிறைவுற்றது.

## அறிவிப்பு

நியூஸ்பிரிண்ட் பேப்பர் விலை உயர்வு மற்றும் பல்வேறு கட்டண உயர்வுகளால் தவிர்க்க முடியாத நிலையில் ஜனசக்தியின் விலை கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது. சந்தாதாரர்களும், ஏஜெண்டுகளும் தொடர்ந்து ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | - ரூ.7500.00 |
| ஆண்டு சந்தா | - ரூ.750.00 |
| தனிப்பிரதி | - ரூ.15.00 |

பொது மேலாளர்
ஜனசக்தி



கட்சிக் கடிதம்

# கோவில் மனையில் குடியிருப்போர்!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**ஏழை, எளிய மக்களின் குடியிருப்புகள் ஆக்கிரமிப்பு என்ற பெயரால் அல்லலுக்கு உள்ளாகி வரும் அவலம் புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு மட்டுமல்ல, கோவில் மனைகளில் குடியிருந்து வருபவர்களுக்கும் மிகக் கடுமையான நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.**

தமிழ்நாட்டில் நிரம்ப கோயில்கள் உள்ளன. அவைகள் வெறும் கட்டிடங்களாக மட்டுமல்லாமல், இக் கோவில்களுக்கு பெருமளவில் சொத்துக்களும் உள்ளன.

இவற்றின் ஒரு பகுதி குடிமனைகளாகவும், மற்றொரு பகுதி சாகுபடி நிலங்களாகவும் உள்ளன. இவை மட்டுமின்றி காணிக்கை என்ற பெயரில் பக்தர்கள் வழங்கும் நேரடி நிதி வருவாயும் உள்ளது.

இவையன்றி விலைமதிக்க முடியாத ஆபரணங்கள், மரகதலிங்கம் போன்றவைகளும் ஆலயத்திற்கு சொந்தமாக உள்ளது. தமிழக சிற்பிகளால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன.

மனை நிலம், சாகுபடி நிலம், ஆபரணங்கள், சிற்பங்கள், நேரடி நிதி வருவாய் இவைகள் அனைத்தையும் பாதுகாக்கவும் எந்த ஒரு தனிப்பட்ட நபரும் அபகரிக்கக் கூடாது, பொதுச் சொத்தாக பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்துடன், தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை என்று தனித்துறை உருவாக்கப்பட்டு, அதற்கான தனி அமைச்சரையும் நியமனம் செய்து சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

தற்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக மாண்புமிகு சேகர்பாபு அவர்கள் அனைவராலும் பாராட்டத்தக்க முறையில் செயல்பட்டு வருகின்றார்.

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் கோவில்களுக்குரிய சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கோவில்களுக்கு சொந்தமான வெண்கலத்தால், ஐம்பொன்களால் மற்றும் கற்சிலைகள் ஏராளமாக உள்ளன. இவைகளை பாதுகாப்பதற்கு என தனி அருங்காட்சியகங்களும் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இவ்வளவு பாதுகாப்புகளையும் மீறி சிலை திருட்டுகள் நடைபெறுவதும், அத்தகைய சிலைகளை வெளி நாட்டிற்கு கடத்தப்பட்டு, விற்று பெரும் தொகைகள் கை மாறுவதும் தொடர்ந்து நடைபெற்றுதான் வருகின்றன. தமிழக ஆலயங்களுக்கு சொந்தமான சிலைகள் கடத்தப்பட்டு, அமெரிக்கா, லண்டன் என பல வெளிநாடுகளில் விற்கப்பட்டு வருகின்றது. சிலை கடத்தல் கும்பல் தொடர்ந்து செயல்பட்டு வருவதையும், சிலைகள் கடத்தப்படுவதை தடுக்கவும் தமிழகத்தில் தனி காவல்துறையே செயல்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் இருந்த சிலைகள் மீட்கப்பட்டும் உள்ளன. இவ்வாறு ஆலயங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியோடு அரசு செயல்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.

குடியிருப்போர் கோவில்களுக்குரிய மனைகளில் பன்னெடுங்காலமாக, தலைமுறை, தலைமுறையாக குடியிருந்து வருகின்றனர் மக்கள். அவர்களும் தெய்வ பக்தர்களே.

அவர்கள் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில், தங்களது சொந்தப் பொறுப்பில் வீடுகள் அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

மண்சுவர் கூரை வீடுகளும், ஓட்டு வீடுகளும் மற்றும் கட்டிடங்களாகவும் கட்டி வாழ்ந்து வருகின்றனர்.

அடிமனை மட்டும் கோவிலுக்கு சொந்தம். அத்தகைய மனைகளில் அவர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் வீடுகள் கட்டியுள்ளனர் மற்றும் கட்டிடங்களும் கட்டிடத் தொழில் செய்தும் வருகின்றனர்.

அடிமனை அனுபவத்திற்கு ஆண்டுதோறும் பகுதி செலுத்தி வருகின்றனர். இத்தகைய பகுதி என்பது (மனை வாடகை) மிகக் குறைந்த அளவே இருந்து வந்தது. இவை மட்டுமின்றி, அடிமனையை மற்றவர்கள் பெயரில் மாற்றி அமைத்துக் கொள்வதற்கான உரிமையும் வழங்கப்பட்டு இருந்தது. ஏறத்தாழ பட்டா நிலத்திற்கு உள்ள உரிமை போன்று கோவில் மனை தாரர்களுக்கும் வழங்கப்பட்டு உரிமையாளர்களாகவே இருந்து வந்தனர்.

இத்தகைய முறை இருந்த காரணத்தால் கோவில் சொத்திற்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படவில்லை. கோவில் நிர்வாகத்தின் அனுமதியுடன்தான் தங்களது குடியிருப்புகளை அதாவது வீடுகளை திருத்தி அமைத்துக் கொண்டனர்.

கூரை வீடுகள், ஓட்டு வீடுகளாக அல்லது கட்டிடங்களாக தங்களது சொந்தப் பொறுப்பில் கட்டிக்கொண்டனர்.

கோவிலுக்கும் ஆண்டுதோறும் தவறாமல் பகுதிகளையும் செலுத்தி வந்ததால், வருமானம் குறைவின்றி நல்ல முறையில் ஆலயங்களுக்கு கிடைத்து வந்தது. கோவில்களில் ஒரு கால, இரு கால அல்லது முக்கால பூஜைகளும் தொய்வின்றி நடந்து வந்தன.

இத்தகைய வருமானத்தின் மூலம் ஆண்டுதோறும் திருவிழாக்கள், தேர்த் திருவிழாக்கள், தெப்ப விழாக்களும் மிகச் சிறப்பாகவே நடைபெற்று வந்தன. இத்தகைய விழாக்களில் கோவில் மனையில் குடியிருப்பவர்களும் நல்லதொரு ஒத்துழைப்பையே வழங்கி வந்தனர்.

குடியிருப்பவர்களில் மிகப் பெரும்பாலோர் சொந்த நிலம் இல்லாத ஏழை, எளிய மக்களாக உள்ளனர்.

சிறு விவசாயிகள் – ஓரளவிற்கு வசதி உள்ளவர்களும் குடியிருந்து வருவது மட்டுமின்றி, சிறு கடைகள், மளிகைக் கடை, ஜவுளிக்கடை, நகைக்கடை, ஹோட்டல்கள், டீ கடைகள், பழக்கடைகள், பூ கடைகள், அச்சகங்கள் சிறு, சிறு தொழில்களும் நடத்தி வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் கோவிலுக்குரிய பகுதியைச் செலுத்தி வந்தனர். இவைகள் மிக சுமூகமாகவே நடைபெற்று வந்தன. இந்து சமய அறநிலையத் துறைக்கும், இவர்களுக்கும் எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என மத வேறுபாடுகளின்றி இந்து சமய அறநிலையத்துறை யோடும், கோவில் நிர்வாகத்துடனும் மிக இணக்கமாக சுமூக சூழல் நீடித்து வந்தது. கோவில் திருவிழா, தேர் திருவிழா, தெப்பத் திருவிழா என நடத்தப்படும் போது இவர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் தான் விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வந்தன.

தமிழகத்தில் பல்வேறு நகரங்களில் வர்த்தகர்களுக்கு என்று திருவிழாக் காலங்களில் தனி மண்டகப்படி என்று நடைபெற்று வருவது இன்றும் நடைபெற்று வருகின்றன.

**முரணற்ற சுமூக சூழலை 2001 ஆம் ஆண்டிற்கு பிறகு அதிமுக ஆட்சியில், பகுதி என்ற நிலையை மாற்றி, சதுர அடி கணக்கில் வாடகை என நிர்ணயம் செய்யப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக குடியிருப்பவர்கள், வணிகம் செய்பவர்கள், தொழில் நடத்துவோர் என அனைவரும் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.**

**ரூ.500, 1000ம் செலுத்தி வந்தவர்களுக்கு அதிமுக ஆட்சி நிறைவேற்றிய வாடகை நிர்ணய சட்டத்தின் மூலம் ஆண்டுக்கு பல ஆயிரம் அல்லது லட்சம் ரூபாய் என செலுத்திட வேண்டிய கட்டாயத்திற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.**

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஒவ்வொரு பயனாளிக்கும், பல லட்சங்கள், கோடிகள் என பெருமளவில் பாக்கி உள்ளது. அவர்களால் இப்பெரும் தொகையை செலுத்துவது என்பது சாத்தியமல்ல, நடைமுறைக்கு சற்றும் பொருந்தாத சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்திட முனைந்த காரணத்தால் பயனாளிகளுக்கும் – நிர்வாகத்திற்கும் கடுமையான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் கோவில் மனையில் குடிருப்பவர்களிடம் பதட்டம் நிலவுகின்றது; அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

அறநிலையத்துறையின் சார்பில் பாக்கித் தொகைகள் முழுவதுமாக கட்டப்பட வேண்டும், இல்லையெனில் வீட்டை காலி செய்திட வேண்டும் என்று அச்சுறுத்தப்படுகின்றனர். பயனாளிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்படுகின்றது. காலி செய்திட வேண்டும் என்று வீடுகள், தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் பூட்டப்பட்டு சீல் வைக்கப்படுகின்றது.

தற்போது நடைபெற்று வரும் திமுகவின் தலைமையிலான நல்லாட்சிக்கு களங்கம் ஏற்படுத்திட வேண்டும் என்கிற உள்நோக்கத்துடன் பல இடங்களில் அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

இத்தகைய நிலையினை போக்கிட வேண்டும். அறநிலையத் துறைக்கும் – பயனாளிகளுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாட்டை போக்கிடவும், சமூக சூழலை எட்டிட வேண்டும், பழைய பகுதி முறையை மீண்டும் பின்பற்றி சுமுகமான சூழலையும், கோவிலுக்குரிய வருமானத்தையும் உறுதிப்படுத்திட வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு சேகர்பாபு அவர்களிடம் முறையிட்டோம்.

அமைச்சர் அவர்களும் எதார்த்த நிலைமைகளை கவனத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

அனைத்து தரப்பு மக்களின் நலனில் அக்கறையுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நமது கோரிக்கையில் உள்ள நியாயங்களையும், எதார்த்த உண்மைகளையும் கவனத்தில் கொண்டது மட்டுமல்லாமல், நல்லதொரு தீர்வை எட்ட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தலைமைச் செயலாளர் திரு இறையன்பு அவர்கள் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளார்கள்.

அரசின் இம் முயற்சியும், முடிவும் வரவேற்கத்தக்கது.

உயர்மட்ட குழுவிற்கு நமது கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கக்கூடிய முறையில் மாநில அளவிலான மாநாடு சென்னையில் வரும் 19.6.2022ல் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு சேகர்பாபு அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென நாம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இசைவு தெரிவித்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.

இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகளை மாநிலத் தலை வர் வி.அ.பாலசுப்பிரமணியம், பொதுச்செயலாளர் வை.சிவ புண்ணியம் முன்னாள் எம்.எல்.ஏ., பொருளாளர் எஸ்.ஏழுமலை மற்றும் நிர்வாகிகள் சிறப்புற செய்து வருகின்றனர்.

அனைத்து மாவட்டங்களிலும் கோவில் மனையில் குடியிருப்போர் மற்றும் பயனாளிகளிடம் மாநாடு நடப்பது குறித்து எடுத்துக் கூறி, அவர்கள் அனைவரையும் மாநாட்டில் பங்கேற்க செய்திட, களப்பணிகளை மேற்கொள்ள தோழர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**


**தோழமைமிக்க,**

**இரா.முத்தரசன்**

## நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்தும் பெருநகர சென்னை மாநகராட்சி

# அதிகாரிகளின் போக்கை சீரமைத்திடுக!

## எஸ். ஏழுமலை



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டச் செயலாளரும், மாநில நிர்வாகக்குழு உறுப்பினருமான எஸ்.ஏழுமலை அவர்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:**

நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்தும் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் போக்கை சீரமைத்தல், ஏழைகள், வீடற்றவர்கள், அன்றாடங்காட்சிகள் ஆகியோரை பலியிட்டு சிங்காரச் சென்னை உருவாக்கும் திட்டத்தை மறு பரிசீலனை செய்து சீரமைத்தல், கட்டி முடிக்கப்பட்ட கட்டங்களுக்கு நகரமைப்பு சட்டங்களிலிருந்து விலக்கு அளித்து வரன்முறை செய்தல், நகரமைப்பு சட்டத்தின் நிபந்தனைகளை எளிமையாக்குதல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.

1) மனித குல வரலாற்றில் ஆதி முதல் இன்றைய தேதி வரை அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவையாக இருந்து வருவது உணவு, உடை, உறைவிடம் ஆகியவையாகும். உணவு உடை ஆகிய தேவைகளில் நாடும் நாட்டு மக்களும் தன்னிறைவு அடைந்த போதிலும் உறைவிடம் எனும் தேவையில் தன்னிறைவு அடையாத நிலையே தொடர்கிறது. சென்னை போன்ற பெருநகர மாநகராட்சியில் வசிக்கும் மக்களில் 10 சதவீத மக்கள் மட்டுமே சொந்த வீடு எனும் இலக்கை எட்டியுள்ளனர். 100 சதவீத மக்களும் மேற்கண்ட இலக்கை எட்ட இயலாமைக்கு பெருகி வரும் மக்கள் தொகை, பொருளாதார சமத்துவமின்மை, வேலை வாய்ப்பு இன்மை, கிராம மக்களின் நகரத்தை நோக்கிய நகர்வு, வீட்டு மனைகளின் அசுரத்தனமான விலையேற்றம் ஆகியவை காரணங்களாக உள்ளன. மேற்கண்ட காரணங்களை தாண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் வீடு வாங்க முயலும் போது நகர் மற்றும் ஊரமைப்பு சட்டமும், அதை தவறாக பயன்படுத்தி சுயநலம் போற்றும் அதிகாரிகளின் நடவடிக்கைகளும் மேலும் பெரும் தடையாக இருக்கிறது.

2) வரலாற்று சிறப்புமிக்க சென்னை மாநகரத்தை சீர்மிகு சென்னை, சிங்காரச் சென்னை, எழில்மிகு சென்னை, ஏற்றமிகு சென்னை, குப்பைகள் இல்லாத சென்னை, கழிவு நீர் ஓடாத சென்னை, சாக்கடை குழாய்கள் கசியாத சென்னை, சாக்கடை தண்ணீர் குடிநீரில் கலக்காத சென்னை, சுத்தமான குடிநீர் குடிக்கும் மக்களைக் கொண்ட சென்னை எனும் மாட்சிமை மிகுந்த சென்னையை உருவாக்க ஏராளமான சட்டங்கள் உள்ளன. அந்த சிறப்பு மிகுந்த சென்னையில் கட்டப்படும் வீட்டு அமைப்புகள் நேர்த்தி மிகுந்ததாக அமையப்பெற 1971ம் வருட நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களும் உள்ளன.

3) அந்த சட்டங்கள் இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொதுவானதாகும். அந்த பொதுவான சட்டத்தை அறிந்தும் அறியாமலும் மீறுகின்ற ஏழை, எளியவர்கள், வசதி குறைந்தவர்கள், வலிமையற்றவர்கள் என குறிப்பிடப்பட்ட சிலரின் மீது மட்டும் பாய்கிறது. அதே போன்று மேற்கண்ட சட்டத்தை மீறுகின்ற வேறு சிலரின் மீது அனைவருக்கும் பொதுவான அந்த சட்டம் பாய மறுப்பதும் அவர்களை பார்த்து ஒதுங்குவதுமாக இருப்பது மேற்கண்ட சட்டத்தின் பொதுவான தன்மைக்கு விரோதமானதாகும்.

4) பழமையின் அடையாளங்களை இப்போதும் சிதையாது தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கும் குறிப்பாக வட சென்னை பகுதியில் அதை சிதைக்கும் நகர் அமைப்பு சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். கட்டடத்தின் நான்கு பக்கங்களிலும் இடம் விட்டு கட்ட வேண்டும் எனும் விதி புறநகர்களில் மாளிகை வாசிகளுக்கு பொருத்தமானதாக இருக்கலாம், ஆனால் அது பழமையான மக்கள் நெருக்கம் மிகுந்த தொழிலாளர்கள் வாழும் வட சென்னை பகுதிக்கு பொருத்தமாக இருக்காது. வீட்டின் நான்கு பக்கங்களிலும் குறிப்பாக வீட்டின் முன்பகுதியில் இடம் விட்டு (ஐந்து அடிகள்) கட்ட வேண்டும் எனும் விதியை வட சென்னையில் எவரும் கடைப்பிடிக்கவில்லை. அங்ஙனம் கடைப்பிடிக்காத ஒரு சிலரை மட்டும் கட்டுப்படுத்தும் பாகுபாடு கொண்ட சட்டமாக நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் இருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்தும் சுயநலம் கருதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அதிகாரிகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

5) ஒரு பொதுவான நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட சட்டத்தை பாகுபாடின்றி, அதை மீறுகின்ற அனைவரின் மீதும் பிரயோகிக்காமல் ஒரு குறிப்பிட்ட சிலரின் மீது மட்டும் பிரயோகிப்பது மேற்கண்ட சட்டத்தின் நோக்கத்தை சிதைக்கச் செய்யும் செயலாகும். அந்த சட்டங்களின் பயன்களும், விளைவுகளும் வெளிப்படை தன்மையற்று கிடக்கிறது. அந்த சட்டம் கீழ் நிலை அதிகாரிகளால் சுய லாபத்துக்காக தவறான முறையில் பிரயோகிக்கப்படுகிறது.

6) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1971 வருடத்திய நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை மீறிய வகையில் தான் 99 சதவீத வீடுகள் கட்டப்பட்டு வருகிறது எனும் நிலையில் அந்த நிலைப்பாடுகளின் மீது மௌனம் காக்கும் மேற்கண்ட சட்டமும் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களும் அந்த சட்டத்தை மீறிய ஒரு சதவீத மக்களை மேற்கண்ட சட்டத்தின் பிரிவுகளை காட்டி **Stop Working, Lock Seal, Demolition, Deoccupation** எனும் கடுமையான தலைப்புகள் கொண்ட பெயர்களில் நோட்டீஸ் அனுப்பி அச்சுறுத்துவது அந்த சட்டம் ஒருதலை பட்சமானது என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக திகழ வைக்கப்படுகிறது.

7) மேலும் மேற்கண்ட தலைப்பிலான நோட்டீஸ்கள் வீடு கட்டிக் கொண்டிருக்கும் போது வழங்கப்படாமல், ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆன வீடுகளுக்கும், கட்டடங்களுக்கும் வழங்கப்படுகிறது. வீடு கட்ட தொடங்கும் போதும், வீடு கட்டிக் கொண்டிருக்கும் போதும் அந்த சட்டங்களும், அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளும் எங்கே போய் ஒளிந்து கொண்டார்கள், எதனால் ஒளிந்து கொண்டார்கள் எனும் வினாவிற்கு தெரிந்த விடையை வெளிய சொல்ல முடியாத நிலை நிலவுகிறது.

8) வீடு கட்டி முடிக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பின்பு மேற்கண்டவாறான நோட்டீசுகளால் வீட்டு உரிமையாளர்கள் சொல்லொண்ணா துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்களின் நிர்வாகத்தின் சட்ட பூர்வமான, கறாரான நடவடிக்கை இன்மையால் திட்ட மற்றும் கட்டட அனுமதியின் படி கட்டடம் கட்டாமல் அதை மீறியும் கட்டலாம், அது தவறாக கருதப்பட மாட்டாது என்பது பெரும்பாலான மக்களால் நம்புவதற்கு காரணமாக இருக்கிறது. அங்ஙனமே தான் மக்கள் நம்பிக் கொண்டும், வீடு கட்டிக் இருக்கிறார்கள்.

9) ஏழைகள், வீடற்றவர்கள், அன்றாடம் காய்ச்சிகள் உள்ளிட்டோர்கள் வசிப்பிடத்தை சட்டத்தின் துணை கொண்டு அப்புறப்படுத்துவது மனிதாபிமானமற்ற செயலாகும். மேற்கண்டவர்களின் நலன்களையும் உயிரையும் பலியிட்டு சிங்காரச் சென்னை உருவாக்கும் சட்ட திட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

எனவே, கீழ்காணும் நடவடிக்கைகளை மக்கள் நலன் கருதி, மக்கள் நலஅரசு மேற்கொள்ளுவது அவசியமிக்கதாகும்.

1) பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டட அனுமதியை கடைப்பிடிக்காத 95 சதவீதத்தினரை விட்டு விட்டு சில சதவீதத்தினரை மட்டும் சட்டத்தின் கொடிய நிபந்தனைகளை காட்டி அச்சுறுத்துவதால் சிங்காரச் சென்னையை உருவாக்க முடியாது என்பதால் நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தை தளர்த்தி எளிமைப்படுத்தப்படுத்துவதுடன், மேற்கண்டவாறான கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை/கட்டடங்களை காலம் தாழ்த்தாமல் வரன்முறை செய்திட வேண்டும்.

2) பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டட அனுமதியின் படி சிறிதும் மீறாமல் வீடு கட்ட வேண்டும் எனும் விழிப்புணர்வை கட்டட உரிமையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு உருவாக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்,

3) பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டட அனுமதியை கறாராக நடைமுறைப்படுத்தப்பட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல, பகுதி மற்றும் வார்டு பொறியாளர்கள் சுயநலம் தவிர்த்த தங்களது சட்டபூர்வமான பணிகளை ஆற்றவும், அவ்விதமான பணிகள் அவர்களால் மேற்கொள்ளப்படுவதை மேலாய்வு செய்து கண்காணிக்க வேண்டும்,

4) கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கு **Stop Working, Lock Seal, Demolition, Deoccupation** வழங்குவதை தவிர்த்து, வருமுன் காப்போம் எனும் நிலையில் கட்டடம் கட்டத் தொடங்குகின்ற அல்லது கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டடங்கள் மற்றும் வீடுகளுக்கு **Stop Working, Lock Seal, Demolition, Deoccupation** ஆகிய நோட்டீசுகள் வழங்கவும், வழங்கும் முன் காரணம் கேட்பு நோட்டீசுகள் வழங்கப்பட வேண்டும்

5) மாடமாளிகையையும், அதனருகினில் ஓலை குடிசையும் நகரங்களில் தவிர்க்க முடியாது. அம்பானிகளையும், அதானிகளையும் வைத்து சென்னை மாநகரை அலங்கரிக்க முடியாது. இரண்டும் இணைந்தே சிங்காரச் சென்னையை உருவாக்க முடியும். ஆதலால் ஏழைகள், வீடற்றவர்கள் ஆகியோர்களின் வசிப்பிடத்தையும், அரசு நிலங்களில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கு மாற்று வசிப்பிடத்தையும் உறுதி செய்த பின்னரே அவர்களை சட்டத்தின் துணை கொண்டு காலி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மற்றும் அதற்கு இயைந்ததாக நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும்.

6) வழங்கப்பட்ட திட்ட மற்றும் கட்டட அனுமதியை மீறி கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் மற்றும் கட்டிடங்களை வரையரை செய்து ஆணை பிறப்பித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலங்கள் பகுதிகள் மற்றும் வார்டுகளில் பணியாற்றும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர்களின் சுரண்டல்களிலிருந்து வீட்டு உரிமையாளர்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7) பெருநகர சென்னை மாநகராட்சியில் வட சென்னை பகுதி பழமையான நகரமாகும். சேப்பாக்கம் கலச மகால், உயர் நீதிமன்ற கட்டடங்களின் பழமையை பாதுகாப்பது போல் வடசென்னையின் பழமையை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். சிங்காரச் சென்னை திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் எனும் பெயரில் நகர மற்றும் ஊரமைப்பு சட்டத்தின் மூலம் பழமையில் சீர்குலைவுகள் உருவாகவும், அந்த சட்டம் பாகுபாடாக நடைமுறைப்படுத்தப்படவும் அனுமதிக்கக் கூடாது என்பதை அடிப்படையாகக் கொண்டு ஆணைகள் வழங்கப்பட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.

தொடர்புக்கு ; **94441 27498**

# உலக சுகாதார அமைப்பின் விருது பெற்ற ஆஷா பணியாளர்களை நிரந்தரப்படுத்திடுக!

## ஏஐடியூசி-ன் அகில இந்திய ஆஷா பணியாளர்கள் சம்மேளனம் கோரிக்கை



அகில இந்திய ஆஷா பணியாளர்கள் சம்மேளனத்தின் தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

2022ஆம் ஆண்டிற்கான ‘உலக மருத்துவ முன்னணியினர்’ விருதை உலக சுகாதார அமைப்பு ஆஷா பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது. சர்வதேச அளவில் ஐந்து அமைப்புகளோடு சேர்த்து ஆஷா பணியாளர்களுக்கு இந்த விருது கூட்டாக வழங்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதாரத்துறை சேவையில் ஆஷா பணியாளர்களின் மகத்தான, ஒப்பிட்டுச் சொல்லமுடியாத பங்களிப்பை உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரம் மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது.

இந்தியாவில் உள்ள சுமார் 10 லட்சம் ஆஷா பணியாளர்களுக்கு ஏஐடியூசி–ன் அகில இந்திய ஆஷா பணியாளர்கள் சம்மேளனம் இதயப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது; ஆஷா பணியாளர்களுக்கு இந்த விருதை வழங்கியுள்ள உலக சுகாதார அமைப்புக்கு ஏஐடியூசி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் சுமார் 10 லட்சம் ஆஷா பணியாளர்கள் நிரந்தர தொழிலாளர்களாகக் கூட அங்கீகரிக்கப்படவில்லை என்ற உச்சகட்ட முரண்பாடு இந்தியாவில் ஓங்கி ஒலித்த வண்ணம் உள்ளது. மாதம் ஒன்றுக்கு தலா ரூ.2000 மற்றும் சொற்பமான ஊக்கத்தொகையைத் தவிர அவர்களுக்கு ஊதியம் என்று எதுவும் வழங்கப்படுவதில்லை. பத்தாண்டு காலமாக, குறைந்தபட்ச ஊதியம் மற்றும் பணி நிரந்தரம் குறித்த அவர்களின் கோரிக்கை அரசாங்கத்தின் செவிட்டுக் காதுகளில் விழவில்லை.

ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு ஆரம்ப சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதிபடுத்தியதற்காகவும், சுகாதார கட்டமைப்பில் மக்கள் சமூகத்தை இணைப்பதில் முக்கிய பங்காற்றியதற்காகவும் ஆஷா பணியாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுவதாக உலக சுகாதார அமைப்பு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், உலக சுகாதார கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான மகத்தான பங்களிப்பு, பிராந்திய அளவிலான சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் உறுதிப்பாடு ஆகியவை ஆஷா பணியாளர்கள் மேற்கொள்ளும் சுகாதாரப் பணிகளின் நிரந்தரத் தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

பெருந்தொற்று காலத்தில் ஆஷா பணியாளர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த பணிகள், மகப்பேறு கால சேவைகள், குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு திறனூட்டல் நடவடிக்கைகள், சமூக சுகாதார சேவைகள், மகப்பேறு – சிசு இறப்பு விகித குறைப்புக்கான பங்களிப்பு ஆகியவற்றை ஒன்றிய, மாநில அரசாங்கங்கள் தொடர்ந்து பாராட்டி வருகின்றன. ஆனால், பாராட்டு மொழிகள் பயனளிக்கும் முன்னுதாரணங்களாக நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. அத்தகைய சிறப்பான முன்னுதாரணங்கள் தற்போது நிகழ்த்தப்படவில்லை என்றால், ஆஷா பணியாளர்களின் வாழ்க்கை நிச்சயமற்ற தன்மையுடன், இருள் படர்ந்ததாகவே தொடரும்.

தேசத்திற்கு பெருமை சேர்த்த ஆஷா பணியாளர்களின் சேவைக்கு உகந்த, சிறந்த வெகுமானத்தை ஒன்றிய அரசு அறிவித்திட வேண்டும் என்று ஏஐடியூசி–ன் அகில இந்திய ஆஷா பணியாளர்கள் சம்மேளனம் வலியுறுத்துகிறது. ஆஷா பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்து மாதம் ரூ.18,000 ஊதியம் வழங்க வேண்டும், நீண்ட காலமாக கிடப்பில் உள்ள அவர்களின் இந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக ஏற்று, அதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று ஏஐடியூசி–ன் அகில இந்திய ஆஷா பணியாளர்கள் சம்மேளனம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 08

# பாவம் ஒரு பக்கம் பழி ஒரு பக்கமா?

குஜராத் உள்ளிட்ட பல மாநில தேர்தல்களைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு பெட்ரோல், டீசல் மீது உயர்த்தப்பட்ட வரியில் டீசல் விலை லிட்டருக்கு ரூ.7ம், பெட்ரோல் விலை 9 ரூபாய் 50 காசும் குறைக்கப்பட்டது.

ஆனால், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் இருந்த 2014வரை பெட்ரோல் மீதான வரி லிட்டருக்கு ரூ.9.48 பைசாதான் இருந்தது. டீசலின் மீதான வரி ரூ.3.56 பைசாவாக இருந்தது.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அறிவித்த குறைப்புக்குப் பின்பும் பெட்ரோல் மீதான வரி ரூ.19.90 பைசாவாகவும், டீசல் மீதான வரி ரூ.15.80 பைசாவாகவும் உள்ளது. இந்நிலையில் பா.ஜ.க. தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தமிழக அரசுக்கு கெடு விதித்து மாநில அரசின் வாட் வரியைக் குறைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நமது கேள்வி 2014ல் ஒன்றிய அரசு விதித்திருந்த அதே வரி நிலைக்கு மக்களின் நலன் கருதி அரசு முடிவெடுக்குமானால் இன்னும் பெட்ரோலுக்கு ரூ.10.50 பைசாவாகவும், டீசலுக்கு ரூ.12.24 பைசாவாகவும் குறைக்கப்பட வேண்டும். அப்படி குறைத்தால் மாநில அரசின் வாட் வரியும் தானாகவே குறையும் வாய்ப்பு உள்ளது.

தி.மு.க. அளித்த தேர்தல் வாக்குறுதியை நினைவுபடுத்துகிற பா.ஜ.க., பா.ஜ.க. அளித்த தேர்தல் வாக்குறுதிகள் என்ன ஆனது? வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி இருக்கும் கருப்பு பணத்தை மீட்டு தலைக்கு ரூ.15 லட்சம் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்ற வாக்குறுதியும், டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பை உயர்த்தி ரூ.40க்கு ஒரு டாலர் என்ற நிலையை உருவாக்குவேன், ஆண்டுக்கு இரண்டு இளைஞர்களுக்கு கோடி புதிய வேலை வாய்ப்பை உருவாக்குவேன் என்பது போன்ற வாக்குறுதிகள் என்னவாயிற்று?

இதைத்தான் அரசியலில் தங்களுக்கு வசதிக்கு ஏற்ப மறந்து போகும் நிலை (செலக்டிவ் அம்னிஷ்யா ) என்பதா? ஒன்றிய அரசால் பிடுங்க முடியாத ஆணியை மாநில அரசுகள் பிடுங்க வேண்டும் என்பது என்ன நியாயம்? விலையை உயர்த்தியது ஒன்றிய அரசா? மாநில அரசா? நேரடி பதில் தேவை ! பாவம் செய்தது ஒன்றிய அரசு; பழி மாநில அரசு மீதா?

இந்திய எண்ணெய் நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கக் கூடாது என்று சர்வதேச கச்சா விலைக்கு ஏற்ப தாங்களே விலை நிர்ணயம் செய்யலாம் என்ற நிலைக்கு ஒன்றிய அரசு வந்த பிறகு விலை ஏறுகிறபோது விலையை உயர்த்தியும், சர்வதேச அளவில் விலை குறைகிற போது பெட்ரோல், டீசல் விலையைக் குறைத்தும் விலை நிர்ணயம் செய்யப்படும் நிலை இருந்த நிலையில் பா.ஜ.க. மாநில தேர்தல்கள் வந்தால் ஒன்றிய அரசு தலையிட்டு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் இருப்பதும் தேர்தல்கள் இல்லை என்றால் உயர்த்துவதும் வாடிக்கை. அப்படியென்றால் விலை நிர்ணயத்தை அரசுதானே நிர்ணயிக்கிறது. இதற்கு அண்ணாமலை என்ன பதில் சொல்லப் போகிறார்?


உலகப் பெருந்தொற்று காலத்தில் கச்சா எண்ணெயின் விலை மிகக்குறைந்து ஒரு பேரல் 20 டாலர் என்ற அளவிற்கு வந்தது. நியாயமாக மக்களின் சுமையைக் குறைக்க வேண்டி அரசு ஒன்றிய வரியை 250% உயர்த்தி அதிலும் மாநிலங்களுக்கு பகுதி கொடுக்கப்படாத செஸ் வரியாக விதித்து மொத்தத்தையும் கபளீகரம் செய்து கொண்டது ஒன்றிய அரசு. இதன் மூலம் கடந்த ஏழு ஆண்டுகளில் எரிபொருள்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு ரூ.26,51000 கோடி வருமானம் வந்தது. வங்கிகள் பெரும் நிறுவனங்களுக்கு வெகுமானமாக அவர்கள் வாங்கிய கடனில் ரூ.10,86000 கோடி ரூபாயை கடன் விலக்கு செய்தது. அத்துடன் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரியை 30% லிருந்து படிப்படியாக சில குடும்பங்கள் மட்டும் பயன்பெற 22% ஆக குறைத்து விட்டது.

இதன் விளைவாக ஒன்றிய அரசுக்கு வரி வருவாய் இழப்பு ரூ. மூன்று லட்சம் கோடியை தாண்டி விட்டது. இதனை இட்டு நிரப்பத் தான் சமையல் எரிவாயு விலை ரூ.400 லிருந்து ரூ.1000 த்தை தாண்டி ரெக்கை கட்டி பறக்கிறது. பிரதமரால் பெரிதும் பேசப்பட்ட ஒன்றிய அரசின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் பெற்ற இலவச சமையல் எரிவாயு இணைப்பில் 92% பேர் அதாவது 90 லட்சம்பேர் மறு சிலிண்டர் வாங்கவில்லை. ஒரு கோடிபேர் ஆண்டுக்கு ஒரே ஒரு முறை மட்டும் மறு சிலிண்டர் வாங்கியிருக்கின்றனர்.

ஆக, பழையபடி அடுப்பூதும் பெண்களாக விறகடுப்பிற்கு சென்றுள்ளது தெளிவாகிறது. ஜி.எஸ்.டி. வரம்பிற்குள் வந்த ஒவ்வொரு குடும்பத்தையும் பாதிக்கிற இந்த சமையல் எரியாவு விலை உயர்வுக்கு நாடாளுமன்றத்தை முற்றுகையிடுகிற நல்ல வாய்ப்பு அண்ணாமலைக்கு வந்திருக்கிறது. வாய்ப்பை பயன்படுத்துவாரா? அல்லது வாய்ச் சவடால் மட்டுமே மிஞ்சுமா?

# தமிழக முதலமைச்சருக்கு மனம் திறந்த மடல்

## எம்.ரவி



மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, வணக்கம்.

இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக, ஏன் தெற்காசியாவிலேயே முதன்மை நாடாக தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையில் முன் கொண்டு செல்வோம் என்று சூளுரைத்து மிகுந்த நம்பிக்கையோடு செயலாற்றிக் கொண்டிருக்கும் தங்களுக்கு முதலில் புரட்சிகரமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேவேளையில், தமிழ்நாட்டு மக்களால் அரசியல் ரீதியாக புறக்கணிக்கப்பட்ட பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ், மற்றும் இந்துத்துவா மதவெறி அமைப்புகள் தமிழ்நாட்டு மக்களை பழிவாங்கவும், தங்களது சுயநல நோக்கத்தை நிறைவேற்றவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும், மிகப் பயங்கரமான சதி வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர கடமைப்பட்டுள்ளோம்.

இயற்கையாகவே, நமது தமிழ்நாடு எல்லா வளமும் பெற்ற மாநிலமாக உள்ளது. இதனால், தொன்மைக்காலந் தொட்டே தமிழ்நாடு விவசாயம், தொழில்கள், மற்றும் வணிகம் ஆகியவற்றில் தலைசிறந்த நாடாக திகழ்ந்து வருகிறது. இதற்கு ஏராளமான வரலாற்று சான்றுகள் உள்ளன.

அதேபோல் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பண்பட்ட கொள்கையுடன் அரசியல் சமூக பொருளாதார வாழ்க்கையில் நன்னெறிகள் கொண்ட, முற்போக்கு எண்ணம் கொண்ட மக்கள் வாழும் நாடு நமது தமிழ்நாடாகும்.

இத்தகைய வரலாற்றுப் புகழ்மிக்க தமிழ்நாட்டில், தற்போது மிகப்பெருவாரியான மக்களுக்கு வேலை வாய்ப்பையும், அரசாங்கத்திற்கு பெருவீதமான வருவாயையும் வழங்கி வருவது ஜவுளி தொழிலாகும். நூற்பாலைகள்,பனியன்,ஆயத்த ஆடை தொழிற்சாலைகள், மற்றும் விசைத்தறி, கைத்தறி ஆகிய சிறு குறு நடுத்தர நிறுவனங்கள், இவைகளுடன் தொடர்புள்ள வியாபாரங்களில் பல இலட்சக்கணக்கானவர்கள் இந்த ஜவுளி தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த ஜவுளி தொழில் தான் தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும், கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்துக்கும் மிக முக்கிய பங்காற்றி வருகிறது என்பதை அனைவரும் அறிவோம்.

இந்த ஜவுளி தொழிலும், தமிழ்நாட்டின் வளர்ச்சியும் ஒன்றியத்தின் பல பகுதிகளில் உள்ள குறிப்பாக வடமாநிலங்களில் உள்ள ஏழைஎளிய தொழிலாளர்களுக்கு மிகப்பெரும் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

எனவே, ஒன்றிய அரசுக்கு எதிரான மனநிலையில் உள்ள தமிழ் நாட்டு மக்களை பழிவாங்கவும், அடிபணிய வைக்கவும் தமிழ்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ள ஜவுளித் தொழிலை சீர்குலைக்க வேண்டும் என்ற தீய எண்ணத்தில் பா.ஜ.க, ஆர்எஸ்எஸ்ஸும்,வட மாநிலத்தில் உள்ள கார்ப்பரேட் கம்பெனிகள் உடன் சேர்ந்து மிகப் பெரும் சதி வலைகளை பின்னி செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டின் ஜவுளித் துறையின் கட்டமைப்பையே உடைத்து உருக்குலைக்கும் நோக்கத்துடன் செயல்படும் இந்த தீய சக்திகள், தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளுக்கு தேவையான பஞ்சு கிடைக்காமல் இருக்க செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குகிறார்கள். ஒன்றிய அரசின் சட்டபூர்வ அனுமதி யுடன் யூகபேர வணிகம் மூலம் கொள்முதல் செய்த பஞ்சுகளை பதுக்கி வைத்துள்ளனர். பஞ்சின் விலை தாறுமாறாக உயர்த்துகிறார்கள் பஞ்சின் விலை உயர்வால் நூல் விலையை உயர்த்தச் செய்கிறார்கள். நூல் விலை உயர்வதால் பனியன், பவர்லூம், கைத்தறி உள்ளிட்ட சிறு குறு நடுத்தர தொழில்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் போட்டியிட முடியாமல் முடங்கிப் போகும் நிலையை உருவாக்குகிறார்கள். இவ்வாறு தமிழ்நாட்டில் உள்ள ஒட்டு மொத்த ஜவுளி தொழிலையே அழித்து ஒழித்து விடுவது என்ற நயவஞ்சகமான சதி வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, தமிழக முதல்வர் அவர்கள் நமது தமிழ் நாட்டையும்,மக்களையும் பாதுகாத்திட அதிரடியான போர்க்கால நடவடிக்கைகளில் உடனடியாக இறங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

முதலில் ஜவுளித் தொழிலின் மூலப்பொருளான பருத்தியை எல்லா வளமும் உள்ள நமது தமிழ்நாட்டு மண்ணில் சாகுபடி செய்ய வேண்டும். விஞ்ஞானிகளை களத்தில் இறக்கிவிட்டு பருத்தி விளைச்சலுக்கு தகுதியான நிலங்களை கண்டறியவேண்டும். பருத்தி விளைச்சலுக்கு ஏதுவான நிலங்களில் எல்லாம் பருத்தியைப் பயிரிட உழவர்களுக்கு உதவிகளையும் உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும். பஞ்சு உற்பத்தியைப் பெருக்கி, அரசே அதனை கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையும், உரிய மானியமும் கிடைத்திட வழிவகை செய்யவேண்டும்.தமிழகத்தில் உள்ள நூற்பாலைகள் அனைத்துக்கும் சர்வதேச சந்தையை விட குறைவான விலைக்கு அரசே பஞ்சை வழங்க வேண்டும். தமிழகத்தின் தேவைக்கு போக மீதமுள்ள பஞ்சை தமிழ்நாடு அரசே மற்ற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும்.

ஜவுளித் தொழிலுக்கான பஞ்சை அரசே வழங்குவதன் மூலம் தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் நிலைகுலையாமல் வளரும். பனியன், விசைத்தறி, கைத்தறி, ஆயத்த ஆடை தொழில்கள் நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கும் அவலம் நீங்கி நெருக்கடி இல்லாமல் நிம்மதியாக செயல்படும், மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகி அவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்பதை தெரி வித்துக் கொள்கிறோம். இது தாய்நாட்டைக் காக்கும் புனிதப் போரைப் போன்றதாகும். எதிரிகளின் சதியை முறியடிக்கும் வகையில் எல்லாம் போர்முனைக்கே என்ற முழக்கத்தை போல,எல்லாம் ஜவுளித் தொழிலைப் பாதுகாக்க என்ற முழக்கத்துடன் மாபெரும் திட்டத்தை தாங்கள் வரையறுத்து செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

பசுமைப் புரட்சியை நடத்திக் காட்டியதைப் போல தமிழ்நாட்டில் பருத்தி புரட்சியை நடத்திக் காட்டுவோம். தங்களின் சீரிய முயற்சிக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு உங்களுடன் ஒன்றுபட்டு நிற்கும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

“ஊர் கூடி தேரை இழுப்போம்
பல்லக்கைத் தூக்க மாட்டோம்”

தொடர்புக்கு: **94427 36668**

# தா.பாண்டியன் 90வது பிறந்த நாள் நிகழ்ச்சி



**தருமபுரி :** தருமபுரி மாவட்டம்,பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் மற்றும் தருமபுரி தொலைபேசி நிலையம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த தோழர் தா.பாண்டியன் அவர்களின் 90வது பிறந்த நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. தா.பாண்டியன் திருவுருவப்படத்திற்கு பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ் சப்பன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத் தினார்.இந்நிகழ்ச்சிக்கு வட்டார செயலாளர் முனியப்பன் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர் எஸ். தேவராசன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் வழக் கறிஞர்கள் எஸ் கலைச்செல்வன், சி மாதையன், ஒன்றிய துணை செயலாளர் சம்பத் , நகர துணை செயலாளர் தர்ம ராஜா மாவட்டக்குழு உறுப்பினர்கள் கதிரவன், கிருஷ் ணன், முத்து, கவுன்சிலர் நாகராஜ், சண்முகம் , மற்றும் முருகன் சேட்டு நாகப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தருமபுரி தொலைபேசி நிலையம் அருகில் நடந்த நிகழ்ச்சிக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.தேவரா சன் தலைமையில், மாவட்ட பொருளாளர் எம்.மா தேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ். சின்னசாமி,நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கே.மணி,எஸ். கலைச்செல்வன், இண்டூர் வட்டார பொருளாளர் மாதையன்,கட்டுமான சங்க மாவட்டத் தலைவர் குழந்தைவேலு மாவட்டச் செயலாளர் ஆர்.சுதர்சனன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் என்.மனோகரன்,நிர்வாகி முருகேசன் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செய்தனர். அதேபோல் பாப்பாரப்பட்டி,அரூர் உள்ளிட்ட இடங்களில் தா.பாண்டியன் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.


**பேரணாம்பட்டு:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு நகரத்தில் 18வது வார்டில், டாக்டர். அம்பேத்கர் நகரில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் அவர்களின் 90வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 18வது வார்டு செயலாளர் நா.சே.தலித் பாஸ்கர் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். ஜெனிநா, பி.செல்விபாஸ்கர், தமிழிலக்கியா, கோட்டிபேரரசன் ஆகியோர் கலந்துகொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

தத்துவார்த்தம் 30



எஸ். தோதாத்ரி

# மீமாம்சம்



**இந்தியத் தத்துவங்களில் சற்று வினோதமானது மீமாம்சம் என்பது. இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அளவில் உருவானது. இதன் தொடர்பாக மூவர் உள்ளனர். ஒருவர் ஜைமினி என்பவர். மற்றவர்கள் குமரிலபட்டர், பிரபாகரர் என்ப வர்கள் ஆவர். இது பூர்வ மீமாம்சம் என்றும், உத்ர மீமாம்சம் என்றும் இரு பிரிவாக உள்ளது. இதில் பூர்வ மீமாம்சம் நமக்கு முக்கியமானவை. ஏனென் றால் உத்ர மீமாம்சம் என்பது வேதாந் தத்துடன் தொடர்புடையது. இதுபற்றி காணலாம்.**

இந்தியத் தத்துவங்களில் சமணம், பவுத்தம், உலகாயதம் ஆகிய தவிர மற்றவை வேதங்களை ஏற்றுக் கொண்டவை. இதில் மீமாம்சகர்கள் மிக முக்கியமானவர்கள். மீமாம்சை என்ற சொல்லுக்கு ஆராய்தல் என்று அர்த்தம். இவர்கள் வேதங்களை ஆராய்ச்சிக்கு உட்படுத்தினர். அதேசமயத்தில் வேதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இவ்வாறு ஆராயும்போது இவர்கள் மிகச் சிறப்பாக மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். இவர்களது கருத்துப்படி எந்த ஒரு சொல்லையும் அது குறிக்கும் பொருளில் இருந்து காணமுடியாது. உதாரணமாக மலர் என்ற சொல் அந்தப் பொருள் இல்லாமல் உருவாக முடியாது. இதில் பொருள்முதல்வாதத் தன்மை இருந்தாலும் மீமாம்சவர்கள் அதிக அளவு சொல்லுக்கே கொடுத்தனர். மீமாம்சகர்கள் வேதம் கடவுளால் படைக்கப்பட்டது என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. வேதமான மனிதனாலும் படைக்கப்படவில்லை. இது அவர்களது கொள்கை.

மீமாம்சகர்கள் வேதங்களில் காணப்படும் பல கிரியைகள், சடங்குகள் ஆகியவற்றை அதிகம் வலியுறுத்தினர். இவற்றை செய்வதன் மூலம் மோட்சம் பெறலாம் என்பது இவர்களது நம்பிக்கை. இவர்கள் உபநிடதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

மீமாம்சகர்கள் பொருள்கள் உள்ளன என்பதை ஏற்றுக் கொண்டவர்கள். பொருள்கள் பல; ஒன்று அல்ல என்பதையும் இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். மீமாம்சகர்கள் பொருள் அதற்குரிய குணம் ஆகியவற்றைப் பிரித்துக் கண்டனர். மீமாம் சகர்கள் பொருள் அதன் குணம் ஆகியவற்றைப் பற்றி ஒரு கருத்தை முன்வைத்தனர். குணம் வேறு; பொருள் வேறு என்று பலர் கூறிய பொழுது மீமாம்சகர்கள் அவைகள் வேறும் அல்ல; ஒன்றும் அல்ல என்ற ஒரு வாதத்தை முன்வைத்தனர். இது கருத்துமுதல்வாத பாதைக்கும், பொருள்முதல்வாத பாதைக்கும் நடுவிலான பாதையாகும்.

மீமாம்சகர்கள் அணுக்கள் இருப்பதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் கண்ணுக்குத் தெரியாத அணு இருப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்குக் காரணம் வேதங்களில் அணு பற்றி ஒன்றும் கூறவில்லை. வேதங்களின் மீது அதிக நம்பிக்கை உள்ளவர்கள். ஆகையினால் அதில் கூறாத எதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மீமாம்சகர்கள் ஆன்மா உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.

**மீமாம்சகர்கள் கடவுள் ஒருவர் தேவையில்லை என்று கூறுகிறார்கள். மீமாம்சம் பற்றி முதன்முதலாக விரிவான நூலை எழுதிய ஜைமினி கடவுள் பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. ஆனால் பின்னால் வந்தவர்கள் கடவுள் பற்றி கூறுகிறார்கள். எனவே இவர்கள் ஆத்திகரா? நாத்திகரா? என்ற விவாதம் நடைபெற்றது. வேதங்கள் யாராலும் செய்யப்படவில்லை என்பதை வைத்துக்கொண்டு கடவுள் இல்லை என்பதை மீமாம்சகர்கள் வலியுறுத்துவர். இவர்கள் வேதங்களை விட யாகங்கள், சடங்குகள் ஆகியவற்றுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்தனர்.**

இறைவன் இல்லை என்ற கருத்தை முன் வைக்கும் போது நம்மை இயக்குவிக்கும் சக்தி எது என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு மீமாம்சர்கள் கம்மம் அல்லது கர்மம் என்ற கொள்கையை முன்வைத்தனர். இதன்படி ஆன நியமங்கள், ஒழுக்கங்கள் ஆகியவற்றை அணு பிசகாமல் செய்ய வேண்டும் என்று கூறினர். ஆனால் மீமாம்சகர்கள் தெய்வங்கள் உண்டு என்றனர். ஒவ்வொரு யாகத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் உண்டென்று கூறினர். ஆனால் முழுமுதற் கடவுள் இல்லை என்று கூறினர். இது மீமாம்சகத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும்.

பிற்காலத்தில் மீமாம்சம் இரு பிரிவாக பிரிந்தது. ஒன்று குமரிலபட்டருடைய மீமாம்சம். இன்னொன்று அவரது மாணவராகிய பிரபாகரரின் மீமாம்சம் பட்டரது கொள்கைப்படி ஆன்மா மாற்றமடையும் கொள்கை உடையது. பிரபாகரர் கொள்கைப்படி ஆன்மா மாறாத் தன்மை உடையது. குமரிலபட்டரும், பிரபாகரரும் திரிபுக்காட்சி என்பது பற்றி அதிகம் பேசுகின்றனர். இதில் இல்லாத ஒன்றை இருப்பதாக கூறுவதாகும். உதாரணமாக கானல் நீர் உண்மையில் நீர் இல்லை. ஆனால் நீர் இருப்பது போல் தோன்றுகிறது. இதுபற்றி ஆராய்வதன் விளைவாக குமரிலபட்டர் கருத்துமுதல் வாதத்திற்கு மிக நெருக்கமாக வந்தார். மீமாம்சகர்கள் ஆன்மாவையும் ஏற்றுக்கொள்கின்றனர். பொருளையும் ஏற்றுக்கொள்கின்றனர். மீமாம்சகர்கள் முக்தி பற்றி பேசியிருக்கிறார்கள். முக்தி அடைவதற்கு சில கர்மாக்களை ஒழுங்காக செய்வதே சரியான வழி என்றும் கூறுகின்றனர். அதனால், மீமாம்சையில் அனுட்டானங்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றன. எனவே இந்தத் தத்துவமானது பொருளை ஏற்றுக் கொண்டாலும் பிற்காலத்தில் ஒருவகையான கருத்துமுதல்வாத நிலைப்பாட்டிற்கு வந்தது எனலாம்.

தொடர்புக்கு: **98947 83657**

## 2700 ஆஷா தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து

# மாதம் ரூ.18,000 ஊதியம் வழங்கிடுக!

### முதல்வருக்கு கே.சுப்பராயன் எம்.பி. கடிதம்

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

உலக சுகாதார அமைப்பின் (கீபிளி) 75வது ஆண்டுவிழா ஜெனிவாவில் நடைபெற்று முடிந்தது. அந்த விழாவில் ஆஷா பணியாளர்களின் மருத்துவ சேவையை பாராட்டும் முறையில் ஆஷா பணியாளர்களுக்கு 2022 ம் ஆண்டுக்கான “சர்வதேச மருத்துவ முன்னணியினர்” என்ற விருது வழங்கி கௌரவித்துள்ளது. இந்தியப் பிரதமர் உட்பட பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் கிஷிபிகி பணியாளர்களுக்கு அவர்களது மதிப்பு மிக்க மருத்துவப்பணியை பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர். தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறையும் வாழ்த்துத் தெரி விப்பார்கள் என எதிர்பார்த்தோம்.

உலக சுகாதார அமைப்பின் (கீபிளி) இந்த பெருமைமிக்க அரிய விருது ஆஷா பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணியை உறுதிசெய்திருக்கிறது. இந்த விருது, ஆஷா பணியாளர்களின் கிராமப்புற, மலைப்பகுதி கிராம மருத்துவப் பணிகளின் மகத்துவத்தை உலகிற்கு துலக்கிக் காட்டியுள்ளது.

ஏஐடியுசியின் அகில இந்திய ஆஷா தொழிலாளர்கள் சம்மேளனமும், தமிழ்நாடு ஆஷா பணியாளர் சங்கமும் இந்தியாவில் உள்ள 10 லட்சத்திற்கும் மேலான ஆஷா தொழிலா ளர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இந்த விருது கொடுத்து கௌரவித்த உலக சுகாதார அமைப்புக்கும், வாழ்த்துக் களைத் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும், பிற பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

உலக சுகாதார அமைப்பு புகழ்ந்து, விருது வழங்கிக் கௌர வித்துள்ள இந்த ஆஷா தொழிலாளர்கள் இந்திய ஒன்றி யத்திலும், மாநிலங்களிலும் தொழிலாளர்கள் என்றே அங்கீகரிக்கப்படவில்லை என்பது வேதனையும் வியப்புமளிக் கிறது. ஓய்வின்றி 24 மணி நேரமும் அயராது உழைக்கும் இவர்களுக்கு ஒன்றிய அரசு வழங்குவது மாதம் ரூ.2000 மட்டுமே. மற்றும், தேசிய கிராமப்புற சுகாதார திட்டம் வழங்கும் ஊக்கத்தொகையாக சில நூறு ரூபாய்கள் மட்டுமே.

இந்நிலையில் வாழ்த்துவதிலோ, பாராட்டுவதிலோ என்ன பொருள் இருக்க முடியும்? கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இவர்களின் கோரிக்கையான பணி நிரந்தரம் மற்றும் மாதம் ரூ.18000 தொகுப்பூதியம் என்ற கோரிக்கையை ஒன்றிய, மாநில அரசுகள் கண்டுகொள்ளவோ, கருதிப்பார்க்கவோ இல்லை என்பது மிகுந்த மன வேதனை அளிக்கிறது.

உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள பத்திரிகை செய்தி மிகத் தெளிவாகவும் விரிவாகவும் ஆஷாத் தொழிலாளர்களின் கிராமப்புற சேவையை மெச்சிப் பாராட்டி அவர்களது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. பிரதமரும், சுகாதாரத் துறை அமைச்சரும் ஆஷாபணியாளர்களை வாழ்த்தி உள்ளார்கள்.

இந்தியாவில் மகப்பேறு இறப்பு விகிதமும், சிசு இறப்பு விகிதமும் குறைவதற்கு முழுமுதற் காரணம் ஆஷா தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்புதான் என்றும் கூறியுள்ளனர்.

இத்தகைய வெற்று வாழ்த்துக்களால் என்ன பயன்? வாழ்க்கைக்கான 18000 ரூபாய் ஊதியம் வழங்க வேண்டாமா? வெறும் உதட்டு உச்சரிப்புகள் தொழிலாளர்களை திருப்திப் படுத்தி விடாது.

ஆஷா தொழிலார்களின் நிரந்தரதன்மை வாய்த்த பணியும், அவர்களின் தேசிய கிராமப்புற சுகாதாரத்தில் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்பும் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், ரூ.18000 மாத சம்பளம் என்று நிர்ணயம் செய்து அறிவிப்பதுதான் அவர்களது அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்புகளுக்கு பொருத் தமான பாராட்டாக அமையும் என்பதை ஒன்றிய, மாநில அரசுகள் உணரவேண்டும்.

உலக சுகாதார அமைப்பு கொடுத்துள்ள அங்கீகாரத்திற்கும், கௌரவத்திற்கும் இணை என்பது அவர்களுக்கு பணி நிரந்திரமும் மாத ஊதியம் குறைத்த பட்சம் ரூ.18000 மும் வழங்குவது மட்டுமாகத்தான் இருக்கமுடியும்.

ஒன்றிய அரசு உடனடியாக இதை அறிவிக்க வேண்டும் என்று ஏஐடியுசியின் அகில இந்திய ஆஷா தொழிலார்கள் சம்மேளனம் அழுத்தம் திருத்தமாக உறுதிபட வற்புறுத்துகிறது.

மேலும், தமிழ்நாட்டில் வெறும் 2,700 ஆஷா தொழிலாளர்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில், திராவிட பொருளாதாரக் கொள்கை மாதிரியைப் பின்பற்றி சமூக வளர்ச்சியை நிலைநாட்டும் பொருட்டு திட்டங்களை தீட்டி முனைப்புடன் செயல்படும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்தருணத்தில் 2700 ஆஷா தொழிலாளர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் மாதம் ரூ.18,000 தொகுப்பூதியம் அறிவித்து அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணியை கௌரவிக்க வேண்டுமென தமிழ்நாடு ஆஷா தொழிலாளர்கள் சங்கம் உறுதிபட வற்புறுத்துகிறது.

இதை மிகுந்த நம்பிக்கையோடு நான் தங்கள் பார்வைக்கு முன் வைக்கிறேன்.

தங்கள் இசைவான நடவடிக்கைக்காக காத்திருக்கிறோம்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.

## சர்வதேச விருது பெற்ற ஆஷா பணியாளர்களின் சேவை

# என்றென்றும் நினைவுகூரத்தக்கது

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்து

ஜெனிவாவில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் மாநாட்டில் ஆஷா பணியாளர்ளின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை பாராட்டி, “சர்வதேச மருத்துவத் தலைவர்கள்“ என்ற விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த விருதை ஐந்து சர்வதேச அமைப்புகளோடு சேர்ந்து ஆஷா பணியாளர்கள் பகிர்ந்து கொள்ளும் பெருமை படைத்துள்ளனர்.

கடுமையான பணிச் சூழலில், பாதுகாப்பற்ற பணியாக தொடரும்நிலையில், கோவிட் 19 அலை அலையாக, தொடர்ந்து தாக்குதல் நடத்திய போதும், தாய் சேய் நலன், மற்றும் நோய் பரவல் தடுக்கும் பணியில் ஆஷா பணியாளர்களின் சேவை என்றென்றும் நினைவுகூறத்தக்கது.

இவர்களுக்கு ஒன்றிய, மாநில அரசுகள் குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்குவதில்லை. ஊக்கத்தொகை என்ற முறையில் சிறு தொகை வழங்கப்படுவது நியாயமற்ற பணியாளர் நடைமுறையாகும்.

அரசின் அழைப்பை ஏற்று, ஆஷா பணியில் சேர்ந்து, பணிபுரிந்து வரும் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும்.

ஊராட்சிக்கு ஒரு ஆஷா என்கிற முறையில் புதிய நியமனம் செய்ய வேண்டும். இதன் முக்கியத்துவத்தை உலக சுகாதார அமைப்பு உணர்ந்து பாராட்டி, விருது வழங் கியிருப்பது மிகவும் பொருத்தமானது. நாட்டுக்கு பெருமை சேர்த்த ஆஷா பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் மாதம் ரூ 18 ஆயிரம் ஊதியம் வழங்க, ஒன்றிய, மாநில அரசுகள் உத்தரவிட வேண்டும் என வலியுறுத்துவதுடன், சர்வ தேச மருத்துவத் தலைவர்கள் விருது பெற்று, சாதனை படைத்த ஆஷா பணியாளர்கள் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு வாழ்த் துக்களை தெரிவித்துக் கொள்கிறது.


இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



- கீ.சு.குமார்

# 124-ஏ தேசத்துரோக சட்டப்பிரிவு ரத்தாகுமா?

## உச்சநீதிமன்ற உத்தரவு நடைமுறைக்கு வருமா?




**124-ஏ தேசத்துரோக சட்டப்பிரிவை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் கடந்த 11ஆம் தேதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு பின்வரும் உயர்வான உத்தரவை வழங்கியது.**

124–ஏ தேசத்துரோகச் சட்டப்பிரிவை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும், இதுவரை இச்சட்டத்தின் கீழ் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரின் பிணை மனுவும் உடனடியாக பரிசீலிக்கப்பட வேண்டும், நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இச்சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து நடைபெற்று வரும் விசாரணை, மேல்முறையீடு, சீராய்வு என அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டு உள்ளது.

மேலும், இது போன்றதொரு தேவையான சட்டம் கொண்டுவர வேண்டிய சமூக சூழ்நிலை 150 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைப் போல் இப்போது இல்லை என்றும் நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

ஆளும் ஒன்றிய பாஜக அரசை அதிர வைத்திருக்கும் இந்த உத்தரவு, ஜனநாயகவாதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் நம்பிக்கை ஒளியை பாய்ச்சி உள்ளது. ‘எடிட்டர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா’ ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒப்பட்கரே உள்ளிட்டவர்கள் உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு தொடர்ந்த இவ்வழக்கில் ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துல்சர் மேத்தா அவர்களின் நீண்ட எதிர்வாதத்திற்குப் பின்னர் உச்சநீதிமன்றத்தின் கிடுக்கிப்பிடி கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல், உத்தரவிற்கு இணங்குவதாக இசைவு தெரிவித்தார்.

இந்த தேசத்துரோக சட்டப்பிரிவு நிரந்தரமாக நீக்கப்பட வேண்டும் என்றாலும், திருத்தப்பட வேண்டும் என்றாலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெரும்பான்மை பெற்றுதான் செயல்படுத்த முடியும். நாடாளுமன்றத்தின் பணியை நீதிமன்றம் செய்ய முடியாது. உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்குக் காரணம் தான் என்ன?

சூரியன் அஸ்தமிக்காத நாடான பிரிட்டிஷ் அரசு தாங்கள் ஆட்சி செய்யும் நாடுகளில் வாழும் பூர்வகுடிகளை ஒடுக்குவதற்காக 1837ஆம் ஆண்டு பாபிங்டன் மெக்காலே என்பவரால் வடிவமைக்கப்பட்டு, 1870ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்திய நீதிமன்றத்தின் நீதிபதி ஜேம்ஸ் ஸ்டீபன் என்பவரால் இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 124–ஏ ஆக இந்த தேசத்துரோகச் சட்டம் சட்ட திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டது.

இந்திய சுதந்திர போராட்டக்காரர்கள் பலரும் இச்சட்டத்தின்படியே கைது செய்யப்பட்டார்கள். அண்ணல் காந்தியடிகள், சர்தார் வல்லபாய் பட்டேல், பால கங்காதர திலகர் உள்ளிட்ட தலைவர்கள் இச்சட்டப்படிதான் கைதுசெய்யப்பட்டு சிறை சென்றார்கள்.

ஆளும் வெள்ளை அரசை எதிர்த்து கருத்துச் சொல்பவர்கள், போராடுபவர்கள், போராடத் தூண்டுபவர்கள், அரசுக்கு எதிராக எழுதுதல், நடித்தல், பாடுதல், சைகை செய்தல், வரைதல் என எவ்வகையிலும் மேன்மைதங்கிய பேரரசியாரின் ஆட்சிக்கு எதிரான எச்செயலையும் இச்சட்டம் தடை செய்கிறது.

வெள்ளையரின் ஆட்சி அகன்று 75ஐ நெருங்கிய பின்னரும், அடிமை வாழ்வின் மிச்சத்தை இச்சட்டத்தின் வழியாக இன்னும் நாம் சுமந்து கொண்டு இருக்கின்றோம்.

இன்றளவும் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்கள் பிணையில் வர முடியாது; கடவுச்சீட்டு முடக்கப்படும்; குற்றம் நிரூபிக்கப்பட்டால் குறைந்தது 3 ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை சிறை வரை சிறை தண்டனை விதிக்கப்படும்; அபராதமும் உண்டு. அரசு வேலைக்கும் தகுதியிழப்பார்கள்.

இச்சட்டத்தை அமல்படுத்திய இங்கிலாந்தில் இச்சட்டம் இப்போது நடைமுறையில் இல்லை. இங்கிலாந்து அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு இயற்றப்பட்ட இச்சட்டம், இந்திய அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த ஜனவரி 1950 ஜனவரி 26 அன்றே காலாவதி ஆகி இருக்க வேண்டும்.

இச்சட்டம் நீக்கப்பட வேண்டியது குறித்து அண்ணல் அம்பேத்கர் அவர்கள் நாடாளுமன்றத்தில் அனல் பறக்க பேசினார். ஆனால், நேரு தலைமையிலான காங்கிரஸ் கட்சியினருக்கு அன்றைய கம்யூனிஸ்டுகள் கலகக்காரர்களாகத் தெரிந்ததால் இச்சட்டத்தை நீக்க மனமில்லை.

சுதந்திர இந்தியாவின் சூன்யமாக இச்சட்டம் நீடிக்கிறது. ஒன்றிய, மாநில அரசுகள் தங்கள் அரசியல் எதிரிகளை பழிவாங்க இச்சட்டத்தை பயன்படுத்தி வந்தது. பாஜக – ஆர்எஸ்எஸ் கும்பல் ஆட்சிக்கு வந்த 2014 முதல் அரசியல் எதிரிகள் மட்டுமல்ல, சாதி, மத, அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படையில் பழி தீர்க்க விரும்பும் எவரையும் இச்சட்டத்தை பயன்படுத்தி சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளி வருகிறது.

**சனாதனத்தை எதிர்ப்பவர்கள், இடதுசாரி சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள், இஸ்லாமிய, கிறிஸ்தவ சிறுபான்மையினர், பேராசிரியர்கள், திரைப்பட இயக்குனர்கள், கலைஞர்கள், பாடகர்கள், மாணவர்கள் என ஆர்எஸ்எஸ் சித்தாந்தங்களுக்கு எதிரான எவரையும் இச்சட்டம் கொண்டு நசுக்கியது பாஜக அரசு.**

கர்நாடக மாநிலத்தில் 2019இல் குடியுரிமை சட்டத்திற்கு எதிராக நாடகத்தில் எழுதிக் கொடுத்த வசனத்தை பேசிய குழந்தையை இச்சட்டம் போலீஸ் விசாரணைக்கு உட்படுத்தியது. பள்ளி ஆசிரியரும், பெற்றோரும் கைது செய்யப்பட்டனர். ஜார்கண்ட் மாநிலத்தில் 2010ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தப்படுவதை எதிர்த்து போராடிய 10 ஆயிரம் பழங்குடி மக்கள் மீது சட்டம் பாய்ந்தது.

சாராயக்கடையை எதிர்த்து பாட்டு பாடிய கோவன், பாகிஸ்தானியர்களும் இந்தியர்களைப் போலவே நல்லவர்கள் என கருத்துச் சொன்ன நடிகை ரம்யா, கூடங்குளம் அணு உலை வேண்டாம் என உண்ணாவிரதம் இருந்த 9000 பொதுமக்கள் என உப்பு சப்பில்லாத காரணங்களுக்கெல்லாம் தன் சொந்த நாட்டு மக்களை பழிவாங்க இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1950 முதலே வலுவாக ஒலித்து வருகிறது. உச்சநீதிமன்றம், பஞ்சாப், அரியானா, அலகாபாத் உயர் நீதிமன்றம் என பல நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

1962ல் பீகார் மாநிலத்திற்கு எதிராய் உச்சநீதிமன்றத்தில் கேதார்நாத்சின் தொடர்ந்த வழக்கில் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு சுதந்திர இந்தியாவில் எவையெல்லாம் தேசத்துரோக குற்றம் ஆகாது என 7 வழிமுறைகளை வகுத்துக் கொடுத்தது.

2011ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரும், இன்றைய பொதுச் செயலாளருமான தோழர் டி.ராஜா அவர்கள் இச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என தனிநபர் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். மசோதா வாக்கெடுப்புக்கு வராமல் போனது. ஆனால், அவையில் இச் சட்டத்தின் கொடூர பக்கங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

தேசிய குற்ற ஆவண முகமை வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களை பார்க்கும்போது, இச்சட்டம் பாஜகவின் ஒன்றிய, மாநில அரசுகளால் தங்கள் அரசியல் லாபத்திற்காக தவறாக பயன்படுத்தப்படுவதை காண முடியும்.

2014 முதல் 2020 வரை சுமார் 550 க்கும் கூடுதலான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சுமார் மூன்று சதம் வழக்குகளில் மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளன. 97 சதம் பொய் வழக்குகள். இவ்வழக்குகளும் பெரும்பாலும் பாஜக ஆளும் மாநிலங்களான கர்நாடகா, அஸ்ஸாம், ஜம்மு காஷ்மீர், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில்தான் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக நீதிமன்றங்கள் சொல்வதை ஒன்றிய அரசு செவி கொடுப்பதில்லை. நாக்பூரில் பதுங்கியிருக்கும் ஆர்எஸ்எஸ் நரிக்கூட்டம் எடுக்கும் முடிவே பாஜகவிற்கு வேதமந்திரம்.

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் போது உச்சநீதிமன்றத்தில் ஒப்புக் கொள்வது போல் பாவ்லா செய்ததும், நாக்பூரின் அறிவுரை கேட்டு வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியதும் தெரிந்த கதை. கடந்த காலங்களை போல் அல்லாமல் ஒன்றிய அரசு உச்சநீதிமன்ற உத்தரவை இதய சுத்தியோடு நாடாளுமன்றத்தில் விவாதித்து தேசத்துரோக சட்டப்பிரிவு 124–ஏ வை நிரந்தரமாக நீக்க முன்வர வேண்டும். இல்லையேல் அடுத்து வரும் காலங்களில் தேசத்துரோக சட்டங்கள் மட்டுமல்ல, தேச விரோத ஆட்சிகளையும் மக்கள் தூக்கி எறிவார்கள்.

தொடர்புக்கு: **99520 23935**

## கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் கோரிக்கைகளை பேசி தீர்வு காண வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கறிக்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வளர்ப்பு கோழிகள் ‘டிரேட் மார்க்‘ வணிக சின்னத்துடன் கறிக்கோழி வணிகத்தில் ஈடுபட்டு வரும் பெருநிறுவனங்களுக்காக வளர்த்துக் கொடுக்கப்படுகிறது. வணிக நிறுவனங்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையில் ஊதிய ஒப்பந்தம் செய்து கொள்வது நடைமுறையாகும். கடந்த 2013ஆம் ஆண்டில் அரசின் முயற்சியில் முத்தரப்பு கூட்டம் நடத்தி உடன்பாடு காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆண்டுக்கு 20 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தை வணிக நிறுவனங்கள் முறையாக அமலாக்காததாலும், 2014க்கு பிறகு ஏற்பட்டுள்ள வரலாறு காணாத விலை உயர்வு காரணமாகவும் கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் புதிய ஊதிய ஒப்பந்தம் கேட்டு சில வாரங்களாக போராடி வருகிறார்கள்.

கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் கோரிக்கை மீது அரசு தலையிட்டு, முத்தரப்புக் கூட்டம் நடத்தி, கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் கோரிக்கைகள் மீது தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## கே.எஸ்.பாலு பவனம் திறப்பு விழா

கீழ ஆம்பூர் அக்குபஞ்சர் மருத்துவர் பி.சந்தான கிருஷ்ணன், எஸ்.ராஜேஸ்வரி ஆகியோர் புதிதாக கட்டியுள்ள கே. எஸ். பாலு பவனம் திறப்பு விழா 15.5.2022 ம் நாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இல்லத்தை கட்சியின் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசிவிஸ்வநாதன் திறந்து வைத்தார். தென்காசி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் தி. இசக்கித் துரை, மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் ஏ. பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, பீடித் தொழிலாளர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் கே.எஸ்.பாலு அனைவரையும் வரவேற்று பேசினார். மாநிலக்குழு உறுப்பினர் வேலாயுதம், மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர்கள் தென்காசி தி.சுப்பையா, திருநெல்வேலி ஆர். சடையப்பன், முன்னாள் ஊராட்சித் தலைவர் ஆர்.ஈஸ்வரன், விவசாயிகள் சங்கத் தலைவர் கே.சட்டநாதன், மற்றும் விவசாயிகள் இயக்கத் தலைவர்கள் பி.மாடசாமி, ஜி. ஹரிஹரன், பி. மாடசாமி, ஜி.காசி உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். புதிதாக தேர்வு செய்யப்பட்ட கடையும் ஒன்றிய செயலாளர் ஜீவா நன்றி கூறினார். நிகழ்ச்சியில் கே.சுப்பராயன் எம்.பி. அவர்களிடம் ரூ.10,000 மார்க்சிய அறிஞர் சி.எஸ்.பெயரால் கட்டப்படும் கட்டிட நிதிக்கு கே.எஸ். பாலு குடும்பத்தினர் அளித்தனர். மேலும் தென்காசி மாவட்ட செயலாளர் இசக்கிதுரையிடம் ரூ.5000 வழங்கப்பட்டது.

## ரெயில்வே தேர்வு எழுத தமிழக மாணவர்கள் வடநாடு செல்ல வேண்டுமா?

# கண்டன ஆர்ப்பாட்டம்!

சின்னசேலம் ரயில்யில்வே பணிக்கான தேர்வெழுத தமிழக மாணவர்கள் வடநாடு செல்ல வேண்டும் என்ற ரயில்வே துறையின் அறிவிப்பைக் கண்டித்து கள்ளக்குறிச்சி மாவட்ட, தந்தை பெரியார் திராவிடர் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் இணைந்து ரெயில்வே தேர்வுகளை தமிழ்நாட்டிலேயே நடத்த வலியுறுத்தி சின்னசேலம் ரெயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பிரபு தலைமை தாங்கினார்.

இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.அப்பாவு கலந்துகொண்டு மத்திய அரசின் மாற்றான் தாய் மனப்பான்மையைக் கண்டித்தார்.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வட்டார செயலாளர் மாரிமுத்து, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் கலியபெருமாள் தமிழ்வழிக் கல்வி இயக்க ஒருங்கிணைப்பாளர் சின்னப்பதமிழன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாசறை பாலு, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# சங்கே முழங்கு!

### மீன்வள மேம்பாட்டு திட்டம்

# விவசாயிகளுக்கு பெரும் சுமை!



தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி அவர்கள் தமிழக முதல் அமைச்சர் மு.க. ஸ்டானின் அவர்களுக்குஎழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

புதிய குளங்கள், மீன் குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால், மீன் குஞ்சு உற்பத்தி மையம், உயிர் மீன் விற்பனை நிலையம் போன்ற பலமானிய திட்டங்களை மீன்துறை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதன்படி கிராமப்புற விவசாயிகள் தன்னிடமுள்ள கச்சாப் பொருட்கள் மூலமும் குடும்பத்தார் உழைப்பு மூலமும் கட்டுமானத்தை முடித்து அதன் பின்மீன்வளத் துறையின் பொறியாளர், உதவி இயக்குனர், இணை இயக்குனர் ஆகியோர் முன்னிலையில் அளந்து ஆய்வு செய்யப்படுகிறது. உரியமுறையில் பணி மேற்கொண்டதை அவர்கள் எடுத்த அளவீடு மூலம் சரி பார்த்த பின்னர் தான் மானியம் பயனாளிகளுக்கு விடுவிக்கப்படும்.

இந்த நிலையில் இப்பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்களின் ஜி.எஸ்.டி.பில் வைக்க வேண்டும் என்று கேட்டால் விவசாயி எந்த ஒப்பந்தகாரர்களிடம் பெற முடியும்? 100 சதுர அடி கொட்டகை கட்டியதற்கும், குட்டை வெட்டியதற்கும் ஜி.எஸ்.டி. வவுச்சர் கேட்கப்படுகிறது. இடு பொருட்களில் புண்ணாக்கு, தவிடு ஆகியவற்றுக்கு பில் கொடுக்கலாம். மாட்டு சாணம் வாங்குவதற்கு ஜி.எஸ்.டி.பில் எப்படி வாங்குவது? விவசாயி வீட்டில் கிடைக்கும் மாட்டின் சாணத்தை சேமித்து வைத்து போடுவார்கள். பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் அறிந்த கொத்தனார்களைக் கொண்டு அருகில் கிடைக்கும் செங்கல், மணல், சிமெண்ட் போன்றவற்றை சில்லறையாக வாங்கி தன் உழைப்பின் மூலமும் குளத்தின் வெளிமடை, உள்மடை கட்டுமானங்களை முடிக்கின்றனர். இதுபோன்ற பணிகளை முடிக்க எந்த ஒரு காண்டிராக்டரையும் பயன்படுத்துவ தில்லை. இவைகளுக்கும் ஜி.எஸ்.டி.பில் கேட்கப்படுகிறது. மீன் துறை அலுவலர்களின் நிர்பந்தத்தில் சிலர் தவறான முறையில் பணம் கொடுத்து பில் வாங்கி கொடுப்பதை மீன்துறை ஏற்றுக்கொள்கிறது. இப்படியான தவறுகளை செய்திட மீன்துறை தூண்டுகிறது.

பிற அரசுத் துறைகளில் நடைபெறும் கட்டுமானங்கள், நீர்நிலைகள் தூர்வாருதல், சாலை அமைக்கும் பணிகளை ஒப்பந்தக்காரர்கள் பணி முடித்தபின், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள்தான் **Measurement/check measurement/Super check** என்று அளவீடு செய்து ஒப்பந்த புள்ளிக்கு தகுந்தவாறு பட்டியல்தயார் செய்து பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. எந்த ஒரு அரசு ஒப்பந்தகாரர்களிடமும் அவர்கள் வாங்கிய பொருட்களுக்கோ, ஆள் சம்பளத்திற்கோ சம்பந்தப்பட்ட துறை பில்கள் கேட்பதில்லை. இப்பணியின் மதிப்பீட்டுத் தொகை முழுதும் அரசால் வழங்கப்படுகிறது. இத்துறைகளின் பொறியாளர்கள் மீது உள்ள நம்பிக்கை, மீன்துறை பொறியாளர்களிடம் இல்லையா? பின் ஏன் அவர்கள் வந்து அளவீடு செய்து சான்றளிக்க வேண்டும்? அதை மீன்துறை ஏன் ஏற்க வேண்டும்?

இத்திட்டத்தின் கீழ் புதிய மீன் வளர்ப்புக் குளம் ஒன்றுக்கு நான்கு **Aerator** கள் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் 5000 மீன் குஞ்சுகள்தான் இருப்பு செய்யப்படுகிறது. 15000 மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும்போதுதான் இந்த ஆக்சிஜன் பெருக்கிகள் தேவைப்படும். இந்த குறைந்த மீன் குஞ்சு இருப்பிற்கு இவ்வளவு செலவு தேவையில்லை. விவசாய மின் இணைப்பில் இருந்துதான் (இலவசமாக) மீன் வளர்ப்பு செய்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது பயன்படுத்தினால் அவர்கள் மிமிமி ஏ1 விகிதாச்சாரத்தில் மின் கட்டணம் செலுத்திட வேண்டும். இல்லையேல் மின் இணைப்பு துண்டிக்கப்படும். இந்த காற்று பெருக்கிகளால் சில லட்ச ரூபாய்கள் அரசுக்கும் விவசாயிகளுக்கும் இழப்பாகும்.

விவசாயிகளுக்கு அரசு மானியமாக 30 – 40 சதம் கொடுக்கிறது. மீதமுள்ள தொகையை விவசாயி தன் முதலீடாக செலவு செய்கிறார். அதுவும் 100 சதம் அளவில் கைப் பணத்தை செலவிட்டு மானியம் பின்னால் வந்தால்தான் உண்டு என்ற நிலையில் தான் மீன்துறை மானியத் திட்டம் உள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக மானியம் வழங்கப்படவில்லை. எனவே இதுபோன்ற தேவையற்ற செலவுகளை தவிர்த்து தயவு செய்து மீன் வளர்ப்பு விவசாயிகளை முறையாக வழி நடத்தி திட்டங்களை செயல்படுத்திட தாங்கள் அறிவுறுத்திட வேண்டும். மேலும் வெளி வவுச்சச்சர்கள் கேட்காமல், மீன்துறை பொறியாளர்களின் சான்றை அடிப்படையாககொண்டு செயல் படுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளார்.



ப.பரமசிவம்

### கல்குவாரி சுரங்கங்களை முறைப்படுத்தி

# மக்களையும் - உயிர் ஜீவன்களையும் பாதுகாக்குமா அரசு?

**பசுமை குலுங்கும் மரங்கள், செடிகள், கொடிகள், குளிர்ச்சியூட்டும் ஆறுகள், ஏரிகள், கடல்கள் எல்லாம் இயற்கையின் அதிசய படைப்புகள்.**

இந்த பூமி உருண்டையில் உயிர் வாழ்வது நாம் மட்டுமல்ல. நம்மைச்சுற்றிலும் உள்ள தாவரங்கள், விலங்குள், பறவைகள், பூச்சிகள், நுண்ணுயிர்கள் போன்றவையும் இந்த பூமியில் உயிர் வாழ்கின்றன. மேலும் இயற்க்கையின் புதுமையை நாடுவதில்தானே நமது மனம் அலைகிறது.

இன்று மனித குலத்தையோ மற்றபிற உயிரினங்களையோ தாக்கும் நோய்கள் பெரும்பாலும் சுற்றுபுறச் சூழல் கேடுகளாலேயே உண்டாகின்றன.

நீராலும், நிலத்தாலும் கேடுறும் வழிகளைப் பற்றியும் அவற்றால் உயிரினங்கள் உயிரினங்களின் சுகவாழ்வு பாதிக்கப்படும். இயற்க்கையால் படைக்கப்பட்ட வனங்கள்தான் உயிரினங்களை வாழ வைக்கின்றன. காற்றில்லையேல், நீரில்லையேல், தாவரங்கள் தரும் உணவுப் பொருள் இல்லையேல் உயிர்கள் இல்லை. சூழ்ந்து நின்று உயிரினங்களுக்குத் தேவையான காற்றை கொடுத்து உயிரினங்களை வாழவைக்கிறது.

‘உண்டி முதற்றே உலகின் பிண்டம்‘ என்பதற்கேற்ப உணவு இல்லையேல் உலகில் உயிரில்லை. நிலத்திலும் நீரிலும் நமக்குத் தேவையான உணவுப் பொருட்கள் உற்பத்தியாகின்றன.

அசுர வேகத்தில் உலகில் எதையும் ஆராய்ந்து செய்ய அவகாசம் இல்லை. பொதுநல போக்கு குறைந்து வருகிறது. சுயநலப் போக்கு வளர்ந்து வருகிறது. இதன் பிரதிபலிப்பு வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் நாட்டிலும் தெரிகிறது. மொத்தத்தில் மக்கள் நலம் பாழ்படுகிறது.

ஐப்பசி, கார்த்திகை போன்ற பருவ மாதங்களில் கூட மழையைக் காண்பது இப்போதெல்லாம் அறிதாகிவிட்டது. மாதம் மும்மாரி என்ற வழக்கெல்லாம் மாறி மழையைக் காண முடியவில்லை.

“புரட்டாசியில் பொன்னுரகக்காயும் மண்ணுருகப் பெய்யும்
ஐப்பசி அடை மழை”

போன்றவையும் பொருளற்றுப் போய்விட்டன. இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்?

மழைப் பெய்வதற்கேற்ற சூழ்நிலைகள் இன்று இல்லை. திரண்டு வரும் மேகங்களைக் குளிரச்செய்து மழை கொட்ட வைப்பது அற்றுப் போய்விட்டது. கேரளத்திற்கு அடுத்து மலைகளும், குன்றுகளும் நிறைந்த பூமியாக நமது தமிழ்நாடு இருந்து வந்துள்ளது. அந்த குன்றுகளுக்கு இன்று ஆபத்து ஏற்பட்டுவிட்டது. மலைகளை இன்றைக்கு அழித்து வருகிறார்கள். நகரப் பெருக்கம் வளர வளர கிராமத்திலிருக்கும் குன்றுகளையும் மலைகளையும் அழித்து வருகிறார்கள். அங்கிருந்து கிரானைட் கற்கள், ஜல்லிக்கற்கள், மண், எம்சாண்ட், பிசாண்ட், பலகை கற்கள், கட்டுக் கற்கள், என்று வகை வகையாக நவீன இயந்திரங்களை கொண்டு அதிபயங்கர வெடி வெடித்து வெட்டியெடுத்து மலைகளையே காணாமல் செய்து விடுகிறார்கள்.

மலைகளை மட்டுமா காணாமல் செய்கிறார்கள். அந்த இடத்தில் இன்னொரு மலையை கொண்டுவந்து வைத்தால் மட்டுமே நிரம்பும் அந்தளவிற்குப் பள்ளம் தோண்டிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட பள்ளங்களை எப்படி நிரப்பி இந்த பூமியை மக்கள் பூமா தேவி என்று கும்பிட்டு வருபவர்கள் இந்த பூமியை எப்படி சமபடுத்தப் போகிறார்கள். பூமியை இயற்கைக்குப் புறம்பாக இவை செயற்கையாக அதளபாதாளமாக்கி வருகிறார்கள். சுரங்க சட்டப்படி நடைபெறுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

30க்கும் மேற்பட்ட நிபந்தனைகளோடுதான் கல்குவாரி சுரங்கங்கள் ஏலம் விடுகிறார்கள். ஆனால் அதன் பிறகு நிபந்தனைகள் சரியாக கடைபிடிக்கிறார்களா? என்பதை மாதம் மாதம் பார்வையிடுகிறார்கள். யார் யார் பார்வையிடுகிறார்கள். வருவாய்த்துறை, சுரங்கத்துறை மாசுக்கட்டுப்பாட்டுத்துறை, மாவட்ட ஆட்சியரால் உருவாக்கபட்ட குழு இத்தனையும் பார்வை யிடுகிறார்கள்.

ஆனால் ஒரு கல்குவாரிகளில் கூட 30நிபந்தனைகளில் பாதிக்குமேல் செயல்படுத்துவதில்லை. இத்தனை குழுவும் மேற்பார்வையிட்டு முறைபடுத்தினால்தானே அதெல்லாம் சரியாக நடக்கும். இவர்கள்தான் மாதா மாதம் ஆய்வு என்ற பெயரில் மாமுல்தானே வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அப்படி கண்காணிப்பில்லாமல் ஏற்பட்ட விபத்துதான் திருநெல்வேலி மாவட்டத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இதற்கு முன் மதுரையில் ஏற்பட்ட கிரானைட் மோசடி, காவல் சரியாக இருந்தால் எப்படி திருடுபோகும்?

சேலம் மாவட்டம் முழுதும் அது ஒரு குட்டி கேரளம் என்றுக் கூறுவார்கள். பெரிய மலைகள், அதையொட்டிய குன்றுகள் ஏராளமாக இருக்கும். மழைவளத்திற்கு குறைவில்லாது இருந்த மாவட்டம் எல்லா வளங்களும், கனிமங்களும் கொண்டமாவட்டம் சைலம் என்பது மருவிதான் சேலம் என்றே பெயர் வந்துள்ளது. சேலமென்றாலே சைல பூமியாக இருந்தது. மண் வளத்தில் உலகத்தில் சிறந்த பூமி இந்தியா. இந்தியாவில் சிறந்த பூமி தமிழ்நாடு. தமிழ்நாட்டில் சிறந்த பூமி சேலம் என்று உலக நிறுவனம் யுனெஸ்கேவே ஆய்வு செய்து சில ஆண்டுகளுக்கு முன் வெளி யிட்டுள்ளது. அப்படிபட்ட பூமி இன்றைக்கு வறட்சி மழையில்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டம் நடுபட்டி கிராமம், வனகண்டாம் மலையையொட்டி சிறுசிறு குன்றுகள் ஏராளமாக உள்ளது. அந்த குன்றுகளைச் சுற்றி சிறுசிறு கிராமங்கள் உள்ளன. ஏழாயிரம் மக்கள் அந்த பகுதியில் விவசாயம் செய்து பிழைத்து வருகிறார்கள். அந்த பகுதியில் மட்டும் சிறிய, பெரிய கோயில்கள் 25ம், மேல்நிலைப் பள்ளி ஒன்று நடுநிலைப்பள்ளி 3, துவக்கப்பள்ளி 4, சத்துணவு கூடம் 5, அங்கன்வாடி 5 இவையெல்லாம் மூன்று கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ளது. இந்த மூன்று கிலோமீட்டர் சுற்றளவிற்குள் 8 கல்குவாரி சுரங்கங்கள் செயல்படுகிறது.

இயந்திரங்களால் உடைக்கப்படும் ஜல்லிகள் உடைக்கும் இடத்தில் கூரைப் போடாமல் வெட்ட வெளியில் உடைக்கப்படுகிறது. பாறைகளை உடைக்க சக்திவாய்ந்த தோட்டாக்களால் வெடிவைத்து தகர்ப்பதால் ஒலி மாசு ஏற்படுகிறது.

மலைகளை தகர்ப்பதால் திரண்டு வரும் மேகங்களை தடுத்து நிறுத்தி மழை பெய்வதை தடுத்து நிறுத்தியுள்ளது. காற்றுமாசால் மரம், செடி, கொடிகள், வீட்டுக் கூறைகள் என எல்லாமும் வெண்மை நிறத்தால் வெள்ளை பூச்சு பூசப்பட்டது போல் தோற்றமளிக்கிறது. தாவரங்கள் மகரந்த சேர்க்கை சேர முடியாதபடி அமுக்கப்பட்டுள்ளது. வனகண்டா மலையில் தேன் கல்பாறை உள்ளது. அதில் ஒவ்வொரு சீசனுக்கும் 10 டின் தேன் எடுக்கப்பட்டது. அது முழுதும் இன்றைக்கு அற்று போய்விட்டது.

தாவரங்கள் மகரந்தச்சேர்க்கை சேராதபடி கல்குவாரி வெடி வைப்பாலும் ஜல்லி, எம்சாண்ட், பிசாண்ட், வெட்டி வெட்ட வெளியில் அறைப்பதாலும் அதன் துகல் புகைபோல சூழ்ந்து தாவரங்களின் மீது அமுக்கி அந்த பகுதியில் விவசாயமே தடைபட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகி யிருக்கிறார்கள்.

அந்த தாவரங்கள் இல்லாததால் காற்று மாசடைந்து உயிரினங்களே சுவாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வெடிவெடித்து பாறைகளை தகர்ப்பதால் ஏற்படும் பலத்த சப்தத்தால் தற்காலிகமாக காது கேளாமை மற்றும் வெடி சப்தத்தால் செவி தாக்கப்படுவதால் பலத்த ஓசையால் மனநிலை பாதிக்கப்படும். நரம்புகள் பாதிக்கப்படும். இதனால் மனதை ஒருமைப்படுத்தி செய்ய வேண்டிய வேலைகள் பாதிக்கப்படும். சிந்தனைத் திறன் பாதிக்கப்படும். செயல்திறனும் பாதிக்கப்படும். இரத்தத்துடிப்பு சுவாசம் இரத்த அழுத்தம் வியர்வை முதலியவை அதிகரிக்கும். வாந்தி, மயக்கம், களைப்பு, தூக்கமயக்கம் போன்றவை உண்டாகுமென்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அதே போல் காற்று மாசால் தீராத மார்புச்சளி, நுரையீரல் புற்றுநோய், ஆஸ்துமா, இரத்தஓட்டம் பாதிப்பு போன்ற நோய்கள் உண்டாவதற்கு வாய்ப்புள்ளதாக கூறுகிறார்கள். மூன்று கிலோமீட்டர் சுற்றளவிற்குள் 8 கல்குவாரி சுரங்கங்கள் அமைந்துள்ள நடுப்பட்டி ஊராட்சி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும். இதே நிலைதான் நாடுமுழுதும் உள்ளது. மாநில ஒன்றிய அரசுகள் கவனித்து மக்களையும் உயிர் ஜீவன்களையும் பாதுகாக்குமா?

### கேஸ் குடோன் கட்டுவதை எதிர்த்து

# சாலை மறியல்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, கிளவிபட்டி ஊராட்சி, செண்பகபேரி கிராமத்தின் நடுவில் வீடு கட்டுவதற்கு இடம் வாங்கப்பட்டு, தற்போது கேஸ் குடோன் கிட்டிங் கட்டப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சாலை மறியல் நடைபெற்றது. கிளை செயலாளர் செல்வம் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பு செயலாளர் கரும்பன், துணைச் செயலாளர் சேதுராமலிங்கம், கோவில்பட்டி தாலுகா செயலாளர் பாபு, நகர செயலாளர் சரோஜா, மாவட்ட நிர்வாகக்குழு பரமன், முன்னால் எம்.எல்.ஏ. ராஜேந்திரன், விவசாய சங்கம் லெனின் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



டாக்டர் பி.கே.காங்கோ

**நலவாழ்வு பொருளாதாரம் நிலவிய காலகட்டத்தில், தொழிற் சங்கங்களின் தற்போதைய அமைப்பும் உத்தியும் உருவாயின; அன்றைய தொழில் நுட்பம், பெரும் உற்பத்தி அலகுகளுடன் பல நூறு தொழிலாளர்களைப் பணியமர்த்திய பெரிய கார்ப்பரேஷன்கள் உருவானதைக் கண்டன. மேலும், தொழிலாளர்களின் திறனை ஒன்றுமில்லாததாக்கி பிரிவு, பிரிவாக பெருமளவு உற்பத்தி செய்து வரிசையாய்ப் பொருத்தும் முறையைப் புகுத்திய (ஃபோர்டு மோட்டார் கம்பெனியின்) ஃபோர்டிசமும் அப்போது கண்டதுதான்.**

ஆனால் தொடர்ச்சியாக உருவான வர்க்கப் போராட்டம், அன்று நிலவிய சோஷலிச உலகுடனும்கூட தங்கள் கூட்டுபேர சக்தியை அதிகரிப்பதில் உற்பத்தியை நிறுத்தக் கூடிய தொழிலாளர்களின் சக்தி அதில் முக்கியமான அம்சம் என்பதைக் கண்டது; அது, முதலாளிகளுக்கு எதிரான தொழிலாளர்கள் சக்தியை அதிகரிப்பதில் உதவியது.

1917 ரஷ்யப் புரட்சியின் வெற்றியுடன், தொழிலாளர்கள் அரசு நிர்வாகத்தை எடுத்துக் கொண்டு, நாட்டின் வணிகம் முதலான அனைத்தையும் நடத்தலாம் என்று வழங்கிய செய்தி தெளிவாகவும், உரத்தும் ஒலித்தது; இது, கூட்டுபேர சக்தி மிக்க தொழிற் சங்கங்களுக்குச் சலுகைகள் வழங்க முதலாளிகளையும் கூட நிர்பந்தித்தது.

### உற்பத்தியும் உயர்ந்தது, ஊதியமும் உயர்ந்தது

1929–31ம் ஆண்டுகளின் பெரும் பொருளாதார வீழ்ச்சி, நெருக்கடியின் பாடங்களும் முக்கியத்துவம் உடையது. நுகர்வோர்களின் சக்தி வளர்ந்து விரிவடையவில்லை எனில், முதலாளித்துவத்தையும் இருள் சூழும்; அப்போது நடந்த பெரும் போராட்டங்களை மறந்துவிட முடியாது. தொழிலாளர் வர்க்கம் மற்றும் அதன் ஆதரவாளர்களின் தியாகம் முதலாளித்துவ வர்க்கத்தைத் தொழிற்சங்கங்களுடன் விவாதிக்க நிர்பந்தித்ததில் முக்கிய அம்சமாகும்.

எனவே 1930 முதல் 1975வரையான காலகட்டத்தில் உற்பத்தி அதிகரித்ததுடன்கூட ஒட்டுமொத்த தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான ஊதியமும் உயர்ந்தது; மேலும், அவர்களுக்கு இடையேயான வருமான சமத்துவமின்மை உயர்வதையும் மட்டுப்படுத்தியது.

19 மற்றும் 20ம் நூற்றாண்டகளில் எட்டுமணி நேர வேலை நாளுக்காகத் தொழிற் சங்கங்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டங்கள், காலனியத்திற்கு எதிரான தேசிய எழுச்சியில் அவர்கள் பங்கேற்றது, சோஷலிச உலகம் நிலவியது மற்றும் அன்றைய தொழில் நுட்பத்துடன்கூட 1929–31 ஆண்டு பொருளாதாரப் பெரு வீழ்ச்சியின் அனுபவங்கள் எல்லாம் தொழிற் சங்கங்களின் வலிமையை அதிகரித்து உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தன.

ஆனால் கம்யூனிஸ்ட்கள், ஜனநாயகவாதிகள், சோஷலிஸ்ட்டுகள் என்ற அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் பிளவுகளை உண்டாக்கின; இப்பிளவுகள் மட்டுமின்றி, அதிதீவிர தேசியம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தை அரசியலற்றதாக்கும் முயற்சிகள் தொழிலாளர் வர்க்கத்தின் பேரசக்தி மற்றும் அரசியல் வலிமையை கட்டுப்படுத்த முதலாளித்துவத்தை ஊக்கப்படுத்தின.

முதலாளித்துவத்தின் சிந்தனை போக்கை "மேலாதிக்கம்," ஊடகங்களைக் கட்டுப்படுத்தி அன்றிருந்த சோஷலிச நாடுகளுக்கு எதிராகப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிடும் போக்கு என வர்ணிக்கலாம்; அது முதலாளித்துவ வர்க்கத்தின் அதிகாரத்தையும், சமூகத்தின் மீதான செல்வாக்கு மற்றும் இறுதியாக அரசில் அதன் அதிகாரத்தைத் தக்க வைப்பதிலும் உதவியது. ஆனால், எந்த அரசும் தொழிற்சங்கங்களின் சக்தியைப் புறக்கணிக்க முடியாது, அதனுடன் சமரசம் செய்து கொண்டே ஆக வேண்டும் என்பது தெளிவான விஷயம்.

ஆனால் அத்தகையச் சமரசத்திற்குப் பிறகும் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெறவே செய்தது; தொழிலாளர் வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்களின் அதிகாரத்தை வரையறுத்துக் கட்டுப்படுத்த முதலாளித்துவவாதிகளும் தொழில் நுட்பம், அரசு அதிகாரம் முதலியவற்றைப் பயன்படுத்தவே செய்தன.

### தொழிற்சங்கங்களின் போக்கு

தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக மட்டும் ஒன்று சேர்ந்த தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்த, புதிதாக விடுதலை அடைந்த பல பழைய காலனிய நாடுகளில் மதம், சாதி, மொழி மற்றும் அல்லது பிற இனப் பிரச்சனைகள் தாராளமாக ஊக்குவிக்கப்பட்டன. இந்த இடத்தில்தான்

**ஒருவருக்கு அதிகாரம், மேம்பட்ட வாழ்க்கைத் தரம், மற்றும் அதன் மூலம்அதிகப் பணத்தைச் சம்பாதித்து தனது சொந்த வாழ்க்கை மேம்பாடு அடைய வைக்கலாம் என்பன போன்ற முதலாளித்துவத்தின் சிந்தனை செல்வாக்கு செலுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதைக் காணலாம். இதன் காரணமாக தொழிற்சங்கங்கள் அனைத்தும் தங்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு அதிகப் பணப் பலனைப் பெற்றுத் தருவதில் தங்களுக்குள் போட்டியிட்டன. மற்ற முக்கிய பிரச்சனைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.**

பொதுத்துறைகள் மூலம் அளிக்கப்படும் நல்ல சேவைகள் புறக்கணிப்பு மற்றும் அலட்சியம் காரணமாக தனியார் பள்ளிகள், மருத்துவ மனைகள், போக்குவரத்து முதலியன தனியார் மூலம் நிர்வகிக்கப்படும்போது மேம்பட்டு இருப்பதாகக் கருதப்பட்டது. எனவே ஒழுங்குபடுத்தலை அரசிடம் விட்டுவிட வேண்டும் எனக் கருதப்பட்டது மட்டுமின்றி மக்களும் 'அரசாங்கத்தின் வேலை, தொழில் நடத்துவது அல்ல' எனச் சொல்லத் தொடங்கினர்.

### உற்பத்தி முறையில் மாற்றம்

வணிகம் தொடர்பான நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் மூலம் அரசு தனது வருவாயையும் வரியையும் உயர்த்த முடியும், அதன் மூலம் மக்களுக்கு உதவுவதில் அரசு மேம்பட்ட நிலையில் இருக்க முடியும் என உணரப்பட்டது.

அதே நேரத்தில் புதிய தொழில்நுட்பத்தின் வரவும், அதனை முதலாளித்துவ வர்க்கம் கட்டுப்படுத்தியதும் புது வகையான உற்பத்தி செயல்பாடுகளுக்கு வித்திட்டது.

ஒரே கூரையின் கீழ் ஒரு பொருள் முழுமையாக உற்பத்தி செய்யப்பட்ட நாட்கள் கடந்த காலமானது; பகுதி பகுதியாகப் பிரித்து உற்பத்தி நிகழ்முறை செயல்பாடுகள் பல்வேறு மையங்களில் மேற்கொள்ளப்பட்டன;

இது பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தி மையங்களை நிறுவ உதவியது. (இப்படிப் பல்வேறு மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பாகங்கள் ஓரிடத்தில் பொருத்தப்பட்டு முழுமை அடைந்தது.) இந்த மாற்றம் படு வேகமானது.




### மாற்றத்தின் மோசமான விளைவு

சுய சார்பு, இறக்குமதிக்கு மாற்று (அதாவது வளர்ந்த நாடுகளைச் சார்ந்து இல்லாமை) முதலான பழைய தேசியப் பொருளாதாரச் சிந்தனை நிகழ்முறை மாற்றப்பட்டது; வெளிநாட்டுப் பணம், வெளிநாட்டுச் சந்தை, ஏற்றுமதித் தொழில்கள் ஊக்கப்படுத்தப்பட்டன. இந்தப் புதிய போக்கால் நலவாழ்வுப் பொருளாதாரக் காலத்தின்போது உருவான பழைய கட்டமைப்புகள் மெல்ல பிரித்தெறியப்பட்டன. ஒப்பந்த கான்டிராக்ட் முறைமை அதிகரித்தது. நிரந்தரமானத் தொழிலாளர்கள், நிரந்தரமான பணிகள் மெல்ல பழங்கதை வரலாறாகத் தொடங்கின. தொழிலாளர் நலச் சட்டங்களை மாற்றவும், தொழிலாளர்களின்

# வீடற்ற மக்களுக்கு குடிமனைப்பட்டா, அடுக்கு மாடி குடியிருப்பு வழங்கிடுக!

அனைத்திந்திய தலித் உரிமை இயக்கம் புதுச்சேரி மாநில பொதுக்குழு கூட்டம் மே 21 அன்று முதலியார்பேட்டை வ. சுப்பையா இல்லத்தில் நடைபெற்றது. மாநில பொதுச்செயலாளர் சே.எழிலன் கூட்டத்தின் நோக்கம் பற்றி வரவேற்புரை ஆற்றினார். மாநில கௌரவத் தலைவர் சிவ. வீரபத்திரசாமி தலைமை தாங்கினார். தேசிய குழு முடிவுகள் மற்றும் எதிர்கால கடமைகள் குறித்து அகில இந்திய தலைவர் அ. ராமமூர்த்தி பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புதுச்சேரி மாநில செயலாளர் அ. மு. சலீம் கூட்டத்தை வாழ்த்திப் பேசினார். தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் பொதுச் செயலாளர் மு. வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர். விஸ்வநாதன், தலித் உரிமை இயக்க மாநில தலைவர் து. ராஜா, மாநில பொருளாளர் வை.கங்காதரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தலித் மக்கள் வாழ்விடங்களில் ரோடு வசதி, குடிநீர் மற்றும் சைடு வாய்க்கால் வசதிகளை அமைத்துக் கொடுத்து அவர்கள் வாழ்விடத்தை மேம்படுத்திட வேண்டும். வீடற்ற மக்களுக்கு இலவச மனைப் பட்டா, அடுக்குமாடி குடியிருப்பு வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறப்புகூறு நிதி திட்டத்தை முறையாக முழுமையும் செயல்படுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும், இலவச கல்வித் திட்டத்தின் மூலம் வழங்கவேண்டிய பணத்தை உரிய காலகட்டத்தில் பள்ளிகளுக்கு வழங்கிட வேண்டும். பள்ளி கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் வழங்கப்படும் கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பிக்கும் தேதியை கால நீட்டிப்பு செய்ய வேண்டும். பணிபுரியும் அரசு ஊழியர்களின் பணி பாதுகாப்பு உறுதிப்படுத்தி அவர்களுக்கு வழங்கவேண்டிய பணி உயர்வு உரிய காலகட்டத்தில் வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**மூலதனத்தை ஒழிப்பதே துல்லியமான சமூகப் புரட்சி ஆகும். அது மொத்த உற்பத்தி முறையிலும் மாற்றத்தை உள்ளடக்கியிருக்கிறது. சமூக புரட்சி ஏற்படாமல் அரசை ஒழிக்க முடியாது. - ஏங்கல்ஸ்**




**உடுமலைப்பேட்டை:** பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகளை தான் தோன்றித்தனமாக உயர்த்தி வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து, திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் ஆர்பாட்டம் நடைபெற்றது. ரணதேவ் தலைமை வகித்தார். எஸ்.குருவம்மாள், சௌந்திரராஜன் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் ஆகியோர் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தோழர்கள் ஒன்றிய அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

**வேலூர் :** இந்திய தேசிய மாதர் சம்மேளனம் வேலூர் மாவட்ட குழு சார்பில், சமையல் எரிவாயு டீசல் விலை உயர்வை கண்டித்து வேலூர் தலைமை அஞ்சல் நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த கண்டன ஒப்பாரி ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் காவேரி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் சரோஜா வரவேற்றுப் பேசினார். இதில் மாநில குழு



# புதிய சூழ்நிலையில் தொழிற் ங்களுக்கான புதிய உத்தி

பணிகளுக்குத் திறனும் அனுபவமும் தேவைப் படுகிறது; அதில் பெரும்பான்மை தொழிலாளர்களுக்குப் போதாமை உள்ளதால், அவர்கள் உலகத் தொழிலாளர் அமைப்பு, ஐஎல்ஓ, வரையறுத்துள்ள நிலையில்லாத தரமில்லாத பணிகள் மற்றும் குறைவான ஊதியம் உள்ள பணிகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

## தொழிலாளி முதலாளி புதிய உறவு

பணியாளர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு இடையே ஊபர், ஓலா, அமேசான், ஸ்விகி, ஸோமாடோ போன்றவற்றில் நாம் பார்க்கும், புதிய உறவு உருவாகத் தொடங்கியது. சுய வேலைவாய்ப்பு, ஆதிக்கம் செலுத்தும் சேவைப் பிரிவு மற்றும் அதிகரிக்கும் கான்டிராக்ட் முறை அல்லது முகமை அல்லது மூன்றாவது நபர் மூலம் பணியமர்த்தப்படுவது தற்போது தொழிற்சங்கங்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

அரசும்கூட தற்போது ஸ்கீம் ஊழியர்கள் என மட்டுமே வேலைக்கு எடுக்கிறது; (அரசின் ஒரு ஸ்கீம் முடிந்ததும் அந்தத் திட்டம் சார்ந்த பணியாளர்களின் வேலைவாய்ப்பும் முடிந்து போகும்.) ஸ்கீம் ஊழியர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க மறுக்கும் அரசு, அவர்களுக்கு மதிப்பு ஊதியமாகச் சொற்பத் தொகையை அளிப்பதால் தொழிலாளர் நலச் சட்டங்கள் மூலம் ஸ்கீம் ஒர்க்கர்கள் எந்த நீதியும் பெற முடியாது போகிறது.

அங்கன்வாடி, மதிய உணவுத் தொழிலாளர்கள், ஆஷா ஊழியர்கள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள் இதற்குச் சிறந்த உதாரணமாவர். ஸ்கீம் ஒர்க்கர்களை ஒன்று திரட்டி இயக்கம் கட்ட ஏஐடியுசி பேரமைப்பு முயல்கிறது. அதுபோல மற்ற சங்கங்களும் தீவிரமாக ஒன்று திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. உண்மையில், பெரும்பான்மை மாநிலங்களில் ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கத்தில் ஸ்கீம் பணியாளர்களின் திரண்ட பங்கேற்பு முக்கியமாக மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

## புதிய சூழ்நிலையில் சவால்

புதிய சூழ்நிலையின் சவாலை உணர்ந்துள்ள தொழிற் சங்கங்கள் 1984லிருந்து தேசிய மட்டத்தில் ஒன்றுபட்ட தொழிற் சங்கப் போராட்டங்களை நடத்த கூடுதலான முயற்சிகளை மேற்கொள்கின்றன. நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள், வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தங்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் ஐக்கிய அமைப்பு முதலியன மிகவும் முக்கியமான வளர்ச்சிப் போக்குகளாகும். மாநில மட்டத்தில் ஸ்கீம் தொழிலாளர்களும்கூட ஒன்றுபட்ட போராட்டங்களை நடத்தியுள்ளது முக்கியமானதாகும்.

இருப்பினும், தொழிற்சாலை மட்டத்தில் முதலாளித்துவம் பயன்படுத்தும் புதிய உத்திகள் வருமாறு: (புதிய ஊழியர்களை நியமிப்பதற்குப் பதில்) பயிற்சியாளர்களை நியமிப்பது, நீம் (தேசிய வேலைவாய்ப்புத் தகுதியை அதிகரிக்கும் திட்டம்) திட்டத்தின் கீழ் பணியமர்த்துவது, காஷுவல் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை அமர்த்துவது, ஜூனியர் மேனேஜ்மெண்ட் கேடர் (அதிகாரிகளை) நியமிப்பது எனத் தந்திரங்களைப் பயன்படுத்தி அவர்களை உற்பத்தியில் ஈடுபடுத்துகிறது. மேலும் நவீன இயந்திரங்களையும் பயன்படுத்துகிறது. சங்கம் சேரும் நிரந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது, அவர்கள் பணியை நிறுத் துவது அல்லது தொழிற்சங்க வேலைநிறுத்தத்தின் தாக்கம் பயனற்றதாக்கப்படுகிறது.

செயற்கை அறிவு, ரோபோக்கள் மற்றும் கணிணி மூலம் இயக்கப்படும் இயந்திரங்கள் பல பணிகளையும் இன்று வழங் கொழிந்தனவாக ஆக்கி, தொழிலாளர்களின் திறமைகளைப் பயனற்றதாக்கிவிட்டன. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை உற்பத்திச் செயல்பாடுகளின் கட்டுப்பாடு தொழிற்சங்கங்களின் செல்வாக்கின் கீழ் இருந்தன; அவை தற்போது மேனேஜ்மெண்ட் கட்டுப்பாட்டில் சென்று விட்டன.

## புதிய தாக்குதல்கள்

தற்போது தொழிலாளர்களின் பணிநேரத்தை அதிகரிப் பதற்கான முயற்சி நடக்கிறது. உற்பத்தி உயர்வுடன் புதிய தொழில் நுட்பம் வரும் போது, மிகச் சுலபமாகத் தொழிலாளர்களின் பணி நேரத்தைக் குறைக்க முடியும்; தொழிலாளிகளுக்கு நல்ல பணிச் சூழலை வழங்கிட முடியும்; ஆனால் லாப நோக்கம் அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தவிடாது தடுக்கிறது.

அதிகரிக்கும் வேலை இல்லாத் திண்டாட்டம் வேலை நேரத் தைக் குறைத்து, கூடுதல் நபர்களைப் பணியமர்த்தக் கோருகிறது. அன்று எட்டு மணி நேர கோரிக்கைக்காக நடத்தப்பட்ட உறுதி யான நிலைத்த போராட்ட இயக்கம் போல இன்றும் நடத்த வேண் டிய தேவை உள்ளது. சில வளர்ந்த நாடுகளில் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தக் கோரும் இயக்கங்கள் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் ஒரு மணி நேரத்திற்குக் குறைந்தபட்ச ஊதியம் 15 அமெரிக்க டாலர்கள் என்ற கோரிக்கை, முக்கியமான ஒன்றாக பொதுத் தேர்தலில் பிரச்சனையாகப் மாறியுள்ளது.

## நமக்குத் தேவை புதிய உத்தி

இந்தியாவில் கோரிக்கை எழுப்பினாலும், தேர்தல்களில் முக்கிய பிரச்சனையாக்குவதில் நாம் தோற்றுவிடுகிறோம். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிற்சங்கங்கள் மற்றும் சமூகத்தின் கண்ணோட்டம் பணி நிரந்தரம் கோருவது, ஊதிய உயர்வு மற்றும் வேலைகள் மூலம் சமூகப் பாதுகாப்பு என்பதாக இருந்தது. ஆனால் இந்தக் கண்ணோட்டம் தேய்ந்து வருவதால் நாம் புதிய உத்திகளை அவசியம் வகுக்க வேண்டும்.

பென்ஷன், மருத்துவ வசதிகள், கட்டுப்படியாகக்கூடிய வீட்டு வசதி மற்றும் அனைவருக்கும் போக்குவரத்து போன்ற சமூகப் பாதுகாப்புக் கோரிக்கைகளை நாம் வற்புறுத்த வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்காக நாம் தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும். பாரம்பரியப் போராட்ட மாதிரிகளோடு, சுய வேலை செய்பவர்கள் என அழைக்கப்படுபவர்கள் மற்றும் திரட்டப் படாத தொழிலாளர்களைக் கவர ஒரு புதிய உத்தி வகுப்பதே தற்போதைய உடனடித் தேவை. கார்ப்ரேட்டுகளிடம் பணியாற்றும் தொழிலாளர்களைச் சங்கமாகத் திரட்டி அமைப்பது மற்றும் அதன் வலிமையின் மூலம் அவர்கள் ஊதியத்தை உயர்த்தவும் சமூகப் பாதுகாப்பைப் பெறவும் அரசு மற்றும் கார்பரேட்களைக் கட்டாயப்படுத்த எண்ணும் கண்ணோட்டம் தற்போது ஒரு நெடுந்தொலைவு கனவாகி விட்டது !

**சுய வேலை செய்பவர்கள், திரட்டப்படாத உழைப்பாளிகள், அற்பமான கூலியுடன் அமைந்த நிரந்தரமற்ற பணிகளை எந்தச் சமூகப் பாதுகாப்பும் இன்றி செய்பவர்களே அதிகமாக நிறைந்த ஒரு புதிய சமுதாய அமைப்பு உருவாகிவரும் காட்சியே இன்றைய எதார்த்தம். இந்தச் சூழலில் மேலான மனித வாழ்விற்காக வருங்காலத்தை எதிர்கொள்ள தொழிற்சங்கங்களுக்குப் புதிய கோரிக்கைகளை வற்புறுத்தும் ஒரு புதிய உத்தியுடன் கூடிய அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.**

## சபதமேற்போம்

மே 1 சர்வதேச உழைப்பாளர் தினமாகக் கொண்டாடிவரும் நாம் அறிவோம், அது வெற்றிகரமான போராட்டத்தின் விளைவு ! 8மணி நேர வேலை வரையறுப்புக்காகத் தொழிலாளர்கள் நடத்திய நீண்ட உறுதியான போராட்டம் அது. உருவாகிவரும் புதிய சூழல் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்களைப் புதிய உத்தியை வகுப்பதற்கு ஊக்கம் அளிக்கும்; அதே நேரம் நமது முந்தைய போராட்ங்களிலிருந்து நாம் உற்சாகம் பெறுவோம். நமது முந்தைய போராட்டங்களிலிருந்து மேலும் வலிமையான தொழிற்சங்கங்கள் உருவாயின, தொழிலாளர்களுக்கு மேம்பட்ட வாழ்வு சாத்தியமானது, மேலும் நலவாழ்வு அரசுகள் அமைந்தன. உருவாகும் புதிய சூழலிலும் அது சாத்தியம், நம்மால் முடியும் சபதேமேற்போம் !

நன்றி : *நியூஏஜ் (மே 15–21)*

கூட்டுபேரச் சக்தியைக் குறைக்கவும் திட்டமிட்ட முயற்சிகள் நடத்தப்பட்டன.

## பறிபோகும் பணிகள்

சமத்துவமின்மையின் வேகமும் அதிகரித்து வளர்ந்தது. உலகின் செம்பாதிக்கும் அதிகமான உலகின் மொத்த செல் வத்தை வெறும் ஒரு சதவீதத்திற்கும் குறைவான நபர்கள் கட்டுப்படுத்தினர்; மேலும் 4வது தொழில் புரட்சி என்று அழைக்கப்படும் புதிய தொழில் புரட்சி தற்போது இருக்கும் பணிகளில் 50 சதவீதத்தை இல்லாது ஒழித்துவிடும் சாத்தியம் உள்ளது என உரிமை கோரப்படுகிறது. சந்தேகமில்லை, புதிய பணிகள் உருவாக்கப்படுகின்றன; ஆனால் அந்தப்




# எரிவாயு விலை ...த்து ஆர்ப்பாட்டம்

உறுப்பினர் முன்னாள் எம்எல்ஏ.ஜி .லதா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். ஒப்பாரி ஆர்ப்பாட்டத்தில் பாத்திமா, செல்வராணி, ரோஸி, சூரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஆரல்வாய்மொழி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆரல்வாய்மொழி கிளையின் சார்பில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை ஏற்றத்தை கண்டித்து மீன் மார்க்கெட் அருகில் பி.விஜயலட்சுமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து ஆர்.எஸ்.முத்து, ஆர்.கே. இசக்கிமுத்து பேசினர். அருள்குமார், இந்திய மாதர் தேசிய சம்மேளன மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கல்யாணசுந்தரம் பேசினர்.

போராட்டத்தை முடித்து வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.இசக்கிமுத்து பேசினார்

# சுமைதூக்கும் தொழிலாளர் சங்க பேரவைக் கூட்டம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக தூக்கும் தொழிலாளர் சங்கத்தின் 36 ஆவது ஆண்டு பேரவை கூட்டம் தஞ்சாவூரில் மாவட்ட சங்க அலுவலக கூட்ட அரங்கில் சுமைதூக்கும் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் 36ஆவது பேரவை கொடியினை வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொதுச்செயலாளர் க.அன்பழகன் ஏற்றிவைத்தார். மாநில இணைப் பொதுச் செயலாளர் ஜெ.குணசேகரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.தியாகராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார் வேலை அறிக்கை வாசித்தார். வரவு செலவு அறிக்கையை மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன் சமர்ப்பித்தார். பேரவையில் இறந்த 23 தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் 2 லட்சத்தி முப்பதாயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது . விவசா யிகள் இயக்க தலைவர்கள் முத்து உத்ராபதி, பா.பாலசுந்தரம், முன்னாள் இளைஞர் பெருமன்ற தலைவர் மு.அ.பாரதி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, அரசு போக்குவரத்து சங்க மாநில துணைத்தலைவர் துரை.மதிவாணன், விவசாய தொழிலாளர் சங்க தலைவர்கள் ஜி.கிருஷ்ணன், சி.பக்கிரிசாமி, அரசுப் பணியாளர் சங்க முன்னாள் தலைவர் என்.பாலசுப்பிர மணியன் ஆகியோர் பேரவையை வாழ்த்தி பேசினர்.

பேரவையில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் நியாயமான கூலிக்காக பலகட்ட போராட்டங்கள் நடத்தி வந்த நிலையில் தற்போதைய தமிழ்நாடு அரசு மூட்டை ஒன்றுக்கு 3ரூபாய் 25 காசு என்றுவழங்கப்பட்ட கூலியைரூபாய்10 ஆக உயர்த்திவழங்கியதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும், நெல் கொள்முதலில் ஆன்லைன் பதிவு உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகளை ஒன்றிய அரசு புகுத்த முற்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. விவசாயிகள் நலன் பாதிக்கப்படாமல் வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்த வேண்டும், நெல் கொள்முதல் நிலையங்களில் அர்ப்பணிப்புடன் சொற்ப கூலி பெற்றுக்கொண்டு பல்லாண்டு காலமாக பணியாற்றுகின்ற சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு வருங்கால வைப்பு நிதி திட்டத்தை அறிவித்து செயல்படுத்த வேண்டும். அவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



**‘அரசு’ என்ற வார்த்தை அரசாங்க இயந்திரத்தை குறிக்கிறது அல்லது சமூகத்திலிருந்து உழைப்புப் பிரிவினையின் மூலம் பிரிக்கப்பட்ட விசேஷமான உயிரினமாக அது இருக்கின்ற அளவுக்கு குறிக்கிறது. - மார்க்ஸ்**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# இடைக்கமிட்டி மாநாடுகள்

**அம்பத்தூர் பகுதிக் குழு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் பகுதிக்குழு 18வது மாநாடு மீனாட்சி மினி ஹாலில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மறைந்த தோழர் ஜனசக்தி கே.பன்னீர்செல்வம் அரங்கம், ஏ.பெரியண்ணன் நுழைவு வாயில் அமைக்கப்பட்டது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன் மாநாட்டு கொடியை ஏற்றினார். தலைமைக்குழுவாக ப.மாரியப்பன், ஆர்.லோகநாதன், எம்.மனோகரன், என்.செல்வி ஆகியோர் செயல்பட்டனர். மூத்த தோழரும் விடுதலைப் போராட்ட வீரருமான வி.ராதாகிருஷ்ணன், என்.ஜெ.ராமன், கே.திலகர், எம்.கோவிந்தராஜ், பி.அமிர்தலிங்கம், ஆர்.வேலு, எம்.ஏ.பழனியப்பன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர். மாநாட்டை துவக்கி வைத்து மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் அரசியல், ஸ்தாபனம் குறித்து உரையாற்றினார். செயலாளர் வேலை அறிக்கையை மோ.ராமதாஸ் முன்வைத்தார். ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் மு.சம்பத், செயலாளர் மு.வரதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி மாநாட்டு நிறைவுரையாற்றினார்.

மாநாட்டில் செயலாளராக ஆர்.விஜயகுமார், துணைச் செயலாளர்களாக ஆர்.லோகநாதன், எம்.இம்ரான், பொருளாளராக என்.செல்வி நந்தகுமார் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

அம்பத்தூர் – சென்னை – திருத்தணி தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி செப்பனிட வேண்டும். அம்பத்தூரில் ஆண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி, அரசு கலை அறிவியல் கல்லூரி அமைக்கப்பட வேண்டும். 5 லட்சம் மக்கள் கொண்ட அம்பத்தூர் நகரில் அரசு பொது மருத்துவமனை அமைக்க வேண்டும். பாதாள சாக்கடைத்திட்டம், மழைநீர் கால்வாய் திட்டங்கள், குடிநீர் கிடைக்க ஆவன செய்திட வேண்டும், மங்களபுரம் பகுதியில் உள்ள விளையாட்டுத் திடலை அரசு கையகப்படுத்தி ஸ்டேடியம் அமைத்து தர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தஞ்சை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய 20வது மாநாடு தஞ்சை ஜீவா அரங்கில் ஏ.ஆரோக்கியமேரி தலைமையில் நடைபெற்றது. மூத்த தோழர் எஸ்.அன்னப்பொட்டு கட்சி கொடியேற்ற, கே.தவமூர்த்தி அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். எம்.சொக்கலிங்கம் வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்பிரமணியன் தொடக்க உரையாற்றினார். வேலை அறிக்கையை ஜி.ராமலிங்கம் முன்மொழிந்தார்.

மாநாட்டை வாழ்த்தி மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி.கிருஷ்ணன், கலை இலக்கியப் பெருமன்றத்தை சேர்ந்த சி.பாஸ்கர், தஞ்சை மாநகர கட்சி செயலாளர் ஆர்.பிரபாகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தஞ்சை மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி சிறப்புரையாற்றினார். மாநாட்டில் ஒன்றியச் செயலாளராக ஜி.ஜார்ஜ் துரை, துணைச் செயலாளராக கே.தவமூர்த்தி, பொருளாளராக ஜி.ராமலிங்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தஞ்சை–பட்டுக்கோட்டை–அரியலூர் ரயில் பாதை திட்டத்தை அமல்படுத்த வேண்டும், காவிரி டெல்டா ஆறு, குளங்களை, தூர் வாறும் பணிகளை ஜூன் 12க்குள் நிறைவேற்ற வேண்டும், தஞ்சை தாலுகா காவல் சரகத்தை 2 ஆக பிரித்து செயல்படுத்த வேண்டும், வல்லம் பேரூராட்சி பகுதியில் வேளாண் உபகரணங்கள் தயாரிக்கும் தொழில்களை சிப்காட் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**மதகொண்டப்பள்ளி:** கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதி மதகொண்டப்பள்ளி பகுதி மாநாடு மதகொண்டப்பள்ளி கிராமத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் பாண்டு தாக்கல் செய்தார். புதிய ஒன்றிய செயலாளராக, பின்னமங்கலம் ஒன்றிய கவுன்சிலர் பிரஷாந்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை செயலாளராக, பேளகொண்டப்பள்ளி துணை தலைவர் மஞ்சு மற்றும் வெங்கட்ராஜ், பொருளாளராக சாக்கீரியஸ் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியாக தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தியாகங்களையும், வரலாற்றையும் பேசினார்.

இந்த மாநாட்டில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பூதட்டியப்பா, பழனி, சின்னசாமி, சிவசங்கர், மாதையன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**இராயக்கோட்டை:** கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி இராயக்கோட்டை பகுதி மாநாடு இராயக்கோட்டை நகரத்தில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்கமாக கட்சி கொடியேற்றி கோஷங்கள் எழுப்பப்பட்டன. புதிய கமிட்டி அமைத்து புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாநாட்டை வாழ்த்தி தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் மாநிலக்குழு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வேப்பனப்பள்ளி :** கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதி இராயக்கோட்டை பகுதி மாநாடு இராயக்கோட்டை நகரத்தில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்கமாக கட்சி கொடியேற்றி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

புதிய கமிட்டி அமைத்து புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கப்பட்டது. மாநாட்டை வாழ்த்தி தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் சிறப்புரையாற்றினார். மாநாட்டில் மாநிலக்குழு மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**பர்கூர்:** பர்கூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது வட்ட மாநாடு பவுன்ராஜ், சிவகுமார், கல்பனா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வி.ச. மாநிலக்குழு உறுப்பினர் கண்ணு மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார். மாரியப்பன் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். ஜீவானந்தம் வரவேற்றார். மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மோகன், முனிசாமி, ரஜினி, குணசேகரன் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினர். மாநாட்டில் 19 வட்ட குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில், எண்ணேகொல்புதூரில் இருந்து படேதலாவ் ஏரிக்கு வாய்க்கால் வெட்டும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும், பர்கூர் தேங்கி நிற்கும் கழிவு நீரை அகற்ற வேண்டும், மல்லப்பாடியிலிருந்து மரிமான பள்ளிக்கு செல்லும் சாலையில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டும் ,கிருஷ்ணகிரி வழியாக ஜோலார்பேட்டை ஒசூர் ரயில் பாதை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**செங்கோட்டை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கோட்டை தாலுகா 26வது மாநாடு காமாட்சி நினைவரங்கத்தில் எஸ்.சுந்தர், கே.பழனிச்சாமி, இ.மாரித்தங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட கௌரவத் தலைவர் ஏ.சாமி மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்து மாநாட்டை துவக்கி வைத்தார். தாலுகா செயலாளர் எஸ்.மாரியப்பன் வேலை அறிக்கை வாசித்தார். மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை அரசியல் உரை நிகழ்த்தினார். பின்னர் 15 பேர் கொண்ட புதிய தாலுகா குழு தேர்வு செய்யப்பட்டது. தாலுகா செயலாளராக எஸ்.ஆழ்வார் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். மாநாட்டில் ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் தி.சுப்பையா, மாநில குழு உறுப்பினர் பி.எஸ்.எஸ்.போஸ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவன், மாவட்ட குழு உறுப்பினர் கிட்டப்பா, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் சமுத்திரக்கனி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நகரச் செயலாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார். தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு கொண்டு செல்லப்படும் கனிம வளங்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும், செங்கோட்டை அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவரை உடனடியாக நியமிக்க வேண்டும், தற்காலிக தூய்மை பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**ஆண்டிபட்டி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி 13 வது ஒன்றிய மாநாடு மற்றும் தா.பாண்டியன் 90 வது பிறந்தநாள் படத்திறப்பு நிகழ்ச்சி கிழக்கு புதுதெரு சமுதாய கூட்டத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் கி.பெருமாள் மாநாட்டை துவக்கி வைத்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் வாழ்த்துரையாற்றினார்.

மாநாட்டில் ஒன்றிய செயலாளராக பா.பிச்சைமணி, துணை செயலாளராக பி.முருகன், பொருளாளராக க.முனீஸ்வரன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில நிர்வாகக்குழு உறுப்பினருமான ஏ.வி.அழகிரிசாமி தா.பாண்டியன் படத்தை திறந்து வைத்து மாநாட்டில் நிறைவுரை ஆற்றினார்.

**கோவை மத்திய மண்டலம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய மண்டல மாநாடு கோவை ஜீவா இல்லத்தில் மறைந்த தோழர். சுப்புசிங் நினைவு அரங்கத்தில், அண்ணாமலை நினைவு நுழைவு வாயிலில் நடைபெற்றது. மாநாட்டுத் தலைமைக் குழுவாக என்.கணேசன், ஏ.பி.மணிபாரதி, ஜே.கலா ஆகியோர் செயல்பட்டனர். மூத்த தோழர் காளிச்சாமி கட்சிக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாநாட்டில் செயலாளர் கே.ரவீந்திரன் அறிக்கையை வாசித்து பேசினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி. மௌனசாமி அரசியல் விளக்க உரை நிகழ்த்தினார். ஆர். சுதர்சன் முன்னிலை வகித்தார். மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், ஆர். பாலகிருஷ்ணன், ஆர். தேவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நந்தகுமார், ராஜேந்திரன், ரங்கநாதன், மாணிக்கம், சாந்தகுமார், தேவேந்திரன், ஜே.கலா, காளிசாசாமி, கே.ரவீந்திரன், ஏ.பி.மணிபாரதி, என்.கணேசன், ராமசாமி உள்ளிட்டவர்கள் கமிட்டி உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டனர். கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகம் 100 வார்டுகளிலும் உள்ள சாக்கடைகளை தூர்வாரி சுத்தப்படுத்த வேண்டும். மாநகராட்சி பகுதிகளில் சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கிறது, அதை உடனடியாக சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ரேஸ் கோர்ஸ் பகுதிகள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின்கீழ் பணிகள் ஆமை வேகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இந்த பகுதியில் சாலைகளை விரைந்து சரி செய்ய வேண்டும். பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஜே.கலா நன்றி கூறினார்.

**மதுரை மாநகர் வடக்கு பகுதி:** இந்தியக்கம்யூனிஸ்ட்னிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட வடக்கு பகுதி மாநாடு கே.புதூரில் நடைபெற்றது. இந்தியக் கம்யூ.,கட்சியின் சிவகங்கை மாவட்ட செயலாளர் மு.கண்ணகி வாழ்த்துரை வழங்கினார்.

மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், பா.ராஜ லெட்சுமி, இரா.முருகன், வடக்கு பகுதி குழுவின் முன்னாள் செயலாளர் க.கதிரேசன், மதுரை மாநகராட்சி முன்னாள் கவுன்சிலர் மணிமேகலை, ஜனசக்தி என்.ஜீவா, கு.வெள்ளைப்பாண்டி, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பழனிமுருகன் உட்பட வடக்கு பகுதி கட்சி கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வடக்குபகுதிசெயலாளராகஇருளாண்டி,துணைச்செயலாள்களாக எஸ்.சித்திக், கற்பகவள்ளி, பொருளாளராக ஜாகீர்நிஷா ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பனைமரத்துப்பட்டி – வீரபாண்டி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பனைமரத்துப்பட்டிவீரபாண்டி இணைந்த ஒன்றிய 28வது மாநாடு கொண்டலாம்பட்டி எஸ்.பி.ஐயம்மாள் மண்டபத்தில் முன்னாள் மாநில செயலாளர் தா.பாண்டியன் நினைவு அரங்கில் நடைபெற்றது. மாநாட்டிற்கு எஸ்.பாலன், எஸ்.ராஜு, என்.பி..மணிவேல், எஸ்.பாலையா, ஏ.சுப்ரமணி ஆகியோர் தலைமை வகித்தனர். மூத்த தோழர் எஸ்.பி.ராஜகோபால் மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் டி.மணிவாசகம் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாவட்ட பொருளாளர் எம்.ராமன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் என்.எம்.சடையன் ஆகியோர் பேசினார்கள். 61 பேர் ஒன்றிய குழு உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றிய செயலாளராக எம்.பாலன் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

பனைமரத்துப்பட்டி ஏரியில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி ஏரியை தூர்வார வேண்டும்.

காட்டூர் ஏரி தற்போது சாக்கடை நீர் நிறைந்த குப்பை காடாக உள்ளதால் தூர்வாரி சுத்தப்படுத்த வேண்டும்.

நீர்வழித் தடங்கள் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு நீர்வழித் தடங்களில் பாதுகாக்கப்பட வேண்டும்

வீட்டுமனைப் பட்டா கேட்டு தொடர்ந்து வலியுறுத்தி வரும் அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும்.

சௌடேஸ்வரி கல்லூரி இருபாலர் கல்லூரியாக உள்ளது. அதை பெண்கள் கல்லூரியாக மாற்ற உயர்கல்வித்துறை அனுமதி அளித்துள்ளது.. இவ்வனுமதியை திரும்ப பெற்று இருபாலர் கல்லூரியாக செயல்பட செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டை நிறைவு செய்து மாவட்ட செயலாளர் ஏ.மோகன் பேசினார்.



## கிளை மாநாடுகள்

**திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஞாயிறு கிளை மாநாடு எஸ்.தெய்வசிகாமணி தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் பங்கேற்றார். கிளைச் செயலாளராக என்.தேவா, துணைச் செயலாளராக எஸ்.பி.சுரேஷ், பொருளாளராக எம்.சபாபதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கள்ளக்குறிச்சி மாவட்டம்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஒன்றியத்தை சேர்ந்த பரிகம், மாத்தூர், எடுத்தவாய்நத்தம் போன்ற கிராம பகுதிகளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளைகள் தோற்றுவிக்கப்பட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விவசாய சங்க ஒருங்கிணைப்பாளர் கஜேந்திரன் தலைமையில் கிளை மாநாடுகள் நடைபெற்றன. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை செயலாளர்கள் வெற்றிவேல், சிவராமன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கிராம பொது மக்களும் கலந்து கொண்டனர்.





# மோடி அரசே வெளியேறு!

## சிவந்த மண் சிவகிரியில் இரா.முத்தரசன் முழக்கம்!!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகிரி இடைக்கமிட்டி 34வது மாநாடு வி.ச வட்டார தலைவர் வி.ராஜேந்திரன், விதொச வட்டாரச் செயலாளர் ப.வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை விச வாட்டார செயலாளர் அ.கருப்பையா ஏற்றி வைத்து மாநாட்டை தொடங்கி வைத்தார். மாநாட்டில் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் அரசியல் உரையாற்றினார். 27 பேர் கொண்ட இடை கமிட்டி தேர்வு செய்யப்பட்டது. பி.பாலசுப்பிரமணியன் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். மாநாட்டில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி, எஸ்.காசிவிசுவநாதன், மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாலையில் இ.மதன்குமார் தலைமையில் செந்தொண்டர் பேரணி நடைபெற்றது.

பின்னர் செயலாளர் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசியதாவது.

தற்போது இந்தியாவில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு உயர்ந்து கொண்டே செல்கிறது. பெட்ரோல் டீசல் விலை உயர்வு மிகவும் அதிகமான அளவில் உயர்ந்துள்ளது. அதனால் அத்தியாவசிய தேவையான உணவுப் பொருட்களும், சிமெண்ட் கம்பி உட்பட கட்டுமான பொருட்களும் விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து கொண்டு இருக்கிறது. நாம் பயன்படுத்தும் 800 வகையான மருந்து மாத்திரை விலையைக் கூட மத்திய அரசு 10 சதவீதம் வரை உயர்த்தி உள்ளது. நாம் அனைவரும் முன்பெல்லாம் விறகு அடுப்பை பயன்படுத்தினோம். அதிலிருந்து மெல்ல மெல்ல நாம் சிலிண்டர் அடுப்பை பயன்படுத்துவதற்கு பழக்கப்பட்டு விட்டோம். இன்று சிலிண்டரின் விலை உயர்வை கண்டு மீண்டும் விறகு அடுப்புக்கு மக்கள் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று வீட்டிற்கு பயன்படுத்தும் சிலிண்டரின் விலை ஆயிரம் ரூபாயை தாண்டி சென்று உள்ளது.

இப்படி அன்றாட தேவையான அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் நமது வருமானம் உயர்கிறதா என்று பார்த்தால் கடந்த ஆண்டு வாங்கிய அதே சம்பளம் தான் தற்போதும் கிடைக்கிறது. இதனால் பொதுமக்கள் குடும்பம் நடத்துவதற்காக கடன் வாங்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதனால் தமிழகம் உட்பட பல மாநிலங்களில் குடும்பம் குடும்பமாக தற்கொலை செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இதில் இருந்து மக்களை காப்பாற்ற மேலே இருப்பவன் நினைத்தால்தான் முடியும். மேலே என்றால் கடவுள் அல்ல. மோடி நினைத்தால் தான் முடியும். ஒன்றிய அரசு போடுகின்ற அதிக வரியை குறைத்தால் விலைவாசியை குறைக்க முடியும். ஆனால் மத்தியில் ஆளும் மோடி அரசு இதை பற்றி சிந்திப்பதும் இல்லை. மக்களை பற்றி கவலைப்படுவதும் இல்லை. மாறாக இதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை எண்ணெய் நிறுவனங்கள்தான் உயர்த்துகிறது என்கிறது. இந்த நிறுவனங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதா இல்லையா என்பதை விளக்க வேண்டும்.

விலைவாசி உயர்வை கண்டித்து போராட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடத்தப்படும்போது ஜனநாயகத்திற்கு கட்டுப்பட்ட அரசாக இருந்தால் மக்களின் கோரிக்கையை ஏற்று விலைவாசியை குறைக்க வேண்டும். மாறாக மத்தியில் ஆளும் ஒன்றிய அரசு போராட்டங்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தான் விலைகளை உயர்த்துகிறது இது ஜனநாயக அரசுதானா என்பது ஒரு கேள்விக்குறியாக உள்ளது.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நரேந்திர மோடி நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை கொடுப்போம் என்று ஒரு வாக்குறுதி அளித்தார். அப்படியானால் இன்று வரை 20 கோடி பேருக்கு அவர் வேலை கொடுத்து இருக்க வேண்டும். ஆனால் 20 கோடிக்கு மேலான பேர்கள் வேலை இல்லாமல் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இன்று குரூப்2 தேர்வு நாடு முழுவதும் நடைபெற்று கொண்டிருக்கிறது 6000 பணியிடங்களுக்கு சுமார் 13 லட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள். அப்படியானால் வேலையின்மை எந்த அளவிற்கு இங்கே உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது. அதுமட்டுமல்ல 8 மணி நேர வேலை, 8 மணி நேர ஓய்வு, 8 மணி நேர உறக்கம் என்று மூன்றாக பிரித்து நாம் போராடி பெற்ற உரிமைகளுக்கு இப்போது மூடுவிழா நடத்தப்பட்டுள்ளது. தற்போது வேலை பார்ப்பதற்கு வேலை நேர அளவுகோளே கிடையாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்களை சுரண்டுவதே இந்த அரசாங்கத்தின் செயல்பாடாக உள்ளது.

நமக்கு அருகில் உள்ள நாடான இலங்கையில் கடந்த காலங்களில் இனரீதியான தாக்குதல்கள் போராட்டங்கள் நடைபெற்றது நாம் அனைவருக்கும் தெரியும். ஆனால் தற்போது சிங்களர்கள், தமிழர்கள், மலையாளிகள் என்ற இன வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து சாலைகளிலும், வீதிகளிலும் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

எதற்காக என்றால் விலைவாசி உயர்வு என்ற ஒற்றை கோரிக்கையை முன்வைத்து. கட்டுப்படுத்த முடியாத விலைவாசி உயர்வு அதனால் மக்கள் வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதே நிலை தான் நமது நாட்டிலும், எந்த நேரத்திலும் மக்கள் ஒன்றுபட்டு கிளர்ந்தெழுந்து போராடும் நிலை வராது என்பதற்கு எந்த உறுதியும் அளிக்க முடியாது.

பாராளுமன்றத்தில் தனி பெரும்பான்மையாக உள்ளோம் என்ற எண்ணத்தில், மக்களுக்கு விரோதமான சட்டங்களைக் கொண்டுவந்து அதை செயல்படுத்துகிறார்கள். மக்கள் பிரச்சனைகளையும், அவர்கள் கொண்டுவரும் சட்டங்களையும் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கு அனுமதி கிடையாது. நாம் ஒவ்வொருவரும் சொந்தமாக சிந்திப்பதற்கும் அதை வெளியில் பேசுவதற்கும் அதை செயல்படுத்துவதற்கும் நமக்கு அரசியலமைப்புச்சட்டம் உரிமைகளை வழங்கியுள்ளது. ஆனால் பாராளுமன்றத்தில் நாம் நமது பிரச்சனைகளை பற்றி விவாதிப்பதற்கு எந்த அனுமதியும் வழங்கப்படுவதில்லை,

நமது நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி முதன்முதலில் நாடாளுமன்றத்திற்கு சென்றபோது நாடாளுமன்றத்தின் படிக்கட்டுகளை தொட்டு வணங்கி கும்பிட்டுவிட்டு தான் சென்றார். நாமும் பாராளுமன்றத்தை மதிக்கின்ற பிரதமர் என்று பெருமை பட்டோம். ஆனால் இப்போது நடப்பது என்ன? பிரதமர் நாடாளுமன்ற கூட்டத்திற்கு செல்வதே இல்லை, விவாதங்களை கேட்பதும் இல்லை, விவாதிப்பதற்கு எதிர்கட்சிகளுக்கு அனுமதி வழங்குவதும் இல்லை. நாடாளுமன்றம் நடக்கும் நேரங்களில் எல்லாம் வேறு எங்காவது வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருப்பது தான் அவரின் வாடிக்கையாக உள்ளது.

மக்களின் பிரச்சனைகளை எடுத்துக் கூறுவதற்கு உயர்ந்த இடம் பாராளுமன்றம். அப்படி மக்கள் பிரச்சனைகளை பேசும் அந்த பாராளு மன்றக் கூட்டங்களில் நாட்டின் பிரதமர் கலந்து கொள்ள வேண்டாமா? என்பதுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேள்வி.

உயர்ந்த பொறுப்புகளில் இருப்பவர்கள் உண்மையை பேச வேண்டும். ஆனால் பிரதமர் உட்பட இங்கு உயர்ந்த பொறுப்புகளில் இருக்கும் பலரும் திரும்பத் திரும்ப பொய்களையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். புதிய கல்வி கொள்கை என்ற பெயரில் இன்று மாணவர்களுக்கு சிறந்த முறையில் இங்கே கல்வித் தகுதியை கொண்டு வருகிறோம் என்று பொய்யான கருத்துக்களை பரப்பி வருகிறார்கள்.

1952 சென்னை மகாணத்தில் முதல் பொதுத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடம்பெற்றிருந்த ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கக்கூடிய அளவில் இடங்களை பெற்று வெற்றி பெற்று இருந்தது. அப்போது கம்யூனிஸ்ட் கட்சி தான் ஆட்சிக்கு வரவேண்டும் என்று தந்தை பெரியார் தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரம் மேற்கொண்டார். வெற்றியும் பெற்றோம்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மை பெற்றோம். ஆனால் அப்போது தினமணி பத்திரிகையின் முதலாளியான கோயங்கா, ஆசிரியராக இருந்த ஏ.எம்.சிவராமன் ஆகிய இருவரும் ராஜாஜியின் வீட்டுக்கு சென்று அவரின் காலில் விழுந்து சென்னை மகானத்தை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வராமல் தடுத்து நிறுத்த வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தால் முதலாளிகள் வாழ முடியாது. இதை தடுத்து நிறுத்த வேண்டும், என்றால் நீங்கள் முதல்வராக பொறுப்பு ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ராஜாஜியும் சம்மதம் தெரிவித்து அன்றைய கூட்டணியை உடைத்தார்கள். அதன் விளைவாக ராஜாஜி முதல்வராக பொறுப்பேற்றார். அவர் முதல்வராக பொறுப்பேற்றவுடன் புதிய கல்வி சட்டத்தை கொண்டு வந்தார்.

அந்த கல்வி சட்டம் பாதி நேரம் மாணவர்கள் படிப்பதும் மீதி நேரங்களில் மாணவர்களின் தந்தை செய்யும் தொழிலையே மாணவர்களும் செய்ய வேண்டும் என்ற சட்டம். இந்த சட்டத்தை எதிர்த்து அன்றைய காங்கிரஸ் கட்சி தலைவர் காமராஜர் உட்பட கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த சட்டத்தை எதிர்த்து போராடினோம். அன்று ராஜாஜி கொண்டு வந்த சட்டத்தை எதிர்த்து தன் கட்சி உட்பட அனைவரும் போராடுவதை கருத்தில்கொண்டு தான் வகிக்கும் முதல்வர் பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று அறிவித்தார்.

அதே சட்டத்தை தான் தற்போது மோடி அரசு நடைமுறைப்படுத்தி கொண்டு வருகிறார்கள். இதனால் பெரும்பான்மையான மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிந்தேதான் இந்த சட்டத்தை கொண்டுவருகிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சி என்பது தனித்து சுயமாக சிந்தித்து செயல்படும் கட்சி அல்ல, ஆர்எஸ்எஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தான். அவர்களின் கொள்கையைத்தான் பாரதிய ஜனதா கட்சி நடைமுறைப் படுத்துகிறது. ஆர்எஸ்எஸ் அமைப்பு ஒரு படை வைத்து உள்ளார்கள் அவர்களை எதிர்த்து போராடுவதற்காக தான் நாங்கள் செம்படை தொண்டர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

கம்யூனிஸ்டுகளின் தத்துவம் மார்க்சியம். எங்களுடைய லட்சியம் பொதுவுடமை சமுதாயம் அமைப்பது தான். நாங்கள் பகிரங்கமாக வெளியில் செல்கிறோம்.

ஆனால் ஆர்.எஸ்.எஸ்.சின் தத்துவம் மனுதர்மம் இதை அவர்கள் பகிரங்கமாக சொல்ல முடியுமா? சொல்ல மாட்டார்கள், அப்படி பகிரங்கமாக அவர்கள் சொல்கிறார்கள் என்றால் நாட்டில் ஒருவர் கூட அவர்கள் கட்சியில் இருக்க மாட்டார்கள். அவ்வளவு மோசமான, பிற்போக்குத்தனமான, நாகரிக உலகில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு தத்துவத்தை அந்த கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது. அதற்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கிடையாது.

சர்வாதிகாரத்தின் மீது தான் அந்தக் கொள்கைக்கு நம்பிக்கை உண்டு. பாசிச கொள்கை மீதுதான் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. அந்தக் கொள்கையைத் தான் இன்று பாரதிய ஜனதா கட்சி மெல்லமெல்ல நாட்டில் புகுத்தி கொண்டிருக்கிறார்கள்.

ஜிஎஸ்டி வரியில் ஒன்றிய மாநில அரசுகளுக்கு சம பாதியாக உரிமை உள்ளது. ஆனால் மொத்த வரி பணத்தையும் மத்திய அரசு சுருட்டி கொண்டு செல்கிறது. அதற்குப் பிறகு மாநில அரசுகள் மத்தியில் கையேந்தி கெஞ்ச வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட பிரச்சனைகளில் மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஒன்றிய அரசு மத, இன, மொழி பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. வரலாறுகளை மாற்றி அமைக்கிறார்கள் நாட்டு விடுதலைக்காக போராடிய மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற கோட்சே கும்பல் தான் இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது. மதச்சார்பின்மைக்கு ஆதரவாக போராடிய காந்தியை சுட்டுக்கொன்ற இந்த கும்பலுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கிடையாது. பாசிச கொள்கையின் மீது நம்பிக்கை உடையவர்கள் தான் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் சர்வதிகாரம் வெற்றி பெற்று விடக் கூடாது, இந்த நாட்டில் பாசிசம் வெற்றி பெற்று விடக் கூடாது, மாறாக மகாத்மாகாந்தி கட்டிக்காத்த இந்த மதச்சார்பின்மை கொள்கை கட்டி காப்பாற்றப்பட வேண்டும்.

என்ற கொள்கையோடு தான் இங்கே போராடிக் கொண்டிருக்கிறோம். நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட அதே நாளில் மோடி அரசே நாட்டைவிட்டு வெளியேறு என்ற முழக்கத்தோடு ஒன்றிணைந்து போராடுவோம்.

நாட்டை காப்பாற்ற நாட்டு மக்களை காப்பாற்ற போராடுவோம் என உரையாற்றினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 72. ஊதியமில்லா உழைப்பாளி


**இல்லாளாம் என்பதீங்கு ஊதியம் இல்லா**
**உழைப்பாளி உன்னி உணர்**

மனைவி என்ற சொல், நம் நாட்டில் சம்பளமில்லா உழைப்பாளி (அடிமை) என்ற பொருளையேதருகிறது. (இது சரியன்று)

**பெண்ணென்பாள் பிள்ளைபெறும் யந்திரம்**
**என்றாஅல் உண்மையில் உண்மை யது.**

சமுதாய எண்ணத்தில் பெண் என்பவர் பிள்ளை பெறும் இயந்திரம், என்ற தவறான உணர்வுதான் நிலவி வருகிறது. இது உண்மையிலும் உண்மை.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

ஐரோப்பிய சமூகம் உயர் கல்வியோடு, சமூக கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கியது. இது ஐரோப்பாவில் அறிவு யுகம் தோன்ற உந்தித் தள்ளியது என்ற அடிப்படையை மு.வீரபாண்டியன் 'உயர் கல்வியும் – சமூக கல்வியும்' என்ற கட்டுரையில் கோடிட்டு காட்டுகிறார்.

**– ஜி.பிரகாஷ்**, வானகரம், சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

தேசத்துரோக சட்டப்பிரிவின் கீழ் பொய்யான குற்றச்சாட்டை சுமத்துவது மட்டுமின்றி, மற்றவர்களின் தேசப்பற்றை கேள்விக்குள்ளாக்குவதிலும் பா.ஜ.க.வின் நடைமுறை ஆகிவிட்டது என்று 'தேசத்துரோக சட்டம் நீக்கப்பட வேண்டும்' என்ற தனது கட்டுரையில் பொதுச் செயலாளர் டி.ராஜா சம்மட்டி அடி கொடுத்துள்ளார்.

**– சிவசங்கரன்**, உடுமலைப்பேட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

மே 8 – 14 ஜனசக்தியில் அமர்ஜித் கவுர் அவர்களின், "மேதினம் அநீதிக்கு எதிரான போராட்டத்தை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கும்" என்பதன் மூலம் தொழிலாளர்களைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கிறது.

**– ரூபன் சந்திரசேகரன்,**
செந்தாரப்பட்டி

**ஆசிரியர் ஜனசக்தி,**

தோழர் பாலதண்டாயுதம் பற்றிய நினைவு கட்டுரையில் தோழர் காசிவிஸ்வநாதன் கொடுத்துள்ள "நினைவுகளுக்கு மரணமில்லை" என்ற தலைப்பு அருமை. உள்ளடக்கத்திலும் நினைவை கிளறி விடுகிறது.

**– சீதாராமன்,**
கொடியங்குளம், தூத்துக்குடி



## பி.சேதுராமனுக்கு முதலாம் ஆண்டு புகழஞ்சலி

மதுரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பரங்குன்றம் ஒன்றிய புறநகர் மாவட்டக் குழு சார்பில், சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் பி.சேதுராமனுக்கு முதலாம் ஆண்டு புகழஞ்சலி கூட்டம் அச்சம்பத்து மந்தை திடலில் நடைபெற்றது. இதில், அச்சம்பத்து கிளை செயலாளர் வீரபத்திரன் தலைமை தாங்கினார்.

மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் ஆர்.விஜயா வரவேற்புரை வழங்கினார். சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசன் சிறப்புரை ஆற்றினார். சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் புகழஞ்சலி செலுத்தினார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் முத்துவேல், மதுரை புறநகர் மாவட்ட பொருளாளர் ஜெயக்கொடி, மேலூர் தாலுகா துணை செயலாளர் மெய்யர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மதுரை மாவட்ட செயலாளர் சந்தனம், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், சிபிஐ (எம்) வீராச்சாமி, மதுரை மாநகர் துணை செயலாளர் இராஜலெட்சுமி மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தோழர் பி.சேதுராமன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி முதலாம் ஆண்டு மௌன அஞ்சலியினை செலுத்தினர்.




### மூத்த தலைவர் மணியகாரன் பாளையம்

## ஆர்.நடராஜன் பட திறப்பு விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னால் கோவை வடக்கு நகர செயலாளர் ஆர். நடராஜன் படத்திறப்பு விழா மணியகாரன்பாளையம் ஜீவா திடலில் மே 15 அன்று சி.கோபால் தலைமையில் நடைபெற்றது.

என். குருசாமி துவக்க உரை நிகழ்த்தினார், என். ஜீவானந்தம் முன்னிலை வகித்தார். கிளை செயலாளர் என்.கல்யாண சுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஓவியர் ஜீவா வால் வரையபட்ட தோழர் ஆர்.நடராஜன் படத்தை சிபிஐ மாநில துணை செயலாளர் கே. சுப்பராயன் எம்.பி., திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், மாவட்ட விவசாய சங்க தலைவர் சு. பழனிச்சாமி, மார்க்சிஸ்ட் கட்சி முன்னாள் மாவட்ட செயலாளர் வி. ராமமூர்த்தி ஏஐடியூசி இன்ஜினியரிங் சங்க செயலாளர் கே.எம்.செல்வராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், ஏஐடியூசி கட்டிட சங்க மாநில துணை பொதுச் செயலாளர் என். செல்வராஜ், சி.பி.ஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆர்.சுதர்சன், பி.முருகன், சி.பி.ஐ. சிங்கை சண்முகம், மத்திய மண்டலம் செயலாளர் ரவிந்தரன், மாமன்ற உறுப்பினர்கள் பிரபா ரவிந்திரன், கே.சுமதி, அதிமுக சார்பில் நடராஜன், வாசு, திமுக சார்பில் அருணாசலம், குமார், பிரவின்குமார், ரங்கசாமி, காங்கிரஸ் சார்பில் பழனிசாமி, மார்க்சிஸ்ட் சார்பில் எம்.எஸ்.பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். ஸ்ரீதர் நன்றி கூறினார்.



### தோழர் என்.முத்து அவர்களின்

## 13-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தருமபுரி மாவட்டச் செயலாளர் என்.முத்து அவர்களின் 13ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி மே 15 அன்று தருமபுரி கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் அன்னாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.மாது, ஏஐடியூசி மாவட்ட பொறுப்பாளர் கே.மணி, இண்டூர் வட்டார பொறுப்பாளர் சிவன், நிர்வாகிகள் அப்புனு, இரவீந்திரபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.

### சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய தொழிலாளர்கள் போராட்டத்திற்கு ஏஐடியூசி ஆதரவு!

# தமிழ்நாடு அரசு தலையிடக் கோரி மே 21, 23 தேதிகளில் ஆர்ப்பாட்டம்!

சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய தொழிலாளர்கள் கடந்த 16 ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருகின்றனர். நான்கு நாட்களாக வாரிய தலைமை அலுவலகம் முன்பே போராடி வரும் இத்தொழிலாளர்களோடு சம்பந்தப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அதிகாரிகள் தலையிட்டு பேசி இதுவரை சுமூகமான தீர்வு எட்டப்படவில்லை.

இந்நிலையில் போராடும் தொழிலாளர்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு ஏஐடியூசி செயலாளர் நா.பெரியசாமி முன்.எம்.எல்.ஏ ஏஐடியூசி சார்பில் ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் தெரிவித்து பேசினார். தமிழ்நாடு உள்ளாட்சித்துறை பணியாளர் சம்மேளன பொதுச்செயலாளர் ம. இராதா கிருஷ்ணன், சிசிடியூ கன்வீனர் ஆ.பாஸ்கர், மத்திய சென்னை மாவட்ட ஏஐடியூசி செயலாளர் மு.சம்பத், தென் சென்னை மாவட்ட தலைவர் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தை சேர்ந்த' துப்புரவு தொழிலாளர்கள், களப்பணியாளர்கள், சில்ட் (தூர்வாரும்) வண்டி ஓட்டுனர்கள், ஜெட் ராட்டிங் மற்றும் சூப்பர் சக்கர் வண்டி ஓட்டுநர்கள் ஆப்பரேட்டர்கள் ஆகிய பணிகளில் 20 30 வருடங்களுக்கு மேலாக தற்காலிக தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். முழு நேர ஊழியர்களாய் தொடர்ந்து பல ஆண்டுகள் பணியில் நீடித்தாலும், இன்றும் "தற்காலிக" ஊழியர்களாகவே உள்ளனர்.

அரசு பணியாளர்களின் 7 ஆவது ஊதியக்குழு பரிந்துரைப்படி இத்தகைய தொழிலாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயிப்பது குறித்து 2017 ஆண்டு தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு நிரந்தரப் படுத்துதல் சட்டம் 1982 தமிழ்நாட்டில் அமலில் உள்ளது. தமிழ்நாடு அரசாங்கமே இயற்றிய சட்டப் படியும், வெளியிட்டுள்ள அரசாணைப்படியும் இத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அதற்கு மாறாக தொழிலாளர்கள் ஊதியத்தையும், சமூக பாதுகாப்பையும் பறித்து முறைகேடுகளில் ஈடுபடுவதில் வல்லமை பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் ஒப்பந்த தொழிலாளர்களாக மாற்றும் சட்டவிரோத நடவடிக்கையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியமும், நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையும் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கை தொழிலாளர்களை வேதனையில் ஆழ்த்தி, வாழ்வை கேள்விக்கிறியாக்கியுள்ளது, போராடத் தூண்டியுள்ளது

20 ஆண்டுகளுக்கும் மேலாக தற்காலிக தொழிலாளர்களாக, குறைந்த பட்ச ஊதியத்தை விட குறைவான ஊதியம் பெற்று வந்துள்ளனர். உழைப்பு சுரண்டலில் இருந்து தற்காத்துக் கொள்ள அரசியல் அமைப்பு சட்டம் வழங்கிய அடிப்படை உரிமை பறிக்கப்பட்ட போதும், பணி நிரந்தரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அற்ப ஊதியத்திற்கு பணி புரிந்துள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக சென்னை குடிநீர் வடிகால் வாரியம் சுரண்டியது போதாது என்று மேலும் சுரண்ட வழிவகுக்கும் ஒப்பந்த முறை என்ற படுகுழியில் இத்தொழிலாளர்களை தள்ளுவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல; ஏற்புடையதுமல்ல. இத்தொழிலாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கோருவது நிராகரிக்க முடியாத நியாயமான கோரிக்கையாகும். ஆகவே போராடும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் (ஏஐடியூசி) தனது ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

போராடும் சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரிய பணியாளர்கள் கோரிக்கை மீது பேசித் தீர்வு காணக் கோரியும், நவீன கொத்தடிமை மற்றும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் ஒப்பந்த முறையை கைவிடக் கோரியும், பணி நிரந்தரம், சட்டப்படி ஊதியம், பாதுகாப்பு கருவிகள், சமூக பாதுகாப்பு உறுதிசெய்யக் கோரியும் மே 21 அன்று சென்னையிலும் 23 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ளாட்சி துறை ஏஐடியூசி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனத்தின்( ஏஐடியூசி) பொதுச்செயலாளர் ம. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.




**அரியலூர்:** சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தில் துப்புரவு தொழிலாளர்கள், களப்பணியாளர்கள், சில்ட் (தூர்வாரும் )வண்டி ஓட்டுநர்கள், ஜெட் ராட்டிங் மற்றும் சூப்பர் சக்கர் வண்டி ஓட்டுநர்கள் ஆப்ரேட்டர்கள் ஆகிய பணிகளில் 20 முதல் 30 வருடங்களுக்கு மேலாக தற்காலிக தொழிலாளர்களாக பணி புரிந்து வருகின்றனர். முழுநேர ஊழியர்களாக தொடர்ந்து பல ஆண்டுகள் பணியில் நீடித்தாலும்,இன்றும் தற்காலிக ஊழியர்களாகவே உள்ளனர்

கடந்த 16ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் இத்தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். உடனடியாக தலையிட்டு சுமுக தீர்வுக்கு தக்க நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசை வலியுறுத்தி தமிழகம் தழுவிய ஏஐடியூசி உள்ளாட்சித்துறை ஆர்ப்பாட்டத்தைவொட்டி 23 அன்று மாவட்ட தலைநகர் அரியலூர் நகராட்சி அலுவலகம் முன்பு ஏஐடியூசி சுகாதார தொழிலாளர் சங்கம் சார்பாக துப்புரவு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

உள்ளாட்சி ஏஐடியூசி சம்மேளன மாநில செயலாளர் த.தண்டபாணி பங்கேற்று சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் ரா.சுப்பிரமணியன், ரெ. நல்லுசாமி, கு.சிவஞானம், சிபிஐ அரியலூர் நகர கிளை பொறுப்பாளர் பாண்டியன் உட்பட நிரந்தர மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

# விகடன் மீதான வழக்கை விலக்கிக் கொள்க!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

ஜூனியர் விகடன் ஊடகத்திற்கு தொடர்பில்லாத ஒருவர், அந்த ஊடகத்தின் பெயரைப் பயன்படுத்தி ஒரு கட்டுமான நிறுவனத்திடம் பெருந் தொகை கேட்டு மிரட்டியதாக ஒரு புகார் எழுந்துள்ளது.

விகடன் குழும ஊடகம் இயன்றவரை பத்திரிக்கை தர்மத்தை கடைபிடித்து வரும் பாரம் பரிஎய பெருமை கொண்ட ஊடகம் என்பதை அனைவரும் அறிவர்.

ஜனநாயக நெறிகளில் நின்று ஆட்சியாளர்களை விமர் சித்து, வழக்குகளையும், சிறைச்சாலையையும் சந்தித்த வரலாறு அந்த ஊடகத்திற்கு இருக்கிறது. இவை எதனையும் கருத்தில் கொள்ளாமல், வந்த புகாரின் உண்மைதன்மை அறியாமல், காவல்துறை விகடன் ஊடக உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்து, அவசர அவசரமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது ஆழமான சந்தேகத்தை எழுப்புகிறது.

ஊடகங்களின் பெயர்களை பயன்படுத்தும் போலி நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவதூறு செய்திகள் வெளியிடுவோர் மீது அதற்குரிய சட்டங்கள் வழியே உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு மாறாக அதிகார அத்துமீறலில் மிரட்டிப் பணிய வைக்கலாம் என தமிழ்நாடு காவல்துறை கருதுமானால் அது நல்ல பலனைத் தராது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சுட்டிக்காட்டுவதுடன்,

விகடன் மீதான வழக்கை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### காடையாம்பட்டி ஒன்றிய செயலாளர்

# கே.கண்ணையன் மறைவு



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி காடையாம்பட்டி ஒன்றிய செயலாளராகவும், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றி வந்த தோழர் கே.கண்ணையன் கடந்த ஒரு வருட காலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மே 19 அன்று சென்னை மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 71. அவருக்கு இந்திராணி என்ற மனைவி உள்ளார். இறுதி நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாவட்ட பொருளாளர் எம்.ராமன், மாநிலகுழு உறுப்பினர் ப.பரமசிவம், இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், எம்.முனுசாமி, கே.ரங்கநாதன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் வி.ஆர். நடராஜ், ஆர்.மாரியப்பன், எம்.பாலன், பா.தினேஷ், எஸ்.எம்.மதியழகன் மற்றும் ஏராளமான தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

### பெருந்துறை பைபாசில் மேம்பாலங்கள், சர்வீஸ் ரோடுகள் அமைக்க

# கொள்கையளவில் ஒப்புதல்

## கே.சுப்பராயன் எம்.பி. கோரிக்கைக்கு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி பதில்

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயனுக்கு தேசிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி எழுதியுள்ள கடிதம் வருமாறு:

அன்புள்ள கே.சுப்பராயன் அவர்களுக்கு,

சேலம் கொச்சி **NH-544** தேசிய நெடுஞ்சாலையில் (பழைய எண்: **NH-47**) குமாரபாளையம் முதல் செங்கப்பள்ளி வரையான பகுதியில் கிலோமீட்டர் 78/400, கி.மீ.79/400, கி.மீ.80/800 மற்றும் கி.மீ.89/100 ஆகிய இடங்களில் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க மேம்பாலங்களை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 03.02.2020 மற்றும் 31.10.2021 ஆகிய தேதிகளில் நீங்கள் எழுதிய கடிதங்கள் கிடைக்கப் பெற்றேன்.

நான் மேற்கண்ட விசயத்தை ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் அடிப்படையிலும், அங்குள்ள சாலை நிலவரங்களை கருத்தில் கொண்டும், தங்களால் முன்மொழியப்பட்ட பணிகளைக் கருத்தில் கொண்டும் விபத்துத் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் கீழ்க்கண்ட பணிகளுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1) 78+379 ஆவது கிலோமீட்டரில் ஒரு **VUP** அமைக்கப்பட்டு, 77+01 கிலோமீட்டரிலிருந்து 79+360 கிலோமீட்டர் வரை உள்ள சந்திப்புகளை இணைக்கும் விதமாக சர்வீஸ் சாலைகளை அமைப்பது. (பெருந்துறை முதல் காஞ்சிக்கோவில் வழியாக கவுந்தப்பாடி செல்லும் சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் (**VUP - Vehicular UnderPass**) அமைத்தல் மற்றும் பெத்தாம்பாளையம் சாலை வரை இருபுறமும் சர்வீஸ் ரோடுகள் அமைத்தல்)

2) 80+684 ஆவது கிலோமீட்டரில் ஒரு **VUP** அமைக்கப்பட்டு, 80+684 கிலோமீட்டரில் உள்ள சந்திப்பில் போக்குவரத்தை மட்டுப்படுத்தும் விதமாக 79+360 கிலோமீட்டரில் இருந்து 81+240 கிலோமீட்டர் வரை உள்ள சாலையின் இருபுறமும் சர்வீஸ் சாலைகளை அமைப்பது. (பெருந்துறை முதல் துடுப்பதி வழியாக மாக்கினாம்கோம்பை செல்லும் சாலை சந்திக்கும் இடத்தில் மேம்பாலம் (**VUP - Vehicular Undar Pass**) மற்றும் இருபுறமும் சர்வீஸ் ரோடுகள் அமைத்தல்)

3) 88+750 கிலோமீட்டரில் இருந்து 89+980 கிலோமீட்டர் வரை மற்றும் 90+530 கிலோமீட்டரில் இருந்து 91+180 கிலோமீட்டர் வரை இருபுறமும் ஐந்தரை மீட்டர் சர்வீஸ் சாலைகள் அமைப்பது.

இந்த விவகாரத்தை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு நிதின் கட்கரி கே.சுப்பராயன் எம்.பி.க்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்.

---

### சாஸ்திரா பல்கலைக்கழகம்

## ஆக்கிரமித்துள்ள அரசு நிலங்களை கையகப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

நீதிமன்ற தீர்ப்பின்படி சாஸ்த்ரா பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள அரசு இடத்தை தமிழக அரசு கையகப்படுத்த வேண்டும்! இல்லையெனில் வீடு இல்லாதவர்களைத் திரட்டி குடியேறும் போராட்டம் நடத்தப்படும்!! என்ற முழக்கங்களுடன் தஞ்சை ரயிலடி முன்பு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தஞ்சையில் திறந்தவெளி சிறைச்சாலை ஏற்படுத்த 57.19 ஏக்கர் அரசு நிலத்தை சாஸ் திரா பல்கலைக்கழகம் அரசு நிலத்தை ஆக்கிரமித்துள்ளது ஏற்கத் தக்கதல்ல. உடனடியாக கையகப் படுத்த வேண்டும் என்று நீதிமன் றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. நீதி மன்ற தீர்ப்புப்படி சாஸ்த்ரா பல்கலைக் கழகம் ஆக்கிரமித்துள்ள அரசு இடத்தை உடனடியாக தமிழக அரசு கையகப்படுத்த வேண்டும், இல்லை என்றால் தஞ்சை மாநகரில் வீட்டு மனை இல்லாத மக்களை திரட்டி சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் குடியேறும் போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டது . கண்டன ஆர்ப்பாட்டத்தினை தமிழர் தேசிய முன்னணி அய்யனாபுரம் சி.முருகேசன் துவக்கி வைத்து பேசினார். ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன் பேசினார். கோரிக்கைகளை விளக்கி ஏஐடியூசி மாநிலச் செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட தலைவர் வெ.சேவையா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருளாளர் என்.பாலசுப்பிர மணியன், மாநகர குழு உறுப்பினர்கள் கல்யாணி, பி.செல்வம், ஆர்.செந்தில்நாதன், இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

---

### சேத்தூர் சிபிஐ நகர செயலாளர் மீது

## அரசியல் பழிவாங்க போடப்பட்ட வழக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இராஜபாளையம் சேத்தூர் பேரூராட்சியில் தலைவராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த முறை கூட்டணி இல்லாமல் தனியாக நின்று வெற்றி பெற்றது. இம்முறை திமுக கூட்டணி பேச்சு வார்த்தையில் நமக்கு போதிய இடங்கள ஒதுக்கப்பவில்லை. குறைந்த இடங்களை ஒதுக்கி அதிலும் திமுக வேட்பாளர்கள் நிறுத் தப்பட்டனர். சிபிஐ சார்பில் அனைத்து இடங்களிலும் வேட்பாளர்கள் நிறுத் தப்பட்டனர். தேர்தலில் அதிகாரபலம், பணபலத்தை மீறி நான்கு வேட் பாளர்கள் வெற்றி பெற்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த திமுக சட்டமன்ற உறுப்பினர் தங்க பாண்டியன், சேத்தூர் நகர சிபிஐ செயலாளர் எஸ்.ராஜாவை பழிவங்கும் நோக்கத்துடன் வட்டாட்சியரை தூண்டி விட்டு, 8மாதத்திற்கு முன் னாள் கட்டிட வேலைக்கு ராஜா வைத் திருந்த மணலை, மணல் கடத் தியதாக கூறி வழக்கு பதிய வைத் துள்ளார்.

இராஜபாளையம் வட்டாச்சியர் இராமச்சந்திரன் தலைமையில் இரவு 12 மணிக்கு வந்து அடாவடியாக சீல்வைத்தும் பின் மணலை அள் ளியும் சென்றுள்ளனர். அதற்கு முன் அப்பகுதியில் உள்ள பொது மக்க ளிடமும் வீடுவீடாக சென்று ஏதோ கள்ளக்கடத்தலை பிடிப்பது போல் இரவில் சென்று மிரட்டி உள்ளனர்.

இந்த அரசியல் பழி வாங்கும் நட வடிக்கையை கண்டித்து சேத்தூர் பேருந்து நிலையம் முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பில் பெருந்திரள் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. ஆயிரத் திற்கும் மேற்ப்பட்ட பெண் கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமை வகித்தார். துணை செயலாளர் பகத் சிங் முன்னிலை வகித்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி. இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செய லாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந்தில் குமார், பாலமுருகன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்து மாரி, பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ உள்ளிட்டவர்கள் பேசினர். சம்பநதப்பட்ட வட்டாச் சியர் உள்ளிட்டவர்களை பணி நீக்கம் செய்து விசாரணை நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற் றப்பட்டது.

---

**ஜனசக்தி பத்திரிக்கை செய்தி எதிரொலி...**

## திருத்துறைப்பூண்டி புறவழிச்சாலை திட்ட பணிகள் துவங்கியது

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கான துவக்க நிகழ்ச்சி திருத்துறைப்பூண்டி வேளூர் பாலம் அருகில் நடைபெற்றது. கடந்த 1995ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி நகராட்சி அந்தஸ்தை பெற்றது.நகரிலும், புறநகரிலும் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், மேல்நிலைபள்ளிகள் உட்பட கல்வி நிலையங்கள் 25 க்கும் மேற்பட்டவை உள்ளன. வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் நகரத்தில் நிறைந்திருக்கின்றன.

நகரில் போக்குவரத்து நெரிசல் சொல்லமுடியாத அளவுக்கு நெருக்கடியாக உள்ளது. இதனை போக்கும் வகையில் கடந்த 2001ஆம் ஆண்டு முதல் புறவழிச்சாலை திட்டத்திற்கு சட்டமன்றத்தில் திருத்துறைப்பூண்டி சட்ட பேரவை உறுப்பினர்கள் கோ.பழனிச்சாமி, கே.உலகநாதன் ஆகியோர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் 2021ஆம் ஆண்டு திருத்துறைப்பூண்டி சட்டபேரவை உறுப்பினர் க.மாரிமுத்து தொடர்ந்து வலியுறுத்தியதின் காரணமாக திருவாரூர் சாலைநாகை சாலை இணைப்புக்கான தொகை ரூ 20.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 13.05.22 அன்று அதற்கான துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து திருவாரூர் முதல் மன்னை சாலை இணைப்புக்கானநிலஎடுப்புபணிகளும்துவங்கபட்டுள்ளதாக நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு, திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், திருந்துறைப்பூண்டி சட்டபேரவை உறுப்பினர் க.மாரிமுத்து, திருத்துறைப்பூண்டி சட்டபேரவை முன்னாள் உறுப்பினர் கே.உலகநாதன், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைர் அ.பாஸ்கர், நகர்மன்ற தலைவர் கவிதாபாண்டியன், கோட்டூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மணிமேகலை முருகேசன், ஒன்றிய செயலாளர் கே.பாலு மற்றும் ஏராளமான பொதுமக்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---



## தஞ்சை மூத்த தலைவர் வை.அறிவொளி படத்திறப்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் வை.அறிவொளி படத்திறப்பு மே 17 அன்று தஞ்சையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி.மகேந்திரன் தோழர் அறிவொளியின் படத்தை திறந்து வைத்தார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் த.லெனின், ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், சிபிஐ மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்ரமணியன், மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர், தெரு வியாபார தொழிலாளர் சங்க செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சிறுவனாக இருந்த வை.அறிவொளி தலைமறைவாக இருந்து செயல்பட்ட சிவராமன், ஆறுமுகம், இரணியன் உள்ளிட்ட தோழர்களுக்கிடையே கடித பரிமாற்றத்திற்கு பேருதவியாக செயல்பட்டுள்ளார். தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த தலைவர்கள் தமிழ் மேல் கொண்ட பற்றால் அனைவருக்கும் தமிழ் பெயர் வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர். தியாகி சிவராமன் தான் தனது இயற் பெயரை மாற்றி அறிவொளி என தனக்கு பெயர் வைக்கப்பட்டதாக அவரே தனது குறிப்புகளில் தெரிவித்துள்ளார். கட்சியின் பல்வேறு பொறுப்புகளில் திறம்பட செயலாற்றினார். தஞ்சை மாநகரில் பல்வேறு இயக்கப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.



## தோழர் கந்தசாமி நினைவு தினம் அனுசரிப்பு

தருமபுரி: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலக்குழு உறுப்பினரும்,மாவட்ட செயற்குழு உறுப்பினருமான ஏ.கந்தசாமி முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சி 19.52022 அன்று கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் அன்னாரின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வக்கீல் சி.மாதையன்,கே.மணி, நல்லல்ம்பள்ளி வட்டார செயலாளர் கிருரைர்ணராஜ், நிர்வாகிகள் பொன்னியப்பன், வக்கீல் பிரசாத், கருப்பன், முருகேசன், மணி, நவீன்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



### கீழ்பவானி பாசனத்திட்ட வாய்க்காலில்

## கான்கிரீட் தளம் அமைக்கக் கூடாது

### ஈரோடு வடக்கு மாவட்டக்குழு தீர்மானம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈரோடு வடக்கு மாவட்டக்குழு கூட்டம் கோபியில் மாவட்டக்குழு அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ப.மா.பாலமுருகன் தலைமையில் நடைபெற்றது.


மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநில நிர்வாகக்குழு முடிவுகள் குறித்தும் இன்றைய அரசியல் நிலை குறித்தும் உரையாற்றினார். மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன், மாநில கட்டுப்பாடு குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன், மாநிலக்குழு உறுப்பினர்கள் சு.மோகன்குமார், பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர் ஜி.வெங்கடாசலம் ,மாவட்ட பொருளாளர் பி.என்.ராஜேந்திரன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இடைக்குழு செயலாளர்கள், மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு விவாதித்தனர்.

ஈரோடு மாவட்டத்தின் நீராதாரமாக விளங்கும் கீழ்பவானி பாசனத்திட்ட பெரிய வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.அவ்வாறு கான்கிரீட் தளம் அமைத்தால் மாவட்டத்தின் பெரும்பகுதியில் உள்ள நிலங்களில் நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்படும்.வாய்க்கால் செல்லும் பகுதியில் உள்ள நீர் நிலைகள் வறண்டும்,கால்நடைகள், மரம் செடி கொடிகளுக்கு நீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.எனவே மாவட்டத்தின் நீராதாரத்தை பாதிக்கும் கான்கிரீட் தளம் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசும், நீர்வளத்துறையும் திரும்ப பெற வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மீனவர்களும் அரசியல் பிரதிநிதித்துவமும்: லிங்கன்

மீனவர்களின் வலிகள், வேதனைகள் குறித்து தொடர்ச்சியாக எழுதி வரும் லிங்கன் அவர்கள். மீனவர்களின் அரசியல் உரிமைகள் குறித்து. மீனவர்களும் அரசியல் பிரதிநிதித்துவம் என்ற இந்த நூலை எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் 38 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், 15 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மீனவ வாக்காளர்கள் விரிந்து பரந்த அளவில் உள்ளனர். ஆனால் இந்தத் தொகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிற மீனவர்களின் எண்ணிக்கையின் சதவீதம் மிக மிக குறைவாக உள்ளது என்பதை வேதனையோடு சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் நாடாளுமன்ற தேர்தல்களில் திமுக மற்றும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருவர் கூட, ஒருமுறைகூட வேட்பாளராக நிறுத்த வில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் குறைந்தது ஐந்து சட்டமன்ற தொகுதிகளிலாவது மீனவர்களை வேட்பாளராக அரசியல் கட்சிகள் நிறுத்த முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.




சென்னை ராயபுரத்தில் ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. ராயபுரத்தில் இருந்து பாண்டிச்சேரிக்கு இடையிலுள்ள எங்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களே கிடையாது. இந்தியாவில் மீன்பிடி தொழில் மூலமாக அந்நிய செலாவணியாக மத்திய அரசுக்கு 60,000 கோடியும், மாநில அரசுக்கு 4,000 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. மீனவர்கள் ஈட்டித்தரும் அந்நிய செலாவணி மூலம் கிடைக்கும் வருவாயில் முக்கால் பங்கை அரசு எடுத்துக்கொள்கிறது. கால் பங்கு தான் அரசின் வரவு செலவு திட்டத்தில் மீனவர்களுக்கான திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறது.

மீனவர்களின் வாழ்க்கை முறையிலிருந்து அவர்கள் வேட்டை பழங்குடி யினர் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். எனவே, அவர்களை பழங்குடி யினர் பட்டியலில் இணைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமிழக மீனவர்களின் உரிமை சார் பிரச்சினைகளை பேசுபொருளாக்கி, மீனவர்கள் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டக்களத்தில் ஒரு படிக்கல்லாக இந்நூலை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே அனைவரும் இந்நூலை வாங்கி ஆதரிக்க வேண்டுகிறோம்

– சமரன்


**நூலாசிரியர் : லிங்கன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ் 16, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14**
**பக்கங்கள் : 80 விலை: ரூ.70**

## நூல் நயம்

# மக்களாட்சி என்பது சடங்குகளின் தொகுப்பு

பிரண்ட்லைன் பத்திரிகையில் வெளிவந்த தாரிக் அலி அவர்களின் நேர்காணலில், ஒரு தெளிந்த, தீர்க்கமான அமைதியோடு பிரச்சனைகளின் அடி ஆழங்களுக்குள் ஒளி பாய்ச்சுகிறார். அந்த நேர்காணலின் தொகுப்பே.மக்களாட்சி என்பது சடங்குகளின் தொகுப்பு என்னும் இந்நூல் .

''ஒப்புதல்களில் உற்பத்தி'' என்னும் வருடங்களிலிருந்து ''மறுப்பு களின் உற்பத்தி '' என்னும் வருடங்களை நோக்கி நாம் நகர்ந்து விட்டோம் ஒப்புதல்களின் உற்பத்தி என்பது போல அது புகழ் அடையாமலும், வெற்றிகரமாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம் அது இருந்துகொண்டிருக்கிறது என பத்திரிகைகளின் இருப்பு குறித்து விவரிக்கிறார்.




தாரிக் அலி சர்வதேச அளவில் நன்கு அறியப்பட்ட சமூக அறிவு ஜீவி, எழுத்தாளர் மற்றும் அரசியல் செயல்பாட்டாளர், பிரிவினைக்கு முந்தைய இந்தியாவில் 1943ல் பிறந்தார் தாரிக் அலி. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். அவர் அங்கு மாணவர் சங்க தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டவர். அந்த காலகட்டத் திலிருந்தே அவர் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்பாளராக தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்

வியட்நாம் மீதான அமெரிக்காவின் போருக்கு எதிரான.பொது சமூகங்களின் கூட்டமைப்பில் மிக முக்கியமான ஆளுமைகளில் ஒருவராக விளங்கினார். ஒரு சிறந்த நேர்காணல் என்பது நேர்காணல் நடத்துபவர்களும், நேர்காணல் தருபவரும் வெறுமனே அவர்கள் தெரிந்து வைத்திருக்கும் விடயங்களை பொதுவெளியில் ஒப்பிப்பது வழியாக அவர்களது அறிவுஜீவி தன்மையை நிறுத்திக் கொள்வதல்ல. அவர்கள் பேச வந்த கருப்பொருள் தொடர்பாக துல்லியமான,விவரங்களுடன் சமநிலை குலையாமல், மிகுந்த உண்மைத் தன்மையுடன், ஒரு முழுமையான விசாரணை வழியாக அதனதன் நிறை குறைகளை எடுத்துச் சொல்வதன் மூலம், ஒரு நேர்மையான,அமைதியான தீர்வை நோக்கி மக்களை சிந்திக்கத் தூண்டுவதாக நேர்காணல் அமைய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சமூக நோக்குடைய நேர்காணல் தான் தாரிக் அலி அவர்களின் நேர்காணல். இந்த நேர்காணல் தற்போது புத்தக வடிவில் நம்முன் இருக்கிறது. எனவே இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர் : தாரிக் அலி**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 70 விலை: ரூ.60**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்



# நேட்டோ அமைப்பில் பின்லாந்து மற்றும் ஸ்வீடன்

பிப்ரவரி 24 முதல் உக்ரைனில் ரஷ்ய ராணுவத் தாக்குதல் தொடர்ந்து வரும் சூழலில், பின்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய இரு நாடுகள் நேட்டோவில் இணைய விண்ணப்பித்துள்ளது சர்வதேச அளவில் உற்று நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

பின்லாந்து மற்றும் ஸ்வீடன் நேட்டோவில் சேருவது குறித்து துருக்கி சாதகமான கருத்து கொண்டிருக்க வில்லை என்று கூறிய துருக்கி நாட்டு அதிபர் எர்டோகன், தடை செய்யப்பட்ட குர்திஷ் தீவிரவாத சக்திகளை இவ்விருநாடுகளும் ஆதரிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

1952ஆம் ஆண்டில் துருக்கி நேட்டோ அமைப்பில் சேருவதற்கு ஒப்புதல் வழங்கியதன் மூலம் அந்நாட்டின் அப்போதைய ஆட்சியாளர்கள் தவறிழைத்துவிட்டார்கள் என்று அவர் கூறியுள்ளார். இவ்விரு நாடுகளும் நேட்டோ அமைப்பிற்கு நீண்ட காலமாக ஒத்துழைப்பு நல்கி வருவதால், அந்த அமைப்பில் இரு நாடுகளும் விரைவில் சேர்ந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் நாட்டிற்கு போர் விமானங்கள் கொடுத்து உதவி வரும் துருக்கி, மேற்குலக நாடுகளோடு இணைந்து ரஷ்யா மீது தடைகள் விதிக்க வில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இருநாடுகளுடனும் நல்லுறவு கொண்டிருக்கும் துருக்கி இருநாடுகளுக்கும் இடையே தற்போது நடைபெற்று வரும் ராணுவ மோதல்களை முடிவிற்கு கொண்டு வர முயன்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் 200 ஆண்டுகளாக ராணுவ அணிசேரா கொள்கையைக் கொண்டிருந்த ஸ்வீடன் நாடும் நேட்டோவில் சேர முடிவு செய்துள்ளது.

பின்லாந்து நாடு நேட்டோவில் உறுப்பு நாடாகச் சேரும் பட்சத்தில் ரஷ்யாவுடனான பின்லாந்தின் உறவு மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகும் என்று ரஷ்ய அதிபர் விளா திமிர் புடின் எச்சரித்துள்ளார்.

இது குறித்து கிரெம்ளின் விடுத்துள்ள அறிக்கையில், பின்லாந்து நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏதும் இல்லாத நிலையில், பின்லாந்து பாரம்பரியமாகப் பின்பற்றி வரும் ராணுவ நடுநிலை கொள்கையைக் கைவிடுவது தவறானதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

உக்ரைன் போர்:

# அமெரிக்காவின் 40 பில்லியன் டாலர் ராணுவ உதவி

ரஷ்யா – உக்ரைன் இடையிலான ராணுவ மோதலில் உக்ரைனுக்கு முழு ஆதரவளிப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ ஃபிடன் உறுதியளித்திருந்தார். அதன்படி, 40 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ராணுவ உதவிக்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், அமெரிக் காவின் பாதுகாப்பு மற்றும் வருங்கால நலன்களும் பாதுகாக்கப்படும் என்று கூறப்படுகிறது. உக்ரைனுக்கு சீரான ஆயுத வழங்களையும், பொருளாதார உதவிகளையும் உறுதிப்படுத்தியுள்ள இச்சட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோ ஃபிடன் கடந்த 21ஆம் தேதி அன்று கையெழுத்திட்டுள்ளார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள 40 பில்லியன் டாலரில், ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக சுமார் 6 பில்லியன் டாலரும், உக்ரைன் நாட்டு அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்திட, மனித நேய அடிப்படை யிலான உதவிகள் ஆகியவற்றுக்காக 9 பில்லியன் டாலரும் ஒதுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலிய தேர்தல்:

# தொழிலாளர் கட்சி வெற்றி



புதிய பிரதமராக அந்தோனி அல்பெனிஸ் பொறுப்பேற்கிறார்

ஆஸ்திரேலியாவில் ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி பொறுப்பில் நீடித்து வந்தது. இந்நிலையில், அண்மையில் நடைபெற்ற தேர்தலில், இடதுசாரி சார்பு சிந்தனை கொண்ட தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளது. மேலும், புதிய பிரதமராக அந்தோனி அல்பெனிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு ஆஸ்திரேலி யாவில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இதனை எதிர்கொள்ள அதிக நிதி ஒதுக்கீடு மற்றும் வலுவான ஒரு சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பை உரு வாக்க இருப்பதாகத் தொழிலாளர் கட்சி உறுதியளித்துள்ளது.

குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திடவும் அக்கட்சி திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

மக்களின் ஜனநாயக உரிமைகள் மீதான ஆளும் வர்க்கத்தின் போர்:

# எதிர்த்து முறியடித்திட தொழிற்சங்க அமைப்புகளை பலப்படுத்துவோம்

மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தின் மீதான ஆளும் வர்க்கத்தின் போரை எதிர்த்து முறியடித்திட, சிவில் உரிமை செயல்பட்டாளர்கள், இனவெறிக்கு எதிரானவர்கள் மற்றும் இதரப் போராட் டக் குழுக்களை சேர்ந்தவர்கள் தொழிற் சங்க அமைப்புகளில் இணைந்து வெகுமக்கள் இயக்க அமைப்புகளை பலப்படுத்த வேண்டும் என்று மார்னிங் ஸ்டார் நாளிதழின் ஆசிரியரான பென் சாகோ அறைகூவல் விடுத்துள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் எதேச்சதி காரப் போக்கை உறுதிப்படுத்துவம் வகையில் இங்கிலாந்து அரசியின் கருத்துகள் அமைந்துள்ளதாக பிரிட் டன் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவில் பேசிய பென் சாகோ கூறி யுள்ளார்.

அகதிகள் மற்றும் போராட்டக்காரர் கள் மீது அடக்குமுறைகளைக் கட்ட விழ்த்துவிட ஏராளமான அதி காரங் களை, காவல்துறைக்கும், விசா ரணை அதிகாரிகளுக்கும் நீதிமன் றங்களுக்கும் முன்பே அளிக்கப்பட் டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், புதிய அடக்குமுறை நடவடிக் கைககள் திட்டமிடப்படுவதாக எச்ச ரித்துள்ளார்.

**பென் சாகோ அறைகூவல்!**



பிரிட்டன் உள்துறை செயலர் பிரீத்தி பட்டேல் காவல்துறையின ருக்கு டேசர் ஆயுதங்களை அதிக அளவில் வழங்குவதையும், இனவெறி அடிப்படையில் தவறாக பயன்படுத்த வாய்ப்புள்ள, இடைமறித்து சோதனை செய்வதற்கான அதிகாரங்களை வழங் குவதையும் வலியுறுத்தி வருகிறார் என்று அவர் அரசியல் குழுவில் பதிவு செய்துள்ளார்.

மக்களின் வாழ்வாதார நெருக்க டிகள் தீவிரமாகி வரும் இந்தச் சூழ லில், காவல்துறையின் மீது பொது மக்கள் முற்றாக நம்பிக்கை இழந் துள்ள நிலையில், அரசாங்கத்தின் இது போன்ற புதிய சூழ்ச்சித் திட்டங்கள் எதேச்சையானவை அல்ல என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலை இழப்புகள், விலை உயர்வு மற்றும் பொதுச் சேவைகள் குறைப்பு ஆகியவற்றிற்கு எதிராகப் போராடி வரும் தொழிற்சங்க அமைப்புகள் மீது அரசாங்க ஆதரவாளர்களும், வலதுசாரி ஊடகங்களும் திட்டமிட்டு பிரச்சார தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

வலதுசாரி சக்திகளிடமிருந்து நமது கருத்துரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய தேவையை, உக்ரைன் போரின் போது மேற்கொள்ளப்பட்ட அதிகப்படியான பத்திரிகை தணிக்கை நமக்கு எடுத்துரைப்பதாக பென் சாகோ எடுத்துரைத்துள்ளார்.

ஸ்வீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகளையும் இணைத்துக் கொண்டு நோட்டோ அமைப்பு விரிவு படுத்தப்படுவதை பிரிட்டன் கம்யூ னிஸ்ட் கட்சியின் அரசியல் குழு கடுமையாக எதிர்க்கிறது. இந்த நடவ டிக்கை ஆர்டிக் பிராந்தியத்தை ஒரு ராணுவ மோதல் நடக்கும் பிராந்தியமாக மாற்றிவிடக்கூடும் என்பதோடு, பூமண் டலத்தின் சுற்றுச் சூழல் நலனுக்கும் கேடு விளைவிப்பதாகும் என்று அரசி யல் குழு எச்சரித்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் நேட்டோவின் ராணுவ மயமாக்கலை கண்டித்திடாமல், அமைதியாக இருந்துவரும் தொழி லாளர் கட்சி எம்.பி.க்களின் அரசியல் நிலை வருத்தமளிப்பதாக பிரிட்டன் கம்யூனிஸ்ட்கள் கருத்து தெரி வித்துள்ளனர்.

## கலை இலக்கியப் பெருமன்றத்தின்

# ஜனன நோக்கத்தை நிறைவேற்ற சபதமேற்போம்!



# கே.சுப்பராயன் எம்.பி. முழக்கம்

சாத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில மாநாட்டை தொடக்கி வைத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் பேசினார். அவருடைய உரையில்:

“மக்களுக்காக மெழுகுவர்த்தியாய் தன்னையே உருக்கி கொண்ட உத்தமர் ஜீவாவால் தொடங்கப்பட்டதுதான் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம். அவர் தேர்தலில் நின்ற போது மக்களால் தோற்கடிக்கப்பட்டார். எதனால் இது நிகழ்ந்தது என்பதனை சிந்திக்க வேண்டிய அவசியம் தொடர்ந்து அன்றும் இன்றும் நீடிக்கிறது. கலை கலைக்காகவே, இலக்கியம் என்பது பொழுது போக்குவதற்கான கருவி என்று உருக் குலைக்கப்பட்ட காலத்தில் தோன்றியது தான் கலை இலக்கிய பெருமன்றம்.

கலையும் இலக்கியமும், தான் நேசிக்கிற கருத்தை மக்களின் மனதைப் பண்படுத்துகிற கருவியாக பொருத்தப்பட வேண்டும். கலையும், இலக்கியமும் மக்களுக்காக என்ற நோக்கத்திற்காக தோற்றுவிக்கப்பட்டது தான் கலை இலக்கியப் பெருமன்றம்.

செறிவூட்டப்பட்ட மகத்தான காரல் மார்க்ஸின் சிந்தனைகள் கலை இலக்கிய உலகில் சரியாக அடையாளப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. சமூகத்தை மிகச்சரியாக அடையாளம் காட்டிட ஞான விளக்காக மார்க்ஸின் சிந்தனைகள் அமைந்தன.. இதன் விளைவாக தோன்றியதுதான் தொலைநோக்கு பார்வை கொண்ட தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம். இதன் ஜனன நோக்கம் என்ன? இந்த அமைப்பில் அங்கம் பெற்றுள்ளவர்கள் இதை தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் மிகச்சரியாக பொருத்தி போர்த் தந்திரங்களை உருவாக்குவதும், தாக்குதலை முறியடிப்பதும் மாநாட்டின் நோக்கம். நிகழ்காலத்தின் சக்திகளையும், சவால்களையும் சந்திக்கின்ற உலைக்களம்.

சுவாசிக்க காற்று இல்லாமல் மனிதனால் உயிர்வாழ முடியாது. தண்ணீர், உணவு முதலியவற்றை சேமித்து வைத்துக்கொள்ள முடியும். அவரவர் தேவைக்கு காற்று எவ்வளவு சுவாசிக்க முடியுமோ அந்த காற்றை சேமித்து வைத்துக்கொள்ள முடியாது. மனிதகுலம் படைத்துவிட்ட செல்வங்கள் அத்தனையையும் பொதுவிற்கு வரவேண்டும். அவர்கள் தேவைக்கு ஏற்ற செல்வங்களை சமூகத்திற்கு கொடுக்க வேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் சமூக அமைப்புதான் பொதுவுடமை.

இதற்கான போராட்டங்கள் பல்வேறு துறைகளில் நடைபெறுகின்றன.. பண்பாட்டுத் துறையில் போராடுகின்ற ஒரு களம்தான் கலை இலக்கியப் பெருமன்றம். இது பத்தோடு பதினொன்று அல்ல. பெரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு.

தற்போது உற்பத்தி பொது அடிப்படையில் சமூகத்தில் இல்லை. உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மனிதர்களுக்காக இல்லை. முதலாளித்துவத்தின் ஒரே குறி லாபம்தான். மனிதத் தேவைகள் அனைத்தும் தகர்க்கப்படுகின்றன. மனிதத் தேவைகளை பூர்த்தி செய்யாத இந்த சமூக அமைப்பு தகர்க்கப்பட வேண்டும். மனிதனின் தேவைக்கு பயன்படாத எந்த ஒன்றையும் காலம் உருத்தெரியாமல் அழித்து தூக்கி எறியும்.

தேங்கிக் கிடக்கும் குட்டை அல்ல வரலாறு. மேல்நோக்கி செல்லுவதே வரலாறு. வரலாறு ஒரு போதும் பின்னோக்கி செல்லாது. முன்நோக்கித்தான் செல்லும் என்ற உண்மை ஆழ்ந்து பரிசீலித்தால் கண்டறிந்து கொள்ள முடியும். எனவே வர்ணாஸ்ரமம் சாதிக்க முயலுகின்ற தீமைகள் இப்பொழுதும் தொடர்கின்றன.

தீண்டாமையும் பெண்ணடிமையும் இரண்டு விஷத் தீமைகள். இன்றைய தேவை ஜனநாயக அரசியல் அடையாளம். உண்மையில் ஜனநாயகம் உள்ளதா? பிற்படுத்தப்பட்ட பிற ஜாதி மக்கள் மதிக்கப்படுகிறார்களா? கருத்து சுதந்திரம் உள்ளதா? சமநீதி அடுத்தக்கட்டம்.

ஓட்டுக்கு பணம் தருவதும் வாங்குவதும் அடித்தட்டு மக்களின் குற்றம் அல்ல. பணம் வைத்திருப்பவர்களின் செல்வாக்கு விரிகிறது. கலை இலக்கிய உலகில் அம்பலப்படுத்த வேண்டியது கலை இலக்கியப் பெருமன்றத்தின் கடமை.

மக்களிடம் பணத்தை கொடுத்து வாக்குகளை வாங்கி கமிஷன் வாங்கி பணத்தை மேலும் மேலும் கொள்ளையடிப்பதை அம்பலப்படுத்த வேண்டும். தற்கால மனித நேயமற்ற சமூகத்தை மாற்றி புதிய சமூகம் படைப்பதற்கு கலை இலக்கிய உலகில் செயல்படவேண்டும். மத, சாதிக் கட்டமைப்பு புரையோடிப் போயிருப்பதை அப்புறப்படுத்த வேண்டும். இது மாயாஜால அமைப்பு அல்ல, நிகழ்காலத்தில் சமூக மாற்றத்திற்கான நீண்ட போராட்டங்களை நாம் நடத்தியாக வேண்டும். கலை இலக்கிய உலகில் புதிய மாற்றங்களை காண திட்டமிடும் இம்மாநாடு வெல்லட்டும்! வாழ்த்துக்கள்.

# கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட மாநாடுகள்

**தஞ்சாவூர்:** தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தஞ்சை மாவட்ட மாநாடு பாப்பாநாடு தோழர் அறிவொளி நினைவரங்கில் நடைபெற்றது. ஒரத்தநாடு கிளைச்செயலர் கோ.ஆனந்தன் வரவேற்புரை ஆற்றினார். கல்வியாளர் இரா. கல்யாணசுந்தரம் தொடக்கவுரையாற்றினார். மாவட்டச்செயலர் முனைவர் ச.புகழேந்தி வேலை அறிக்கையை வாசித்தார். கௌரவத் தலைவர்களாக டாக்டர் மு.செல்லப்பன், டாக்டர் இரா.இளங்கோவன், டாக்டர் பா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், ஒருங்கிணைப்பாளராக சி.பாஸ்கர்,

தலைவராக சி.இராமலிங்கம், துணைத் தலைவராக முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, செயலாளராக முனைவர் அய்யாறு ச.புகழேந்தி, துணைச் செயலாளராக வல்லம் தாஜுபால், பொருளாளராக சு.பாலதண்டாயுதம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

பலகுரல் பாடகர் இந்துமணி மக்களிசைப்பாடகர் அ.ராசேந்திரன் குழுவினர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. நிறைவாக மாநிலப் பொதுச்செயலாளர் முனைவர் இரா.காமராசு மாநாட்டுப் பேருரையாறினார். முடிவில் மாவட்டப் பொருளாளர் சு.பாலதண்டாயுதம் நன்றியுரையாற்றினார்.

“வரும் கல்வியாண்டு முதல் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும்” என்ற மகத்தான திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வருக்கு இம் மாநாடு பாராட்டு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரசுப்பள்ளி மாணவர்களிடம் அதிகம் பெருகிவரும் ஒழுங்கீன செயல்களை கண்டறிந்து அவர்களை கலை, இலக்கியம் மூலம் பண்படுத்தி நெறிப்படுத்த அரசு தன்னூக்கம் தரவேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**சேலம்:** தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற சேலம் மாவட்ட 10வது சிறப்பு பேரவை, சேலம் சிறைத் தியாகிகள் அரங்கில் மாவட்ட தலைவர் பூமிபாலகன் தலைமையில் நடைபெற்றது.



தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற வைர விழா குறித்து மாநில பொருளாளர் ப.பா. இரமணி விளக்கவுரையாற்றினார். மகாகவி பாரதி நூற்றாண்டு நினைவு குறித்து நாவலாசிரியர் ரவீந்திரபாரதி கருத்துரை வழங்கினார். எழுத்தாளர் ப.பரமசிவம், கவிஞர் நாணற்காடன், தருமபுரி மாவட்ட செயலாளர் கே.சின்னக் கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கலை இலக்கிய பெருமன்ற காலாண்டு சிற்றிதழ் குறித்து கே.சுவாமிநாதன் ஆய்வு சொற்பொழிவாற்றினார். மாவட்ட செயலாளர் கே.வி.ராஜேந்திரன் வேலையறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையை முன் வைத்துப் பேசினார்.

மாவட்ட தலைவராக எழுத்தாளர் பூமிபாலகன், கௌரவதலைவராக கே.சுவாமிநாதன், மாவட்ட செயலாளராக கே.வி.ராஜேந்திரன், மாவட்ட பொருளாளராக கோ.மணிவண்ணன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

செம்மொழி வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு, மிகுந்த பாரபட்சத்துடன் நடந்து கொள்கிறது. 2020 வரையிலான ஆண்டுகளில் சமஸ்கிருதத்திற்கு ரூ.643.84கோடி ஒதுக்கப்பட்ட அதே நேரத்தில், செம்மொழி தமிழாய்விற்கு ரூ.22 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது வண்மையாக கண்டிக்கத்தக்கது.

மதுரை மருத்துவக் கல்லூரியில் வழக்கமான உறுதிமொழிக்கு மாறாக, சமஸ்கிருத உறுதிமொழி ஏற்கப்பட்ட நிகழ்ச்சி தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னை ஐ.ஐ.டி.யில் தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்படுவதில்லை. எதிர்வரும் காலத்தில் தாய்த் தமிழை இழிவு செய்யும் இதுபோன்ற நிகழ்வுகளை தடுக்க தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பேரவை வலியுறுத்துகிறது.

சுதந்திர போராட்ட வீரர் இலக்கிய பேராசான் ப.ஜீவானந்தம் அவர்களுக்கு சேலம் டாக்டர் சுப்பராயன் சாலையில் உள்ள மகாகவி பாரதி சிலை அருகிலோ, அல்லது பொருத்தமான இடத்திலோ சிலை வைத்திட அனுமதி அளித்திட வேண்டும் என சேலம் மாநகராட்சி நிர்வாகத்தையும், தமிழக அரசையும் சேலம் மாவட்ட பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**கிருஷ்ணகிரி :** கிருஷ்ணகிரி மாவட்டப் பேரவைக் கூட்டம் கிருஷ்ணகிரி நகர கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. பாடலரங்கில் பாலசுப்பிரமணியம், மாரப்பன் ஆகியோர் பாடல்களை பாடினர். கவியரங்கில் புலவர் கேசவன், கவிஞர் பரணிக்குமார், கவிஞர் தருமன் ஆகியோர் கவிதை பாடினர். நிகழ்விற்கு முனைவர் சங்கர் தலைமை தாங்கினார்.

பொறுப்பாளர் தேர்வு நடைபெற்ற பிறகு சிபிஐ நகர செயலாளர் உபேத், ஏஐடியூசி மாவட்ட தலைவர் முனியன், கணபதி இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டத் தலைவராக புலவர் கேசவன், மாவட்ட செயலாளராக பேராசிரியர் கோ.சீனிவாசன், பொருளாளராக பாலசுப்பிரமணியம், மதிப்புறு தலைவர்களாக மாரப்பன், முதுமுனைவர் இரா.சங்கர், துணைத் தலைவர்களாக கோ.ஜெயக்குமார், முருகேசன், துணைச் செயலாளர்களாக கவிஞர் பரணிக்குமார், மாதேசம்மாள் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**திருப்பத்தூர் :** திருப்பத்தூர் மாவட்ட பேரவை கூட்டம் திருப்பத்தூர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் பொதுச் செயலாளர் இரவீந்திரபாரதி, மாநில குழு உறுப்பினர் கணபதி இளங்கோ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தலைவராக இரா.முல்லை, துணை தலைவர்களாக புலவர் சகாதேவன், எம்.சுந்தரேசன், இரா.ஆனந்தன், செயலாளராக க.ஆனந்தன், துணை செயலாளர்களாக லோகநாயகி, டி.சங்கர், டி.பெருமாள், இரா.அண்ணாமலை, பொருளாளராக ஜெயபிரகாஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.














JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 28.05.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57








# திருமண வாழ்த்து

வாழ்த்துகிறோம் நாங்கள்...

உள்ளங்கள் இணைந்த இல்லம்
என்றும் இனிக்கும் வெல்லம்,

வானும் நிலவும் போல,
மலரும் மணமும் போல
கரும்பும் சுவையும் போல
இணைந்து வாழ வேண்டும்,

இன்பம் மட்டும் கூட்டி,
இதய இராகம் மீட்டி, எந்த
நிலையின் போதும் மாறா
அன்பை மட்டும் ஊட்டி,

வாழ வேண்டும் நீங்கள்
வாழ்த்துகின்றோம் நாங்கள்,

தமிழும் சுவையும் போல,
கவியும் இசையும் போல,
குழந்தை செல்வம் பெற்று
குதுகுலமாய் வாழ
வாழ்துகிறோம் நாங்கள்,
வாழ வேண்டும் நீங்கள்.

கொட்டும் மழையாய்
பூ மழை பொழிய
அத்தனை தோழர்களும்
ஒருங்கே வாழ்த்த...

மகிழ்வாய் அமையட்டும்
உங்கள் வாழ்வு...

**மணமக்கள்**

**Dr.K.ரூபின்குமார்** MBBS., FAM.,MD.,

**பூஜா(எ)R.P.ஹர்ஷினி** B.Sc., CDF., MBA.,

**நாள்-01.06.2022**
**காலை-9.00 மணி**
**ஸ்ரீசெந்தூர் மஹால்**
**ஆட்டையாம்பாளையம் அவிநாசி**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

## கோயமுத்தூர்

# POOJA PROMOTERS & COMPANIES

## Staffs & Workers

## Coimbatore


Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.